

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 179 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 26 – வெள்ளிக்கிழமை 09 பிப்ரவரி 2024 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 179 : Thiruvalluvar Year - 2055 - Thai 26 - Friday 09 February 2024 - Chennai 16 Pages ₹ 5.00


## ஒன்றிய மோடி அரசு மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய

# நிதி உரிமைப் பறிப்பு; ஆக்சிஜனை நிறுத்துவதற்குச் சமம்!

### கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் டெல்லியில் நடைபெற்ற போராட்டத்தை ஆதரித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! ஒன்றிய அரசுக்கு எச்சரிக்கை!

**சென்னை, பிப். 9-**

**ஒன்றிய அரசின் பாரபட்சமான நிதி ஒதுக்கீட்டை கண்டித்தும், மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சி கோட்பாட்டை பாதுகாக்கும் வகையிலும், தில்லி, ஐந்தர்மந்தரில் கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில் நடைபெறும் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாக உரையாற்றினார்.**

**அதுபோது அவர் உரையாற்றுகையில் மாநிலங்களுக்கு வழங்க வேண்டிய நிதி உரிமையை ஒன்றிய அரசு பறிப்பது ஆக்சிஜனை நிறுத்துவதற்குச் சமம் என எச்சரித்தார்.**

முதல்வர் ஆற்றிய உரை வருமாறு:–

கேரள மாநிலத்தின் முதலமைச்சர் சகாவு பினராயி விஜயன் அவர்களே!

சி.பி.ஐ.எம் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி அவர்களே!

பிரியப்பட்ட கேரள மக்களின் பிரதிநிதிகளே!

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தமிழ்நாட்டு மக்கள் சார்பில் என்னுடைய வணக்கம்!

இந்த போராட்டத்தில் பங்கெடுக்க சகாவு பினராயி விஜயன் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

**டெல்லி வந்து போராட்டம் நடத்த வைத்த மோசமான அரசியல் சூழலால் வருந்துகிறேன்!**

நான் முதலீடுகளை ஈர்ப்பதற்காக



ஸ்பெயின் நாட்டிற்கு பயணம் மேற்கொண்டு, நேற்றுதான் தாயகம் திரும்பினேன். அதன் காரணமாக, என்னால் இந்தப் போராட்டத்தில் பங்கெடுக்க முடியவில்லை. எங்களுடைய கட்சியின் சார்பாக அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாக ராஜன் மற்றும் எம்.பிக்களை அனுப்பினேன்.

கேரளத்துல இருந்து மக்கள் பணியாற்ற வேண்டிய உங்களை டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்த வைத்த மிக மோசமான அரசியல் சூழலை நினைத்து வருத்தப்படுறேன்.

நேற்று கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தராமையா அவர்களும் டெல்லிக்கு வந்து போராட்டம் நடத்தி இருக்கிறார்.

இன்று தி.மு.க.வை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களால் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. நிதிப் பகிர்வில் தங்களின் மாநிலத்திற்கு பாரபட்சம் காட்டப்படுவதற்கு எதிராக எல்லா மாநிலங்களும் போராட்டம் நடத்துகிற சூழலுக்கு தள்ளப்பட்டுள்ளது. இதற்குக் காரணமான ஒன்றிய பா.ஜ.க. அரசு மக்கள் மன்றத்தில் பதில் சொல்ல வேண்டிய நாள் வெகு தொலைவில் இல்லை.

**பிரதமர் மோடி மாநிலங்களை முனிசிபாலிட்டி போல் நினைக்கிறார்!**

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்கள் பிரதமராக இருந்தபோது, தமிழ்நாட்டின் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களிடம் ஒரு கருத்தை சொன்னார்.

“தமிழ்நாட்டின் கோரிக்கைக்காக நீங்கள் ஒரு முறை கூட டெல்லிக்கு வரத் தேவையில்லை. அப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்க மாட்டேன், தமிழ்நாட்டில் இருந்தபடியே சொன்னால் போதும், நிறைவேற்றித் தருவேன்” என்று சொன்னார். மாநிலங்களை மதிக்கிற, மாநில மக்களையும் மதிக்கின்றவர்களாக முந்தைய பிரதமர்கள் இருந்தார்கள். ஆனால், பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் – மாநிலங்களை முனிசிபாலிட்டிகளை போல நினைக்கிறார்.

மாநிலங்கள் இருப்பதோ – மாநிலங்களுக்கு முதலமைச்சர்கள் இருப்பதோ – அவருக்குப் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் குஜராத் மாநில முதலமைச்சராக இருந்து, அதன்பிறகு பிரதமர் ஆனவர் அவர்.

**மோடி பிரதமரானதும் மாநில உரிமைகளைப் பறித்ததுதான் முதல் செயல்!**

ஆனால், பிரதமர் ஆனதும் அவர் செய்த முதல் செயல், மாநிலங்களின் உரிமையைப் பறித்தது

> **“மாநில அரசிடம் தான் எல்லா அன்றாடத் தேவைகளையும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதற்கு பா.ஜ.க. அரசு முட்டுக்கட்டை போடுகிறது. இதை எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாக வேண்டும். ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் நம்முடைய ஒற்றுமையின் மூலமாக, இந்திய அரசைக் கைப்பற்றி, பாசிச பா.ஜ.க.வுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!”**

தான். நிதி உரிமையை பறித்தார்; கல்வி உரிமையை பறித்தார்; மொழி உரிமையை பறித்தார்; சட்ட உரிமையை பறித்தார்.

மாநிலங்களின் நிதி உரிமையை பறிப்பது ஆக்ஸிஜனை நிறுத்துவதற்குச் சமம். அதைத்தான் பா.ஜ.க. அரசு செய்து வருகிறது. இது ஏதோ எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களுக்கு மட்டும் நடக்கிறது என்று பா.ஜ.க. முதலமைச்சர்கள் நினைக்க வேண்டாம்.

நாளை உங்கள் மாநிலங்களுக்கும் இதே கதிதான் என்று எச்சரிக்கையாகவே சொல்ல விரும்புகிறேன். பா.ஜ.க அரசின் இந்த எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக தமிழ்நாடு அரசு உறுதியோடு போராடி வருகிறது. அதே பாணியில், கேரள முதலமைச்சர் காம்ரேட் பினராயி விஜயன் அவர்களும் போராடி வருகிறார்.

ஜி.எஸ்.டி வரி விதிப்புக்குப் பிறகு மாபெரும் நிதி நெருக்கடிப் பேரிடரை எல்லா மாநில அரசுகளும் சந்திக்கிறோம்.

**மக்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்வது மாநில அரசுகள்தான்!**

அனைத்து மாநில அரசுகளையும் ஒன்றிணைத்து ஆளக்கூடிய ஒன்றிய அரசு, இந்த நிதி நெருக்கடியை நீக்குகிற வகையில் செயல்பட வேண்டும்.

ஆனால் அப்படி செயல்படவில்லை. மாநிலங்கள் வளர்ச்சிப் பணிகளுக்காக கடன் வாங்குவதற்கு கூட தடையை ஏற்படுத்துகிறார்கள். மாநிலங்களுடைய பொதுச் செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான பொதுக் கடன் என்பது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, மாநில சட்டமன்றத்தின் தனிப்பட்ட அதிகார வரம்பிற்கு உட்பட்டது. மக்களுக்கு எல்லா நன்மைகளையும் செய்வது மாநில அரசுகள்தான்.

மாநில அரசிடம் தான் எல்லா அன்றாடத் தேவைகளையும் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், அதற்கு பா.ஜ.க. அரசு முட்டுக்கட்டை போடுகிறது. இதை எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தாக வேண்டும்.

‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகள் நம்முடைய ஒற்றுமையின் மூலமாக, இந்திய அரசைக் கைப்பற்றி, பாசிச பா.ஜ.க.வுக்கு முற்றுப்புள்ளி வைப்போம்!

**கூட்டாட்சி இந்தியாவை நாம் உருவாக்குவோம்!**

அனைத்து மாநிலங்களையும் மதிக்கும் – சமமாக நடத்தும் கூட்டாட்சி இந்தியாவை உருவாக்குவோம்!

காம்ரேட் பினராயி விஜயன் அவர்களுக்கும் கேரள அமைச்சர்களுக்கும் வாழ்த்துகள். உங்கள் எண்ணம் விரைவில் நிறை வேறும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலி மூலம் உரையாற்றினார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலினின் 33 மாத ஆட்சியில் பல்வேறு

# புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம் ரூ.8.65 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு!

### ஏறத்தாழ 30 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கம்! ஒரு மாபெரும் தொழில் புரட்சிக்கு அடித்தளம்!

**சென்னை, பிப். 9-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 33 மாத ஆட்சியில் பல்வேறு ஒப்பந்தங்களின் மூலம் ரூ.8,65 இலட்சம் கோடி முதலீடுகள் ஈர்ப்பு ! ஏறத்தாழ 30 இலட்சம் வேலைவாய்ப்புகள் உருவாக்கம் ! ஒரு மாபெரும் தொழில் புரட்சிக்கு அடித்தளம்! உருவாக்கப்பட்டுள்ளது.**

இது குறித்து தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது: -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சென்னையில் வள்ளுவர் கோட்டம், தருமபுரியில் அதியமான் கோட்டம் எனத் தமிழ் வளர்க்கும் கோட்டங்களை அமைத்தார்கள்.

அதுபோல், முதலமைச்சர் அவர்கள் 2021 இல் பொறுப்பேற்றது முதல் இந்தியாவின் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் புதிய முதலீடுகளை ஈர்த்துத் தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளைப் புதிது புதிதாக அமைத்துத் தமிழ்நாட்டை ஒரு தொழில் கோட்டமாக உருவாக்கிடும் முயற்சியில் ஓய்வின்றி உழைத்து வருகிறார்கள்.

2030ஆம் ஆண்டுக்குள் தமிழ்நாடு 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி பெற்ற மாநிலமாகவும், இந்தியப் பொருளாதாரத்துக்கு மிக முக்கியப் பங்களிக்கிற மாநிலமாகவும் தமிழ் நாட்டை உயர்த்திடும் பெரும் இலட்சிய இலக்கை நிர்ணயித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசு முனைப்புடன் செயல்படுகிறது.

அதன் முதற்கட்டமாக, முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு என்ற பெயரில் சென்னை கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய நகரங்களில் நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாடுகள் மூலம் ரூ.1,90,803 கோடி ரூபாய்க்கான முதலீடுகள் ஈர்க்கப்பட்டு, 2,80,600 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக, ஐக்கிய அரபு நாடுகள், சிங்கப்பூர், மலேசியா, ஜப்பான், ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு 17 ஆயிரத்து 371 பேருக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துகிற வகையில், 7 ஆயிரத்து 441 கோடி ரூபாய் மதிப்பிலான முதலீடுகள் பெறப்பட்டன.

**உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு நம்பிக்கை!**

மூன்றாம் கட்டமாக, 2024 ஜனவரி 7, 8 ஆகிய நாட்களில் சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் தமிழ்நாடு அரசு நடத்திய உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் முன்எப்போதும் இல்லாத அளவாக, 6,64,180 கோடி ரூபாய் முதலீடுகளும், அவற்றின்மூலம் 14,54,712 பேருக்கு நேரடி வேலை வாய்ப்புகளும் 12,35,945 பேருக்கு மறைமுக வேலைவாய்ப்பும் என மொத்தம் 26, 90,657 வேலைவாய்ப்புகளுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக 2712024 அன்று புறப்பட்டு ஸ்பெயின் நாட்டிற்குச் சென்று அங்குள்ள பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், இன்வெஸ்ட் ஸ்பெயின் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆகியோரைச் சந்தித்து தமிழ்நாட்டிலுள்ள தொழில் வாய்ப்புகளையும், அரசு வழங்கும் சலுகை களையும், கிடைக்கும் திறன் வாய்ந்த மனித வளத்தையும் எடுத்துக்

> **“முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகி யுள்ளது. இது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.”**

கூறி, தமிழ்நாட்டில் தொழில் தொடங்கிட வருமாறு முதலமைச்சர் அவர்கள் அழைப்பு விடுத்தார் கள். அவற்றின் பயனாக ரூ.3,440 கோடி ரூபாய் அளவிற்குத் தொழில் முதலீடு களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**“நியூயார்க் டைம்ஸ்” பாராட்டு!**

தமிழ்நாடு குறித்தும், தமிழ்நாடு அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியையும், தமிழ்நாட்டின் பொருளாதார மேம்பாட்டையும் புகழ்ந்து உலக அளவில் முக்கியப் பத்திரிகையான ‘நியூயார்க் டைம்ஸ்’ செய்தி வெளியிட்டு பாராட்டியது.

‘ஆண்டுவாரி முதலீட்டாளர்கள் சந்திப்பு 2022 நடைபெற்றபோது ஆசிய ஓசியான மண்டலத்திற்கான சிறந்த முதலீட்டு நிறுவனத்திற்குரிய விருது தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது.

புதிய தொழில் முதலீட்டாளர்கள் ஒப்பந்தங்கள் செய்துள்ள நிலையில் தமிழ்நாட்டைப் பெரிய அளவில் தொழில்மயமாக்க அடுத்த 5 ஆண்டுகளில் 45,000 ஏக்கர் பரப்பளவில் நில வங்கி உருவாக்கப்படுகிறது. இதற்காக, சிப்காட் நிறுவனம் ஏறத்தாழ 33,489 ஏக்கர் நிலம் தெரிவு செய்துள்ளது. இதில், 22,941 ஏக்கர் நிலம் அரசின் நிருவாக அனுமதி பெற்று கையகப்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின், இதுவரை 44 தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 27 தொழிற்சாலைகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலமாக 74 ஆயிரத்து 757 இளைஞர்கள் மற்றும் மகளிர்க்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

**தமிழ்நாட்டில் அடுத்தடுத்து தொழிற்சாலைகள் உருவாக்கம்!**

இப்படித் தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்கள் செய்யப்படுவதுடன், ஒப்பந்தங்கள் தொழில் நிறுவனங்களாக உருப்பெறத் தேவையான நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்காக முதலமைச்சர் அவர்கள் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இந்த குழுவின் தொடர் நடவடிக்கைகளின் மூலம் பல தொழிற்சாலைகள் தமிழ்நாட்டில் அடுத்தடுத்து உருவாகும் வாய்ப்பு உள்ளது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய 33 மாத ஆட்சிக் காலத்தில் பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் வாயிலாக ரூபாய் 8.65 இலட்சம் கோடி முதலீடுகள் வருவதற்கான வாய்ப்பு ஏற்பட்டு, அதன் மூலம் ஏறத்தாழ 30 இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது. இது முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சிக்காலம் ஒரு மாபெரும் தொழிற் புரட்சிக்கான அடித்தளம் என்பதை வெளிப்படுத்துகிறது.

இவ்வாறு தமிழ்நாடு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 09-02-2024

# சாதனைப் பயணம்!

தமிழ்நாட்டின் வளத்துக்கும் நலத்துக்கும் மிகமிக முக்கியமான சாதனைப் பயணத்தை முடித்துவிட்டு வந்திருக்கிறார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அவருக்கு மனம் நிறைந்த நல்வாழ்த்துகளை முதலில் சொல்வோம்!

எட்டுநாட்கள் அரசு முறைப் பயணமாக ஸ்பெயின் சென்றார் முதலமைச்சர் அவர்கள். இதன் நோக்கம், தமிழ்நாட்டை நோக்கி தொழில்களை ஈர்ப்பது ஆகும். அந்த நோக்கத்துக்கு மாபெரும் பலன் கிடைத்துள்ளது. முதலமைச்சரின் பயணத்தின் பயனாக, 3,440 கோடி ரூபாய் அளவிற்கான முதலீடுகள் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஹபக் லாய்டு நிறுவனம் - 2,500 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. எடிபான் நிறுவனம் - 540 கோடி ரூபாய் முதலீடு செய்வதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. ரோக்கா நிறுவனமும் 400 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக உறுதியளித்துள்ளது.

இதனை மகிழ்ச்சியோடு அறிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், “தமிழ்நாடு குறித்தும், கழக அரசு குறித்தும் உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு உள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது” என்று சொல்லி இருக்கிறார்.

இந்தியாவில் எத்தனையோ மாநில அரசுகள் உள்ளன. அனைத்து மாநில அரசுகளும், அந்த மாநிலத்து முதலமைச்சர்களும் இதுபோன்று தொழில் முதலீடுகளைக் ஈர்ப்பதற்காக வெளிநாடுகளுக்குச் செல்வது இல்லை. சென்றாலும் இது போன்ற முதலீடுகள் குவிவது இல்லை. தமிழ்நாட்டுக்கு மட்டும் இப்படி வருகிறது என்றால் அதுதான் உன்னிப்பாகக் கவனிக்கத்தக்கது. அதனைத்தான் ‘நியூயார்க் டைம்ஸ்’ இதழ் எழுதி இருக்கிறது.

“இந்தியாவுக்கு மிகவும் திறமையை வெளிப்படுத்தக்கூடிய வகையான வேலைகள் தேவைப்படுகின்றன. தொழிற்சாலை வேலை தவிர வேறு வேலைகள் எதுவும் அங்கு இல்லை. கடந்த ஆண்டு, உலகின் அதிக மக்கள் தொகை கொண்ட நாடான சீனாவை இந்தியா முந்தியது. இந்தியாவின் உழைக்கும் வயதுடைய மக்களின் எண்ணிக்கை வேகமாக முன்னேறி வருகிறது. ஆனால் அந்த மக்கள் தொகை வீக்கத்தை நன்மையாக மாற்றுவது, இந்தியாவின் தொழிலாளர்களை அதிக உற்பத்தித் திறன் கொண்டவர்களாக மாற்றுவதாகும். இந்தியர்களில் பாதிப் பேர் சிறு விவசாயத்தையே நம்பியுள்ளனர்.

இந்தியாவில் முன்னோக்கிச் செல்லும் பாதையாக தமிழ்நாட்டின் பாதையைச் சுட்டிக்காட்டலாம். 7 கோடி மக்கள் வாழும் தமிழ்நாடு தற்போது தொழில் துறையில் வெற்றி பெற்று வருகிறது. இந்திய அரசாங்கம் 2021-ஆம் ஆண்டில் டெல்லி, நொய்டா போன்ற மாநிலங்களில் மின்னணு உற்பத்திக்கு மானியம் வழங்கத் தொடங்கியது. ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அந்த ஊக்கத்தொகை அவசியமாகக் கருதப்படவில்லை. ஒட்டுமொத்த இந்தியாவும் பயணிக்கும் பாதையைத் தவிர்த்து வேறு வழிகளில் தமிழ்நாடு பயணித்து வெற்றி பெற்று வருகிறது.” - என்று ‘நியூயார்க் டைம்ஸ்’ எழுதி இருக்கிறது.

தொலைநோக்குப் பார்வையுடன் முதலமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள்தான் இதற்கு முக்கியமான காரணம்.

பேராசிரியர் ஜெயரஞ்சனைத் துணைத் தலைவராகக் கொண்ட மாநிலத் திட்டக்குழுவை மாற்றி அமைத்தார். தமிழ்நாட்டுக்கான பொருளாதார ஆலோசனைக் குழுவையும் அமைத்தார். அது உலகம் பாராட்டும் குழுவாக அமைந்திருந்தது.

பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் - இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநராக இருந்தவர். எஸ்தர் டஃப்லோ அவர்கள் - உலகத்தின் உயரிய நோபல் பரிசு பெற்றவர். அரவிந்த் சுப்பிரமணியம் அவர்கள் - ஒன்றிய அரசின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக இருந்தவர். ஜான் ட்ரீஸ் அவர்கள் - பொருளாதார நிபுணர், அமர்த்தியா சென்னுடன் இணைந்து புத்தகம் எழுதியவர். எஸ்.நாராயணன் அவர்கள் - ஒன்றிய அரசின் நிதிச் செயலாளராக இருந்தவர். கடந்த 40 ஆண்டுகளாக பல்வேறு துறைகளைத் திறம்பட வழிநடத்தியவர். இக்குழுவே உலகளாவிய பாராட்டைப் பெற்றது.

**மாநிலங்களிடம் வரியை வசூல் செய்து மாநிலங்களுக்கு எதுவும் தராத ஒரு ஒன்றிய அரசின் கீழ் மாநிலமாக இருப்பதில் உள்ள நெருக்கடியை உணர்ந்து தொலைநோக்குப் பார்வையுடன் செயல்பட்டு வருகிறார் முதலமைச்சர். ஒன்றிய அரசு நிதியும் தரப்போவது இல்லை. புதிய திட்டங்களையும் வழங்கப் போவது இல்லை என்பதை உணர்ந்தே முதலமைச்சர் இயங்கி வருகிறார்.**

அறிவிக்கப்பட்ட ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனையைக்கூட கட்டாமல் வைத்துள்ளது பா.ஜ.க. அரசு. கடன் வாங்கக் கூட அனுமதிப்பது இல்லை. 37 ஆயிரம் கோடி ரூபாயை இரண்டு மாபெரும் இயற்கைப் பேரிடருக்காக தமிழ்நாடு கேட்டது. அதில் ஒரு பைசாகூட வரவில்லை. இந்த நிலையில் தமிழ்நாட்டை மேன்மைப்படுத்த வேண்டுமானால் என்ன செய்வது? உலகளாவிய பயணங்களின் மூலமாக முதலீடுகளை ஈர்ப்பதுதான் முக்கியமான வழியாகும்.

முதலீட்டாளர்கள் மாநாட்டை நடத்தி வருகிறார் முதலமைச்சர் அவர்கள். வணிகம் புரிதலை எளிதாக்கி வருகிறது அரசு. திறன்மிகு பணியாளர்களை உருவாக்குதல், தொழிலகங்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கிடையே இணைப்பினை ஏற்படுத்துதல், தொழிற்சாலைகளுக்கு ஏற்ற தொழிலாளர்களைத் தயார்படுத்துதல், இளைஞர்களின் திறனுக்கு ஏற்ற வேலைகளை உறுதி செய்தல் ஆகியவற்றில் கவனமாக இருக்கிறது தமிழ்நாடு அரசு.

**ஆட்சிப் பொறுப்பு ஏற்றவுடன்,**

**1) முதலாவதாக, தெற்காசியாவிலேயே, முதலீடுகளுக்குச் சிறந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்க வேண்டும். முதலீடுகள் மாநிலம் முழுவதும் பரவலாகவும் சீராகவும் மேற்கொள்ளப்பட வேண்டும்.**

**2) இரண்டாவதாக, 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்த வேண்டும்.**

**3) மூன்றாவதாக, உலகளாவிய முன்னணி தொழில் நிறுவனங்களை தமிழ்நாட்டினை நோக்கி வர வைத்திட வேண்டும்.**

**4) நான்காவதாக, உலகத்தின் மூலை முடுக்கிற்கெல்லாம், தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் (Made in Tamil Nadu) சென்றடைய வேண்டும். - என்ற இலக்கினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ‘தமிழ்நாடு தனிப்பாதையில் பயணிக்கிறது’ என்று நியூயார்க் டைம்ஸ் சொல்வது இதைத்தான்.**

இத்தகைய சாதனையை எட்டுவதற்கான சாதனைப் பயணமாக ஸ்பெயின் பயணத்தை நிகழ்த்திக் காட்டி விட்டு வந்திருக்கும் மாண்புமிகு முதலமைச்சரை வாழ்த்துவோம்.




நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையைக் கண்டித்து புதுடெல்லி, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. எம்.பி.க்கள், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் கறுப்புச் சட்டைப் போராட்டம் நடத்தினர். இதில் கூட்டணிக் கட்சிகளின் எம்.பி.க்கள் கலந்து கொண்டு கண்டன முழக்கமிட்டனர். நாடாளுமன்ற கழகக் குழுத் துணைத் தலைவரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

### நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு கண்டனம்

## நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. கறுப்புச் சட்டை போராட்டம்!

### கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் நடைபெற்ற போராட்டத்தில் கூட்டணிக் கட்சிகளும் பங்கேற்பு!

புதுடெல்லி, பிப். 9- நிதி ஒதுக்கீட்டில் ஒன்றிய அரசின் ஓரவஞ்சனைக்கு கண்டனம் தெரிவித்து, நாடாளுமன்ற வளாகத்தில் தி.மு.க. சார்பில் கறுப்புச் சட்டை போராட்டம் நடைபெற்றது.

ஒன்றியத்தில் பா.ஜ.க. ஆட்சியமைத்தது முதல் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டில் பாரபட்சம் காட்டி வருகிறது. பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதியும், எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்காமலும் ஓரவஞ்சனை செய்கிறது.

குறிப்பாக, தமிழ்நாட்டில் மிக்ஜாம் புயலால் ஏற்பட்ட பாதிப்புக்கு, ஒன்றிய அரசு நிவாரண நிதி அறிவிக்கவில்லை. இதேபோல், ஒன்றிய இடைக்கால பட்ஜெட்டிலும் சென்னை மெட்ரோ, மதுரை எய்ம்ஸ் உள்ளிட்ட திட்டங்களுக்கான உரிய நிதி ஒதுக்கீடு குறித்து அறிவிப்புகள் இடம் பெறவில்லை.

இதையடுத்து, ஒன்றிய அரசின் ஓரவஞ்சனையை கண்டித்து, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே கறுப்புச் சட்டை போராட்டம் நடத்தப்படுமென தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்.

அதன்படி, நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் கழக எம்.பி.க்கள் கறுப்புச் சட்டை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது, நிதி ஒதுக்கீட்டில் ஓரவஞ்சனையாக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

இப்போராட்டத்தில் கூட்டணிக் கட்சி எம்.பி.க்களும் கலந்து கொண்டு ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு தங்கள் எதிர்ப்பை பதிவு செய்தனர்.

### மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பாரபட்சம் காட்டும்

## ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து டெல்லியில் கேரள முதல்வர் போராட்டம்!

### ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்பு!

புதுடெல்லி, பிப். 9- மாநிலங்களுக்கு நிதி வழங்குவதில் பாரபட்சம் காட்டும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து, டெல்லியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் நடத்திவரும் மாபெரும் போராட்டத்தில் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

ஒன்றிய இடைக்கால பட்ஜெட்டில் தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுவதாக கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. வரிப் பகிர்வு விவகாரத்தில் தென்மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு அநீதி இழைப்பதாக தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா ஆகிய மாநிலங்கள் குற்றம் சாட்டி வருகின்றன.




இந்நிலையில், ஒன்றிய அரசுக்கு எதிராக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் மற்றும் அம்மாநில அமைச்சர்கள் டெல்லியில் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவாக இந்தியா கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றுள்ளனர்.

ஜம்மு - காஷ்மீர் தேசிய மாநாட்டு கட்சித் தலைவரும், காஷ்மீர் முன்னாள் முதலமைச்சருமான ஃபரூக் அப்துல்லா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச்செயலாளர் டி.ராஜா ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

தி.மு.க. சார்பில் தி.மு.க. மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா, அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம்.அப்துல்லா உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் உள்ளிட்டோரும் கேரள அமைச்சரவை போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய கேரள முதலமைச்சர் பினராயி விஜயன், இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க ஒன்றிணைந்துள்ளதாக கூறியுள்ளார். அனைத்து மாநிலங்களையும் சமமாக நடத்துவதை உறுதி செய்வதை வலியுறுத்தி போராட்டம் நடத்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் ஒன்றிய அரசுக்கு எதிராக வலுவான எதிர்ப்பை தெரிவிக்க ஒன்றிணைந்துள்ளோம்

இந்தியாவின் கூட்டாட்சி கட்டமைப்பை பாதுகாக்க நாங்கள் ஒன்று சேர்ந்துள்ளோம். அனைத்து மாநிலங்களும் சமமாக நடத்தப்படுவதை உறுதி செய்யும் விடியலை நோக்கிய பயணம் தொடங்கி உள்ளது.

ஒன்றிய, மாநில உறவில் சமநிலையை பாதுகாக்கவும் இந்த போராட்டம் நடத்தப்படு கிறது.

இந்திய வரலாற்றில் இந்த நாள் ஒரு முக்கியமான தினமாக பதிவு செய்யப்படும் என கேரள முதல்வர் பினராயி விஜயன் குறிப்பிட்டார்.

### தமிழ்நாட்டில் அதிகபட்சமாக

## ஈரோட்டில் 101 டிகிரி வெயில்!

*ஈரோடு,பிப்.9- தமிழ்நாட்டில் அதிகபட்சமாக ஈரோட்டில் 101 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் சுட்டெரித்ததால் மக்கள் அவதிக்குள்ளாகினர். பல மாவட்டங்களில் வழக்கமாக பதிவாகக் கூடியதை விட 2 டிகிரி செல்சியஸ் அதிகமாக வெப்பம் பதிவாகி உள்ளது.*



நீலகிரி மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலகத்தில் நேற்று (08.02.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு, தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரியத்தின் மூலம் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கி, ஆறுதல் கூறினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அரசு கொறடா பா.மு.முபாரக் உட்பட பலர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் புறநோயாளிகள் பிரிவு கட்டடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று (08.02.2024) திறந்து வைத்தார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி , மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் கௌசிக் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் மரு.இளங்கோ மகேஷ்வரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.



விருதுநகர் வடக்கு மாவட்டம் மல்லாங்கிணறில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் தி.மு.க. பவள விழா ஆண்டை முன்னிட்டு புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் முகாம் நடைபெற்று, அதற்கான உறுப்பினர் அட்டைகளை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு கழகத்தினரிடம் வழங்கினார்.

### மோடி அரசின் 10 ஆண்டுகால செயல்பாடு! விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவில்லை!

# கருப்பு அறிக்கை வெளியிட்டது காங்கிரஸ்!

## ஜனநாயகத்திற்கு பா.ஜ.க. அச்சுறுத்தல்: மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.9-

ஒன்றிய மோடி அரசின் பத்து ஆண்டுகால செயல்பாடு குறித்த கருப்பு அறிக்கையை காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்டுள்ளார்.

டெல்லியில் கருப்பு அறிக்கையை, வெளியிட்டு செய்தியாளர்களிடம் பேசிய கார்கே, ஜவஹர்லால் நேரு ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் குறித்து பிரதமர் மோடி ஏன் நாடாளுமன்றத்தில் பேசவில்லை? என கேள்வி எழுப்பினார்.

மேலும், நரேந்திர மோடி ஆட்சியில் உருவாக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்கள் எத்தனை? என்றும் அவர் வினவினார்.



விவசாயிகள் நலனுக்காக ஒன்றிய பா.ஜ.க. அரசு எந்த நன்மையும் செய்யவில்லை என புகார் கூறிய கார்கே, வேலைவாய்ப்பு குறித்து பா.ஜ.க. அரசு எதுவும் பேசுவதில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

நிதி பகிர்வில் பா.ஜ.க. ஆட்சி அல்லாத மாநிலங்களுக்கு, பாகுபாடு காட்டுவதாகவும் விமர்சித்தார்.

ஜனநாயகத்திற்கு அச்சுறுத்தலாக மோடி அரசு உள்ளதாகவும், இதுவரை 411 எம்.எல்.ஏ.க்களை பா.ஜ.க. கட்சியில் இணைத்து, அவர்கள் மூலம் பல மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சியை கவிழ்த்ததாகவும் மல்லிகார்ஜுன கார்கே குற்றஞ்சாட்டியுள்ளார்.

நேரு, இந்திரா காலத்தில் இருந்த விலைவாசி குறித்து பிரதமர் மோடி பேசுகிறார்.

ஆனால் தற்போது அதிகரித்துள்ள விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்?

அது குறித்து ஏன் பிரதமர்மோடி பேசவில்லை? விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக ஆக்குவேன் என பா.ஜ.க. அரசு கூறியது. இது குறித்து மக்களவையில் கேள்வி எழுப்பினாலும் முறையான பதில் கிடைப்பதில்லை.

பா.ஜ.க.வுக்கு மக்களின் ஆதரவு இருந்தால் அனைத்து மாநிலங்களிலும் பா.ஜ.க.விற்கு முதலமைச்சர்கள் இருந்திருப்பார்கள்.

ஆனால் எம்.எல்.ஏ.க்களை விலைக்கு வாங்கி பல மாநிலங்களில் காங். அரசை பா.ஜ.க. கவிழ்த்துள்ளது. விலைக்கு வாங்கும் காங். பா.ஜ.க.க்களை வைத்தே, நேரு, இந்திரா, சோனியா, ராகுல் என அனைவரையும் வசைபாடுகின்றனர் என மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

### சென்னை - பெங்களூரு

# பசுமைவழி விரைவுச்சாலைப் பணிகள் எப்போது நிறைவடையும்?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி,பிப்.9-

நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தில், சென்னை - பெங்களூரு பசுமைவழி விரைவுச்சாலைப் பணிகள், சென்னைஇராணிப்பேட்டை தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் மற்றும் தூத்துக்குடி திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலைப் பணிகள் ஆகியவை குறித்து ஒன்றிய போக்குவரத்துத்துறை அமைச்சகத்திடம் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் கேள்வி எழுப்பினார்.

அதன் விவரம் பின்வருமாறு :

● 18 மாதங்களில் நிறைவடையும் என்று சொன்ன சென்னை பெங்களூரு இடையேயான பசுமைவழி விரைவுச்சாலையின் தற்போதைய நிலை என்ன ? அந்த திட்டம் எப்போது நிறைவடையும்?

● கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒன்றிய நெடுஞ்சாலைத்துறையிடம் நான் பல முறை கேள்வி எழுப்பிய சென்னை பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைப் பணிகள், குறிப்பாக சென்னை முதல் இராணிப்பேட்டை வரையிலான சாலைப் பணிகள் ஒன்றிய நெடுஞ்சாலைத் துறையின் ஒப்பந்தத்தாரர்களின் மேம்



போக்கான நடவடிக்கைகளால் மந்தமான நிலையிலேயே நடைபெற்று வருகிறது.

இதனால் அந்த சாலைகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் மிகுந்த சிரமத்தை அனுபவிக்கின்றனர்.

இந்த சென்னை இராணிப்பேட்டை நெடுஞ்சாலைப் பணிகள் எப்போது நிறைவடையும்?

● சமீபத்திய புயல் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலைகள் எப்போது சீரமைக்கப்படும்?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### உதகை அருகே கட்டட விபத்து:

# உயிரிழந்த 6 பெண்கள் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சம்!

## அரசின் சார்பில் அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்!

உதகை, பிப்.9

உதகை அருகே கட்டிட விபத்தில் உயிரிழந்த ஆறு பெண்களின் குடும்பத்திற்கு தமிழ்நாடு அரசு சார்பில் தலா 2 லட்சம் ரூபாயை தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் வழங்கினார், மேலும் தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறை சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 5 லட்சம் ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் உதகை லவ்டேல் காந்திநகர் பகுதியில் தனியாருக்கு சொந்தமான தேயிலை எஸ்டேட்டில் சொகுசு பங்களா கட்டிடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. இதனைத் தொடர்ந்து நேற்று காலை தடுப்பு சுவர் கட்டும் பணிக்காக 15 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் குழி எடுக்கும் பணியில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது எதிர்பாராத விதமாக மேல் தளத்திலிருந்து கழிப்பிட கட்டிடம் இடிந்து விழுந்ததில் மண் சரிவு ஏற்பட்டு பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்கள் மீது விழுந்ததால் 10 பேர் மண்ணில் புதைந்தனர்.

இதனை தொடர்ந்து அப்பகுதி மக்கள் தீயணைப்பு துறை மற்றும் காவல் துறையினருக்கு தகவல் அளித்தனர். இதனை தொடர்ந்து அவர்களை மீட்டு ஆறு பெண்களை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே பரிதாபமாக உயிரிழந்த நிலையில் படுகாயங்களுடன் நான்கு பேர் உதகை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்நிலையில் உயிரிழந்தவர்களின் உடல்கள் உதகை அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தமிழ்நாடு சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் உயிரிழந்தவர்களின் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்.

தொடர்ந்து தமிழக அரசு அறிவித்த 2 லட்சம் ரூபாய் காசோலையை உறவினர்களிடம் வழங்கியும், தனது சொந்த நிதியிலிருந்து உயிரிழந்தவர்களின் இறுதி சடங்கிற்கு 50 ஆயிரம் ரூபாயும், சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் நிதி வழங்கியுள்ளதாகவும் கூறிய அவர், தொழிலாளர் நலத்துறை சார்பில் உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு தலா 5 லட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

மேலும் இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள கட்டிட உரிமையாளர் ப்ரிஜோ, ஒப்பந்ததாரர் பிரகாஷ், மேற்பார்வையாளர் ஜாஹீர் அஹமது, ஆனந்தராஜ் உட்பட நான்கு பேர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

### திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்

# வந்தவாசி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

திருவண்ணாமலை வடக்கு மாவட்டம், வந்தவாசி மேற்கு ஒன்றியச் செயலாளர் ஏ.எஸ்.பிரபு அவர்கள் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற **எஸ்.அம்பேத்குமார்**, எம்.எல்.ஏ., (319, முத்துமாரியம்மன் கோவில் தெரு, ஆராசூர் கிராமம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் 604 408.) அவர்கள் வந்தவாசி மேற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.

### முன்னாள் டி.ஜி.பி. சைலேந்திர பாபு நூலகத்திற்கு

# முதல்வர் மு.க.ஸ்டாலின் 300 புத்தகங்கள் வழங்கினார்!

மார்த்தாண்டம்,பிப்.9-

குழித்துறையில் முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபு நூலகத்திற்கு முதல்வர் ஸ்டாலின் அவர்கள் 300 புத்தகம் மற்றும் வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.

முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபு குழித்துறையில் உள்ள தனது குடும்ப வீட்டை அண்மையில்,பொது நூலகமாக மாற்றினார். பள்ளி, கல்லூரி மற்றும் போட்டி தேர்வு எழுதும் மாணவ, மாணவியர் பயன்பெறும் விதத்தில் இங்கு ஏராளமான புத்தகங்கள் வைக்கப்பட்டு உள்ளது.

யு.பி.எஸ்.சி., டி.என். பி.எஸ்.சி., தேர்வுகளுக்கான புத்தகங்களும் உள்ளன. தினசரி ஏராளமான மாணவ, மாணவிகள் இங்கு வந்து தங்கள் பெயரை பதிவு செய்து புத்தகங்கள் படித்து செல்கின்றனர். இந்நிலையில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தனக்கு கட்சியினர், அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் அன்பளிப்பாக வழங்கிய 300 புத்தகங்களை இந்த நூலகத்திற்கு வழங்கி உள்ளார்.

**இது தொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் டி.ஜி.பி., சைலேந்திர பாபுவுக்கு எழுதிய கடிதத்தில் கூறி உள்ளதாவது:**

**தாங்கள் பிறந்த ஊரான குழித்துறையில் உள்ள தங்களது வீட்டை ஒரு பொது நூலகமாக மாற்றி உள்ளதாக எனக்கு அனுப்பிய கடிதத்தால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். மேலும் தாங்கள் படித்த அந்த மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு அங்கு பயிற்சி வகுப்புகளும் நடத்த உள்ளது பாராட்டத்தக்க முயற்சி ஆகும். தி.மு.க., தலைவராக பொறுப்பேற்றது முதலாக என்னை சந்திக்க வருபவர்கள் எனக்கு அன்பளிப்பாக புத்தகங்களையே வழங்குமாறு நான் கேட்டுக்கொண்டதோடு, அவ்வாறு எனக்கு அளிக்கப்படும் புத்தகங்களை தமிழகம் முழுவதும் உள்ள நூலகங்களுக்கு அனுப்பி வருகிறேன்.**

**அதன்படி, தாங்கள் அமைத்துள்ள நூலகத்திற்கு புத்தகங்கள் கோரி நீங்கள் எனக்கு எழுதிய கடிதத்தின் அடிப்படையில், பல்வேறு துறைகள் சார்ந்த 300 புத்தகங்களை வழங்குகிறேன். பிறந்த மண்ணின் அறிவு வளர்ச்சிக்காகவும், அவர்கள் உயர் வேலைவாய்ப்புகள் அடைவதற்காகவும் தாங்கள் மேற்கொள்ளும் முன்னெடுப்பு வெற்றி அடைய வாழ்த்துகிறேன்.**

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு சைலேந்திரபாபு எழுதியுள்ள கடிதத்தில் தமது செஞ்சார்ந்த நன்றியைத் தெரித்துள்ளார்.

அவரது கடிதம் வருமாறு:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு,

தாங்கள் அனுப்பியுள்ள 300 புத்தகங்களும் தாங்களது 19.1.2024 நாளிட்ட கடிதமும் பெற்றுக் கொண்டேன்.

எனது பெற்றோரின் பெயரில் என் ஊரில் துவங்கிய என் வீட்டு நூலகத்திற்கு 300 நூல்களை வழங்கிய தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு சைலேந்திர பாபு தமது கடிதத்தில் கூறியுள்ளார்.

### ரூ.3,440 கோடி முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களுடன்

# ஸ்பெயினிலிருந்து திரும்பிய நமது முதலமைச்சருக்கு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, பிப். 9 -

ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று ரூ.3,440 கோடி தொழில் முதலீடுகளுக்கான ஒப்பந்தங்களுடன் வெற்றிகரமாகத் திரும்பிய தமிழ்நாடு முதலமைச்சர் - சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டுதலையும், வாழ்த்துகளையும் தெரிவித்து திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்தியத் திருநாட்டின் ஒப்பற்ற ஆளுமை நிறைந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது; அதற்குக் காரணம், அதில் மூன்று ஆண்டுகளாக நடைபெற்றுவரும் 'திராவிட மாடல்' ஆட்சி, முன்னால் நடைபெற்ற திராவிட ஆட்சிகளைத் தொடர்ந்து நீதிக்கட்சி ஆட்சி, அறிஞர் அண்ணா, கலைஞர் ஆட்சிகளின் வழித்தடத்தில் மேலும் வலிவாகவும், பொலிவாகவும் பீடுநடை போட்டு, ஒவ்வொரு துறையிலும் சாதனைகளைச் சரித்திரங்களாக்கி வருவதை நம் நாடு மட்டுமல்ல, உலகமே கண்டு வியந்து பாராட்டுகிறது.

ஏராளமான பேர் மனுவின் விதியை மாய்த்து, எல்லோருக்கும் கல்விக் கண்ணை அதிலும் காலங்காலமாய் கடைக்கோடியில் தடுப்புச் சுவர் அமைத்துத் தாண்டிவர முடியாத தடைகளை உருவாக்கி, தடுக்கப்பட்ட மகளிரைக் கல்வியை பாய்ந்தோடும் ஆறாகக் காட்டி, அவர்களும் பயனுறும் வகையில் வழங்கிய பரந்துபட்ட பயன் காரணமாக, வேலைவாய்ப்பை எதிர்பார்த்துக் காத்திருப்போர் எண்ணிக்கை ஒவ்வொரு குடும்பத்திலும் அதிகம்!

முந்தைய நாள் உடலுழைப்புக்காரர்களாகவே இருந்த கோடானு கோடி ஒடுக்கப்பட்டோர் சமூகமாக இருந்த நமது சமூகம் கற்றுத் தேர்ந்து, வேலைவாய்ப்புக் கிட்டவில்லையே என்ற ஏக்கப் பெருமூச்சு விட்டு நின்றிடும் வேளையில், அவர்களது வாழ்வாதாரம் வளம்படுவதற்கான வேலை வாய்ப்புக்கு முக்கிய வழி, தொழில் வளத்தைப் பெருக்குவதே! அதற்கு உள்நாட்டு முதலீடுகள் மட்டும் போதாது; வெளிநாடுகளில் உள்ளவர்களின் புதிய தொழில் முதலீடுகளும் வரவேண்டும். அதனைப் பெற அனைத்து சூழல்களையும், தேவைகளையும் உருவாக்கி, அவர்களது நன்னம்பிக்கையைப் பெற்று, வளர்ச் சியை, வாயால் வரையாது, செயலால் நிலைநிறுத்தும் செயற்பாடுகளுக்காகவே உலக நாடுகளின் தொழில் முனைவோர், தங்கள் நாட்டின் முதலீடு உற்பத்திச் செலவினங்களைவிட, இந்தியா போன்ற நாடுகளில் செலவினம் குறைவது, தரத்தோடு பொருள்களைத் தயாரித்துத் தருவதில் முதல் மாநிலமாக தமிழ்நாடுதான் விளங்குகிறது என்ற பரவலான நம்பிக்கையை, நமது முதலமைச்சர் உருவாக்கி விட்டதால், உலகின் பல நாடுகள் தமிழ்நாட்டிற்கு வந்து முதலீடு செய்ய ஆயத்தமாகியுள்ளன!

**தொழில்துறையில் முதல் மாநிலமாகத் தமிழ்நாடு!**

அதைப் பக்குவமாகப் பயன்படுத்தி, தமிழ்நாட்டில் சென்ற மாதங்களில் உலக முதலீடுகளை ஈர்க்கும் பயனுறு மாநாட்டை நடத்தி, பல தொழில் ஒப்பந்தங்களை தமிழ்நாடு 'திராவிட மாடல்' அரசு ஈர்த்தது. நிறைய பல கோடி முதலீடுகள், ஒப்பந்தங்கள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, நமது முதலமைச்சர் தனது தொழில் துறை அமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் ஸ்பெயின் நாட்டுக்குச் சென்று, சுமார் ரூ.3,440 கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களைப் போட்டு, வெற்றிகரமான பயணமாக தனது குழுவின் பயணத்தை மிகச் சிறப்பாக செய்து முடித்துத் திரும்பியுள்ளார்!



**குறுகிய பயணம் என்றாலும், பயனுறு பயணம்!**

இந்த முயற்சிகளை அமெரிக்காவின் பிரபல நாளிதழான "நியூயார்க் டைம்ஸ்" பத்திரிகை வெகுவாகப் பாராட்டிச் செய்திக் கட்டுரைபோல் வெளியிட்டிருப்பது 'திராவிட மாடல்' ஆட்சி எப்படி தமிழ்நாட்டில் மிகச் சிறப்பான செயல்திறத்துடன் சாதிக்கும் ஆட்சியாக இருக்கிறது என்பதற்கான சிறந்த சாட்சியம் ஆகும்!

தமிழ்நாடு இப்படி தொழில் துறையில் சிறந்து மேலோங்கி வளர்ந்து வருவதற்கு முக்கிய காரணம், இங்குள்ள ஓர் ஆட்சி நிலையான ஆட்சி (Stable Government) அது மட்டுமா? திறமையான வெளிப்படையான ஆட்சி (Able and Transparent Government) என்ற பெருமையையும் பெற்றுள்ளது!

**'நியூயார்க் டைம்ஸ்' பாராட்டுகிறது!**

'நியூயார்க் டைம்ஸ்' நாளேடு ஒரு முக்கிய காரணத்தைச் சுட்டிக்காட்டி, தனது கணிப்பினை உலகுக்குப் புரிய வைக்கிறது. இங்கு, தமிழ்நாடு அரசின் கீழ் அமைந்துள்ள மனிதவள மேலாண்மை மிகச் சிறப்பாக செயல்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது! தொழில் முனைவோருக்கான தக்க பாதுகாப்பு பணியாற்றுவோருக்கும், முதலீடு செய்வோருக்கும் இடையில் அரசு நல்லதோர் பாலமாகவும் செயல்பட்டு, இருசாராருக்கும் இணக்கமான செயலை ஒவ்வொரு துறையிலும் ஏற்படுத்திச் செல்வதே மூலகாரணம்.

**சமூகநீதிக்கான சரித்திர நாயகர்!**

ஸ்பெயின் நாட்டிலிருந்து 'திராவிடன் வந்துள்ளார்' என்று 'திராவிடம்' பற்றி முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் (நாவலர், பேராசிரியர் படிக்கும்போது) தமிழ் மன்றத்தில் பெருமையுடன் பேசினார் மொகஞ்சதாரோ, ஹரப்பா பற்றிப் பேசிய ஹீராஸ் பாதிரியார்.

அந்தப் பண்பாட்டு உறவை நமது ஒப்பற்ற 'திராவிட மாடல்' முதலமைச்சர் சமூகநீதிக்கான சரித்திர நாயகர் மீண்டும் புதுப்பித்துள்ளார் அங்குள்ள நம் மக்களிடம் உரையாற்றியும்கூட!

"திராவிடம் வெல்லும்
நாளைய வரலாறு என்றும் சொல்லும்!"

வெற்றியோடு திரும்பிய நமது முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும், அவரது குழுவினருக்கும் நமது நல்வர வேற்பும், பாராட்டும், வாழ்த்துகளும்!

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# வை.மூர்த்தி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) துணைவியார் திருமதி.இந்திரா மூர்த்தி மறைவு!

சென்னை, பிப். 9-

திருச்சி மாவட்ட முன்னாள் ஆட்சியர் வை. மூர்த்தி ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களின் துணைவியார் திருமதி. இந்திரா மூர்த்தி அவர்கள் நேற்று மறைவெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு) அவர்களின் சம்பந்தியும், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான வை.மூர்த்தி அவர்களின் துணைவியார் திருமதி.இந்திரா மூர்த்தி (வயது 73) அவர்கள் நேற்று (8.2.2024) பிற்பகல், எண்.2, 12வது தெரு, இசட் பிளாக், அண்ணாநகர், சென்னை என்ற முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் மறைவெய்தினார்.

திருமதி.இந்திரா மூர்த்தி அவர்களின் மறைவுச் செய்தியறிந்து அரசு அதிகாரிகள், அலுவலர்கள், முக்கியப் பிரமுகர்கள் என ஏராளமானோர் சென்று அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த திருமதி.இந்திரா மூர்த்தி அவர்களின் இறுதி ஊர்வலம் இன்று (9.2.2024) பிற்பகல் 1 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து புறப்பட்டு அண்ணா நகர் மின் மயானத்தில் இறுதிச் சடங்குகள் நடைபெறுகிறது.

# ஒன்றிய அரசின் பாகுபாடான வரிப் பகிர்வு!

## மாநிலங்களவையில் புள்ளி விவரங்களுடன் பி.வில்சன் தகவல்!



ஒன்றிய அரசின் வரிப்பகிர்வு கொள்கை மூலம், வரி அதிகம் செலுத்தும் தென் மாநிலங்களுக்கு வரிப்பகிர்வு குறைவாகவும், வரி குறைவாக செலுத்தும் வட மாநிலங்களுக்கு அதிக வரிப் பகிர்வும் அளிக்கப்படுவது குறித்து வில்சன் எம்.பி. மாநிலங்களவையில் பதிவிட்டுள்ள தகவல்கள் மக்களை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

பொதுவாக மத்தியில் ஆளும் அரசு தென் மாநிலங்களை புறக்கணிப்பதாகவும், இதனால் வடக்கே வாழ்கிறது தெற்கே தேய்கிறது என தமிழ்நாட்டில் ஆட்சி செய்த அரசியல்வாதிகள் தெரிவித்து உள்ளனர். சமீபகாலமாக, இந்த விவகாரம் மீண்டும் தலைதூக்கத் துவங்கி உள்ளது. அதிக வரி செலுத்தும் மாநிலங்களான தென் மாநிலங்களுக்கு, வட மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் ஒன்றிய அரசு குறைந்த அளவே வரிப் பகிர்வு அளிப்பதாக எழும் குற்றச்சாட்டே இந்த விவகாரத்திற்கு முக்கிய காரணம்.

இந்நிலையில், இந்த விவகாரம் பூதாகரமானதற்கு காரணமாக, தமிழ்நாடு அரசு கோரிய வெள்ள நிவாரணத் தொகையை ஒன்றிய அரசு வழங்காததுதான் என கூறப்படுகிறது. தமிழ்நாட்டில் 2023ஆம் ஆண்டு சென்னை, வட மாவட்டங்கள் மற்றும் தென்மாவட்டங்களில் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நிவாரணம் அளிக்கக் கோரி ஒன்றிய அரசிடம் தமிழ்நாட்டில் அரசு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், ஒன்றிய அரசின் குழுவினரும் வெள்ளப் பாதிப்புகளை நேரில் வந்து ஆய்வு செய்திருந்தனர்.

இந்நிலையில், நாடாளுமன்றத்தில் நடைபெற்று வரும் இடைக்கால பட்ஜெட் கூட்டத்தொடரில், பிப்ரவரி 2ஆம் தேதி பேசிய திருப்பெரும்புதூர் எம்.பி.யும், திமுக நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர்.பாலு, “வெள்ள நிவாரண பாதிப்புகளை சரி செய்ய தமிழ்நாடு அரசு சார்பில் 37 ஆயிரம் கோடி கேட்டு ஒரு பைசா கூட வழங்கவில்லை. ஒன்றிய அரசு மாற்றாந் தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்கிறது” எனப் பேசினார். மேலும், நிவாரணம் வழங்காத ஒன்றிய அரசைக் கண்டித்து பிப்ரவரி 8ஆம் தேதி எம்.பி.க்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதாகவும் கூறினார்.

முன்னதாக, வெள்ள நிவாரணத்திற்காக கோரிய தொகை வழங்காததால், அதிக ஜி.எஸ்.டி. வரி செலுத்தும் மாநிலமாக இருந்தும், தங்களுக்கு நிவாரணத் தொகையை வழங்காமல் இருப்பதாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்களும் தங்கள் கண்டனங்களைத் தெரிவித்திருந்தனர்.

அதேபோல், 1ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்ட மத்திய இடைக்கால பட்ஜெட்டில் அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக கர்நாடக மாநில காங்கிரஸ் குற்றம் சாட்டி இருந்தது. மேலும், வரிப் பகிர்வில் இதே நிலை நீடித்தால், தென் மாநிலங்களுக்கு தனி நாடு கேட்கும் நிலை ஏற்படும் என காங்கிரஸ் எம்.பி .டி.கே.சுரேஷ் பகிரங்கமாகத் தெரிவித்தார்.

இந்நிலையில், முறையான வரிப்பங்கீடு செய்யாததாக ஒன்றிய அரசுக்கு எதிராக பிப்ரவரி 7ஆம் தேதி டெல்லியில் கர்நாடக காங்கிரஸார் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், கேரளாவின் கடன் வாங்கும் வரம்பு, வருவாய் பற்றாக்குறை மானியத்தைக் குறைத்ததற்காக கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் தலைமையில், டெல்லி ஜந்தர் மந்தரில் எம்எல்ஏக்கள் மற்றும் எம்பிக்கள் ஒன்றிய அரசுக்கு எதிராக நேற்று (பிப்.8) போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒன்றிய அரசின் நிதிப் பகிர்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து தென் மாநிலங்களான கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநில அரசுகள் போராட்டத்தில் இறங்கியுள்ள நிலையில், ஒன்றிய அரசுக்கு மாநிலங்கள் அளிக்கும் ஜி.எஸ்.டி. வரி மற்றும் அதில் இருந்து மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு வழங்கும் வரிப் பகிர்வு குறித்து புள்ளி விவரங்களுடன் திமுக மாநிலங்களவையில் வில்சன், அவரது X சமூக வலை தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அவரது பதிவில், “ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரியில், ஒன்றிய அரசு தென் மாநிலங்களுக்கு எதிராக பாகுபாடு காட்டுகிறது. தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், தெலங்கானா, கேரளா, கர்நாடகா போன்ற தென் மாநிலங்கள், ஜிஎஸ்டி மற்றும் நேரடி வரிகளுக்கு கடந்த 5 ஆண்டுகளில் பங்களித்த மொத்த வரி ரூ.22 லட்சத்து 26 ஆயிரத்து 983.39 கோடி.

கடந்த ஐந்து ஆண்டுகளில் உத்தரப் பிரதேசத்தால் பங்களிக்கப்பட்ட தொகை ரூ.3 லட்சத்து 41 ஆயிரத்து 817.60 கோடி. கடந்த 5 ஆண்டுகளில் மேலே குறிப்பிட்ட தென் மாநிலங்களுக்கு விடுவிக்கப்பட்ட மத்திய வரிகள் மற்றும் தீர்வைகள் மொத்தம் ரூ.6 லட்சத்து 42 ஆயிரத்து 295.05 கோடி. உத்தரப் பிரதேசத்திற்கு விடுவிக்கப்பட்ட தொகை ரூ.6 லட்சத்து 91 ஆயிரத்து 375.12 கோடி” எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் பெறப்பட்ட வரி விவரம் குறித்தும், வரி ஒதுக்கீடு குறித்தும் மாநிலங்களவையில் வில்சன் எழுப்பிய கேள்விகளுக்கு, ஒன்றிய நிதித்துறை இணை அமைச்சர் பங்கஜ் சவுத்ரி பதில் அளித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

அதில் ஒவ்வொரு மாநிலமும் செலுத்திய ஒரு ரூபாய் அடிப்படையில், மத்திய அரசு திருப்பி அளித்த தொகை குறித்த விவரங்களை பதிவிட்டுள்ளார். அதில், “தமிழ்நாடு 26 பைசா, கர்நாடகா 16 பைசா, தெலங்கானா 40 பைசா, கேரளா 62 பைசா, மத்தியப் பிரதேசம் 1 ரூபாய் 70 பைசா, உத்தரப் பிரதேசம் 2 ரூபாய் 2 பைசா, ராஜஸ்தான் 1 ரூபாய் 14 பைசா” திரும்ப கிடைப்பதாக பதிவிட்டுள்ளார்.

ஒன்றிய அரசின் வரிப் பகிர்வு குறித்த இந்த தகவல் தற்போது மக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.



நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் நேற்று (08.02.2024) தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் சுவர் இடிந்து விழுந்த விபத்தில் காயமடைந்து, சிகிச்சை பெற்று வருபவர்களை நேரில் சந்தித்து, ஆறுதல் கூறி, உணவுப்பொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, உதகை சட்டமன்ற உறுப்பினர் ஆர்.கணேஷ், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.கீதாஞ்சலி உட்பட பலர் உள்ளனர்.

# “வருமான வரி, அமலாக்கத் துறை கண்டு அஞ்சுபவர்கள் அல்ல நாங்கள்!”

## சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி பேட்டி!

புதுக்கோட்டை, பிப்.9-

“மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை என்பதால் பா.ஜ.க.வின் அண்ணாமலை கூறுவதைப் போன்று அமலாக்கத் துறை வந்தாலோ, வருமான வரித் துறை வந்தாலோ நாங்கள் கவலைப்படப் போவதில்லை, வந்தால் வரவேற்கிறோம்” என மாநில சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்திருக்கிறார்.

சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் கூறியதாவது, ஆளுநருக்கு நிறைய கோப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. சில கோப்புகளுக்கு ஆளுநர் அனுமதி அளித்துள்ளார். சில கோப்புகள் நிலுவையில் உள்ளன. சிறையில் இருந்து முஸ்லிம் சிறைவாசிகள் விடுதலை நடவடிக்கையில் தி.மு.க. அரசைத் தவிர வேறு எந்த அரசும் இதுபோன்று எடுத்ததில்லை. கோடநாடு கொலை வழக்கில் தடயவியல் ஆய்வாளர்கள் திருச்சியில் சோதனை நடத்தியதைப் பொறுத்தவரையில், அவர்கள் தங்களது கடமைகளை செய்துள்ளனர். அவர்கள் அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில் தான் அடுத்த கட்ட நடவடிக்கை இருக்கும்.

கோடநாடு வழக்கில் 3 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிவிட்டு 36 மாதங்களாகியும் தி.மு.க. அரசு நடவடிக்கை எடுக்கவில்லை



என்று முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் விமர்சித்துள்ளார்.

ஓ.பி.எஸ். மற்றும் இ.பி.எஸ். ஆகிய இருவருமே பா.ஜ.வின் கொத்தடிமைகள். இருவரும் தங்களது கட்சியை பா.ஜ.க.வினரிடம் அடகு வைத்துவிட்டனர். இதைப் பற்றி பேசுவதற்கு அவர்களுக்கு எந்த தகுதியும் இல்லை. எங்களைப் பொறுத்தவரை கோடநாடு வழக்குக்கு புத்துயிர் கொடுத்து விசாரித்து கொண்டு இருக்கிறோம். முதல்வர் எடுத்த நடவடிக்கையினால்தான் இந்த வழக்கில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மடியில் கனமில்லை, வழியில் பயமில்லை என்பதால் பா.ஜ.க.வின் அண்ணாமலை கூறுவதைப் போன்று அமலாக்கத்துறை வந்தாலோ, வருமான வரித்துறை வந்தாலோ நாங்கள் கவலைப்படப் போவதில்லை,வந்தால் வரவேற்கிறோம்” .

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

## ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள்!

# நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு இடம் கூட பா.ஜ.க.வுக்கு கிடைக்காது!

## நெல்லையில் - கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

நெல்லை, பிப். 9 -

ஒன்றிய அரசு தமிழகத்திற்கு உரிய நிதியை வழங்காமல் புறக்கணிப்பதை கண்டித்து நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுனில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு குறித்து பொதுமக்களுக்கு விவரிக்கும் வகையில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், தலைமைக் கழக வழக்கறிஞர் சூரியா வெற்றி கொண்டான் ஆகியோர் முன்னிலையில் மக்களுக்கு அல்வா கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து அந்த பகுதிகளில் உள்ள கடைகள், வியாபாரிகள், வணிக நிறுவனங்களுக்கு, அல்வா கொடுத்து ஒன்றிய அரசு தமிழகத்திற்கு நிதி கொடுக்காமல் வஞ்சிப்பதை விளக்கி கூறினர்.

பின்னர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

ஒன்றிய அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது.கடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னால்



மோடி அரசு மதுரையில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு அடிக்கல் நாட்டினார். ஆனால் 5 ஆண்டு காலம் முடிந்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. மோடி எய்ம்ஸ் கல்லூரிக்காக நட்டிய ஒற்றை செங்கலை வைத்து

கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் ஸ்டாலின் அவர்கள் பிரச்சாரம் செய்து தி.மு.க. அரசு ஆட்சிக்கு வந்துவிட்டது. மோடி அரசுக்கு கொஞ்சமாவது உணர்வு இருந்தால் தமிழக மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையில் இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் பிரச்சாரம் செய்தார் என்ற சொரணை ஏற்பட்டு கொஞ்சமாவது நிதி வழங்கி எய்ம்ஸ் கல்லூரியை கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இன்னும் ஒன்றிரண்டு மாதங்களில் மோடி அரசின் ஆயுட்காலமே முடிய போகிறது. இதுவரையிலும் மதுரை எய்ம்ஸ் கல்லூரிக்கு நிதி ஒதுக்கவில்லை.

நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் வரலாறு காணாத அளவுக்கு பெய்த கனமழை வெள்ளத்தில் மக்கள் பாதிப்புக்கு உள்ளானார்கள். அதற்காக நாடே கண்ணீர் விட்டது. ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெள்ள பாதிப்புகளை ஆய்வு செய்வதற்காக வந்து படம் போட்டார். கோவிலுக்கு சென்ற அவர் உண்டியலில் பணத்தை போடாதீர்கள் என சொல்லி விட்டு சென்றார். வெள்ள நிவாரணத்திற்காக சல்லி பைசா கூட தரவில்லை. ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு வரியாக வழங்கும் 1 ரூபாய்க்கு 29 பைசா மட்டுமே தமிழகத்திற்கு கொடுக்கிறது.

ஒன்றிய அரசிடம் தமிழ்நாடு பிச்சை கேட்கவில்லை. அதிகாரத்துடன் உரிமையை தான் கேட்கிறது. எங்களிடமிருந்து பறித்து வைத்துள்ள 71 சதவீதத்தில் இருந்து 10 சதவீதத்தை கொடுங்கள் என்று தான் நாங்கள் கேட்கிறோம். உத்திரப்பிரதேசத்தில் 1 ரூபாய் செலுத்தும் வரிக்கு 2 ரூபாயாக திருப்பிக் கொடுக்கிறார்கள். தமிழ்நாடு செலுத்தும் 1 ரூபாய் வரிக்கு 29 பைசா மட்டுமே தரப்படுகிறது

எய்ம்ஸ் மருத்துவமனை வருகிறது என்று சொல்லி அல்வா கொடுத்து விட்டார்கள். நெல்லை,தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்ட வெள்ள நிவாரணத்திற்கும் ஒன்றிய அரசு அல்வா கொடுத்துவிட்டது. ஒன்றிய அரசு கொடுத்த அல்வாவிற்கு பதில் சொல்லும் விதமாக அல்வாவிற்கு பெயர் பெற்ற திருநெல்வேலியில் இருந்து மோடிக்கு இந்த தேர்தலில் மக்கள் அல்வா கொடுக்கப் போகிறார்கள். ஒரு இடம் கூட இந்த தேர்தலில் பா.ஜ.க.விற்கு கிடைக் காது. என்பதை உணர்த்தும் வகையில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்ப ட்டுள்ளது.

ஜி.எஸ்.டி. விவகாரம் தொடர்பாக ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசுவது பித்தலாட்ட உரை, ஏமாற்றும் செயல், நிர்மலா சீதாராமனின் கணவரே இந்தியாவின் பொருளாதாரம் என்ன என்பதை தெளிவாக சொல்லியுள்ளார். கணவரின் பேச்சைக் கேட்டு நிர்மலா சீதாராமன் நடந்தால் நல்லது. அண்ணாமலை முதல்வர் அவர்கள் வெளிநாட்டுப் பயணம் குறித்து வெள்ளை அறிக்கை கேட்பதற்கு பதில் வெள்ளரிக்காய் வேண்டுமானால் வாங்கி கொடுக்கலாம். வெள்ளை அறிக்கை எல்லாம் கொடுக்க முடியாது. திருநெல்வேலியில் அதிகம் வெள்ளரிக்காய் கிடைக்கிறது. வரும்பொழுது நான் வாங்கிக் கொண்டு வருகிறேன்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தெரிவித்தார்.

## சிறுபான்மையினர் குறித்து அவதூறு : வழக்கை ரத்து செய்யக்கோரி

# அண்ணாமலை தாக்கல் செய்த மனு! உயர்நீதிமன்றம் தள்ளுபடி!

சென்னை, பிப்.9-

சிறுபான்மையினர் குறித்து அவதூறாக பேசியதாக தொடரப்பட்ட வழக்கை ரத்து செய்யக் கோரி அண்ணாமலை தாக்கல் செய்த மனுவை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை, கடந்த 2022 ஆம் ஆண்டு அளித்த பேட்டியில் சிறுபான்மையினர் குறித்து அவதூறாக பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதைத்தொடர்ந்து அண்ணாமலை மீது சேலம் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் அவதூறு வழக்கு தொடரப்பட்டது.

இரு மதத்தினர் இடையே மோதலை ஏற்படுத்தும் நோக்கத்துடன் பொய்யான தகவலை பரப்பும் வகையில் பேசிய அண்ணாமலை மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் மனுவில் கோரப்பட்டது.

இந்த வழக்கில் அண்ணாமலை நேரில் ஆஜராக சேலம் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், கீழமை நீதிமன்றத்தின் சம்மனையும், அவதூறு வழக்கையும் ரத்து செய்ய அண்ணாமலை தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், அவதூறு வழக்கை ரத்து செய்ய மறுத்ததுடன், அண்ணாமலை தாக்கல் செய்த மனுவையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

## சிவகங்கை மாவட்டம் இளையான்குடியில்

# பிற்படுத்தப்பட்டோர் மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் உதவி!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் - துறைமுகம் காஜா வழங்கினர்!

சிவகங்கை, பிப். 9-

2023-24ஆம் நிதியாண்டில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பினைச் சார்ந்த தனிநபர் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்கால கடன் திட்டத்தின்கீழ் 100 பயனாளிகளுக்கு ரூ.1.32 கோடி கடன் வழங்கும் திட்டத்தினை தொடங்கி வைக்கும் அடையாளமாக 7 பயனாளிகளுக்கு ரூ.21.40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை முதலமைச்சர் அவர்கள் 15.12. 2023 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மீதமுள்ள 93 பயனாளிகளுக்கு சென்னை நுங்கம்பாக்கத்திலுள்ள மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் அன்னை தெரேசா வளாக கூட்ட அரங்கில் நடைபெற்ற விழாவில் ரூ.1.11 கோடிக்கான காசோலைகளை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மற்றும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் அவர்களால் கடன் உதவிக்கான காசோலைகள் வழங்கப்பட்டது.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி நகர கூட்டுறவு வங்கியின் மூலம் பொதுக் காலக் கடன் திட்டத்தின்கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.5.70 இலட்சம் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ. 10.00 இலட்சம் மொத்தம் 16 பயனாளிகளுக்கு ரூ.15.70 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 5 பயனாளிகளுக்கு மின் மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் மற்றும் தேய்ப்பு பெட்டிகளும் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் திரு.காஜாமுகைதீன் (எ) துறைமுகம் காஜா மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் ஆகியோர் வழங்கினர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பகுதியில் உள்ள 35 நரிக்குறவர் மக்களுக்கு முன்னாள் அமைச்சரும் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ படுக்கை மெத்தை வழங்கினார் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், திருவள்ளூர் மாவட்டம் ஊராட்சி பெருந்தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, ஆவடி மாநகர பொறுப்பாளர் சண்.பிரகாஷ், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், பகுதிச் செயலாளர்கள் ஜி.நாராயண பிரசாத், ஜி.ராஜேந்திரன், பொன்.விஜயன் வட்ட செயலாளர்கள் செந்தில் ஜெயந்தன் உள்பட பலர் உள்ளனர்.

## தி. மு. க. தொழிலாளர் அணி

# திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்

### தி.மு.க. தொழிலாளர் அணிச் செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் அறிவிப்பு

தி.மு.க. தொழிலாளர் அணியின் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட அமைப்பாளர் இ.பிச்சைக்கண்ணு மறைவெய்திய காரணத்தால், **திரு.அன்னை க.சீனுவாசன்** (19, பொட்டிநாயுடு தெரு, 3வது தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம் - 604408.) அவர்கள் திருவண்ணாமலை வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றிட வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**பிடிசி ஜி.செல்வராஜ்**
செயலாளர்,
தி.மு.க. தொழிலாளர் அணி




பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகரம்–கும்பகோணம் கிழக்கு, மத்திய மற்றும் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில், செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் தாராசுரம், மற்றும் கும்பகோணம் மகாமக குளம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு அமைதி பேரணியாகச் சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்நிகழ்வில் சு.ப.தமிழழகன், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, உள்ளூர் டி.கணேசன், எஸ்.கே.முத்துசெல்வம், ஜெ.சுதாகர், மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## அரசின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேருங்கள்!

# பெண்களின் முன்னேற்றமே ‘திராவிட மாடல்’ அரசின் முதல் நோக்கம்!

## ஈரோட்டில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் வழங்கும் விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**ஈரோடு, பிப்.9–**
**ஈரோடு சோலார் புதிய பேருந்து வளாகத்தில் நேற்று (வியாழக்கிழமை) அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் இணைப்பு வழங்கும் விழா நடைபெற்றது. இதில் மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 337 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 100 கோடியே 36 லட்சம் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி சிறப்புரையாற்றினார். அப்போது, பெண்களுடைய முன்னேற்றம்தான் திராவிட மாடல் அரசின் முதன்மையான நோக்கம் என்று குறிப்பிட்டார்.**

விழாவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு முழுவதும் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு `மகளிர் மேம்பாட்டு நிறுவனம்’, `வாழ்ந்து காட்டுவோம் திட்டம்’, `நகர்புற வாழ்வாதார இயக்கம்’ போன்றவற்றின் மூலம் 2 ஆயிரத்து 504 கோடி ரூபாய் மதிப்பிலான வங்கிக் கடன் இணைப்பை இன்று வழங்கிட, நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். அதன் ஒரு பகுதியாகத்தான் இன்றைக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள 2 ஆயிரத்து 337 மகளிர் சுய உதவி குழுக்களுக்கு 100 கோடியே 36 லட்சம் ரூபாய் அளவிற்கு வங்கிக் கடன் இணைப்புகளை வழங்க, வந்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். பெருமை அடைகின்றேன்.

ஈரோடு மாவட்டத்தில் நகராட்சி நிர்வாகம், கூட்டுறவு, நெடுஞ்சாலை, வேளாண்மை, பள்ளிக்கல்வி, நீர்வளம் உள்ளிட்ட ஒன்பது துறைகளுக்கு 209 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டப் பணிகளைத் தொடங்கி வைப்பது மற்றும் அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சிகளும் இங்கே உங்கள் முன்னிலையில் நடைபெற்றுள்ளன.

### தாய் வீட்டிற்கு வருவது போன்ற உணர்வு!

ஈரோட்டிற்கு வரும் பொழுதெல்லாம் என்னுடைய தாய் வீட்டிற்கு, சொந்த வீட்டிற்கு வருகின்ற உணர்வு எப்பொழுதுமே ஏற்படும். அதற்குக் காரணம் இங்கு கூடி இருக்கின்ற தாய்மார்கள், மகளிர் நீங்கள் ஒவ்வொருவரும் என்னை உங்கள் வீட்டுப் பையனாக, உங்களுடைய மகனாக, உங்களுடைய சகோதரனாக, உங்களுடைய பேரனாக, உங்களுடைய அண்ணனாக நினைத்து, என்னிடம் வெளிக்காட்டுகின்ற அந்த அன்புதான், எனக்கு அப்படியொரு உணர்வை ஏற்படுத்துகின்றது.

இங்கு நல திட்ட உதவிகளைக் கொடுப்பதற்காகத்தான் அண்ணன் முத்துசாமி அவர்கள் என்னை அழைத்தார்கள். அதை நினைத்துத் தான் வந்தேன். மேடைக்கு வந்த பிறகுதான் தெரிகின்றது இன்னும் சில கோரிக்கைகளையும் அவர் வைத்திருக்கின்றார் என்று. இங்கு ஒரு விளையாட்டு அரங்கம் வேண்டும் என்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறார். விரைவில், நம் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அதையும் நிறைவேற்றித் தருவேன் என்ற வாக்குறுதியை நான் கொடுக்கின்றேன்.

### பெண் விடுதலைக்கான போர்க்குரல் தந்தை பெரியார்!

ஈரோடு வந்தாலே எனக்குள் ஒரு மகிழ்ச்சி பொங்குவதற்கு இன்னொரு மிக முக்கியமான காரணம் இருக்கின்றது. ‘பகுத்தறிவுப் பகலவன்’, ‘சுயமரியாதைச் சூரியன்’, ‘பெண் விடுதலைக்கான போர்க்குரல்’ தந்தை பெரியார் பிறந்த மண் இது. நம் `திராவிட இயக்கத்தின் தொட்டில்’ என்று இந்த ஈரோடு மாவட்டத்தைச் சொல்லலாம்.



பெண்கள் தங்களுடைய செலவுக்கு தன்னுடைய தந்தையையோ, கணவனையோ, அண்ணனையோ, தம்பியையோ எதிர்பார்க்க வேண்டிய நிலைமையை மாற்றி, கிராமப்புறத்தில் இருக்கின்ற பெண்களும் பொருளாதாரச் சுதந்திரத்தோடு இருக்க வேண்டும் என்ற அடிப்படையில்தான் நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கிட்டத்தட்ட முப்பது வருடத்திற்கு முன்பு மகளிர் சுய உதவிக் குழுவை இந்தியாவிலேயே முதன் முறையாகத் தொடங்கினார்.

### 12 லட்சத்து 22 ஆயிரத்து 803 சுய உதவிக் குழுக்கள்!

நம்முடைய திராவிட மாடல் அரசு, இன்றைக்கு அந்தத் திட்டம் தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு குக்கிராமத்திலும் மகளிர் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம் லட்சக்கணக்கான பெண்கள் பயனடைந்து வருகிறார்கள். நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்றது முதல் இப்பொழுதுவரை 12 லட்சத்து 22 ஆயிரத்து 803 சுய உதவிக் குழுக்களுக்குச் சுமார் 69 ஆயிரத்து 554 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது, என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### 30 ஆயிரம் கோடி ரூபாய் கடன் வழங்க இலக்கு!

2023 - 2024 ஆம் ஆண்டில் எங்களுக்கு வழங்கப்பட்ட டார்கெட் முப்பதாயிரம் கோடி ரூபாய் கடன் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதுவரை 25 ஆயிரம் கோடி ரூபாய் அளவிற்கு கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. விரைவில், எங்கள் துறையின் சார்பாக அந்த 30,000 கோடி டார்கெட்டையும் நாங்கள் அடைவோம். இந்த நேரத்தில் ஒரு விஷயத்தை உங்களிடத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஒன்றிய அரசுக்கு நம்முடைய மாநில அரசு 2016-ஆம் ஆண்டு முதல் 6 லட்சம் கோடி அளவிற்கு இதுவரை மக்கள் வரிப்பணம் செலுத்தி இருக்கின்றோம். ஆனால், நமக்கு ஒன்றிய அரசு திரும்பி வெறும் இரண்டரை லட்சம் கோடி ரூபாய்தான் திருப்பிக் கொடுத்திருக்கிறது. நாம் கொடுத்தது 6 லட்சம் கோடி. ஆனால், ஒன்றிய அரசு நம்முடைய தமிழக அரசுக்குக் கொடுத்தது இரண்டரை லட்சம் கோடி தான்.

அதாவது ஒன்றிய அரசுக்கு வரியாக நாம் ஒரு ரூபாய்க் கொடுத்தால் அவர்கள் நமக்குத் திருப்பித் தருவது வரும் 29 பைசாதான். இப்படிப்பட்ட ஒரு பொருளாதாரச் சூழலில்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகளிர் நலனுக்காக இத்தனை கோடி மதிப்பிலான திட்டங்களைப் பார்த்துப் பார்த்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மகளிர் முன்னேற்றத்தின் மீது நம் அரசுக்கு இருக்கின்ற அக்கறையை எடுத்துக்காட்டத்தான் இந்தப் புள்ளிவிவரத்தை உங்களுக்குக் கூறி இருக்கின்றேன். நம்முடைய திராவிட மாடல் அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு எந்த அளவிற்கு ஆதரவாக இருக்கிறதோ, அதைவிட அதிகமாக நம்முடைய குழுக்கள் உறுப்பினர்கள் இந்த அரசின் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு ஆதரவாக இருக்கின்றீர்கள்.

நம்முடைய திராவிட மாடல் செயல்படுத்துகின்ற பல்வேறு திட்டங்களில் மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் உங்களின் பங்களிப்பு அதிகமாக இருக்கின்றது. உதாரணத்திற்கு, தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகின்ற `மக்களைத் தேடி மருத்துவம்’ என்ற திட்டத்தில் நோயாளிகளின் வீட்டிற்குச் சென்று மருத்துவச் சேவைகளைச் செய்கின்ற மகளிர் சுய உதவிக் குழுக்கள் மிகப்பெரிய சேவையைச் செய்து வருகின்றன.

### காலை உணவுத் திட்ட உணவைச் சமைப்பவர்!

தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசுப் பள்ளிகள் தொடக்கக் கல்வி ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய 17 லட்சம் மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்ற முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தில் தரமான உணவைச் சமைத்துக் கொடுப்பதும், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் நீங்கள்தான். சுகாதாரம், உணவு, கல்வி ஆகிய மூன்றிலும் திராவிட மாடல் அரசு குறிக்கோளை அடைவதற்கு, மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மிகப்பெரிய அளவில் நீங்கள் உதவி செய்துகொண்டு வருகிறீர்கள். அதற்காக இங்கு கூடியிருக்கக்கூடிய அனைத்து தாய்மார்களுக்கும், தங்கைகளுக்கும் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### பெண்களுக்கு கல்வி முக்கியம்!

பெண்களுடைய முன்னேற்றம் தான் இந்தத் திராவிட மாடல் அரசின் முதன்மை யான நோக்கம். அதற்காகவே, இந்த அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஒரு குடும்பத்தில் ஒரு பெண் படித்தால், அந்த மொத்த குடும்பமே படித்ததற்கு சமம் என்று சொல்வார்கள். காரணம், அந்தப் படித்த பெண் தனது குழந்தைகளுக்குப் படிப்பு சொல்லிக் கொடுப்பார்கள். அந்தக் குழந்தைகள் நல்ல முறையில் வளர்ந்து நல்ல வேலைக்குப் போவார்கள். அந்தக் குடும்பமே முன்னேறும். அதனால்தான் பெண்களுக்குக் கல்வி மிக மிக முக்கியம்.

அதேபோல் பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரம் மிக மிக முக்கியம். பெண்கள் சம்பாதிக்கத் தொடங்கினால் பெண்கள் பணத்தைச் சேமிக்கத் தொடங்கினால், கையாளத் தொடங்கினால் அந்தக் குடும்பமே பொருளாதார வளர்ச்சி அடையும் என்பது அனைவருக்கும் தெரிந்த விஷயம். பெண்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்பதற்காக இந்த அரசு புதுமைப்பெண் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியது. அரசுப் பள்ளியில் படித்து, கல்லூரிக்குப் படிக்கப் போகின்ற ஒவ்வொரு பெண்களின் வங்கிக் கணக்கிலும் மாதம் ஆயிரம் ரூபாய் என்ற புதுமைப்பெண் திட்டத்தை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் துவங்கி வைத்தார்கள்.

### ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய்!

பெண்கள் பொருளாதாரத்தில் சொந்த காலில் நிற்க வேண்டும் என்று கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் இதுவரை ஒரு கோடியே 16 லட்சம் மகளிர் மாதம் 1,000 ரூபாய் நம்முடைய அரசு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். அதேபோல் நம்முடைய முதலமைச்சர் பொறுப்பேற்று முதல் கையெழுத்து, பெண்களுக்குக் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டம். பெண்கள் அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணிக்கக் இத்திட்டத்தை அறிமுகப் படுத்தினார்.

ஒவ்வொரு மகளிரும் இந்தத் திட்டத்தின் மூலம் கிட்டத்தட்ட வருடத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் சேமிக்கிறார்கள். மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு உடனடியாக வங்கிக்கடன் இணைப்பையும் சேர்த்து வழங்குகின்றோம். அதேபோல் மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு இந்த அரசு தேவையான அனைத்து உதவிகளையும் செய்து வருகின்றது.

### இணையதளத்தின் மூலம் விற்பனை!

சுய உதவிக்குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் `பூமாலை வணிக வளாகம்’ ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழுக்களின் பொருட்கள் இணையதளத்தின் மூலம் விற்பனை செய்யும் வசதியையும் செய்து கொடுத்துள்ளோம். கூடுதலாக, இப்பொழுது மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை வாகனங்களில் ஏற்றிச்சென்று விற்பனை செய்யும் வகையில், 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் எக்ஸ்பிரஸ் விற்பனை மின் வாகனங்களும் இங்கே வழங்கப்பட உள்ளது.

பெரும்பாலும் மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளான நீங்கள் தயாரிக்கின்ற பொருட்களைத் தான் நான் பயன்படுத்துகின்றேன். இன்றைக்கு இந்த மேடையில்கூட வந்திருந்த அனைத்து சிறப்பு விருந்தினர்களுக்கும் நினைவுப் பரிசு கொடுத்தார்கள். அதுவும் நீங்கள் தயாரித்த பொருட்கள்தான். என்னுடைய வீட்டில் மட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் வீட்டிலும் நிறைய பொருட்கள் சுய உதவிக் குழுக்கள் நீங்கள் தயாரித்த பொருட்கள்தான் இருக்கின்றன.

### சட்டமன்றத்திலேயே வேண்டுகோள்!

நான் மட்டுமல்ல, முதலமைச்சர் மட்டுமல்ல, சட்டமன்றத்திலேயே பேசினேன். “அனைவரின் வீட்டுக்கும் பரிசுப் பொருட்கள் கொடுக்கும் பொழுதும் தயவுசெய்து மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கின்ற பொருட்களைக் கொடுங்கள்” என்று வேண்டுகோள் வைத்தேன். ஏனென்றால், நீங்கள் தயாரிக்கின்ற பொருட்கள் அவ்வளவு தரமாக இருக்கும் என்ற நம்பிக்கையில்தான்.

இந்த நேரத்தில் ஈரோடு மாவட்டத்தில் சிறப்பாகச் செயல்படுகின்ற ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் சுய உதவிக்குழுக்கள் செயல்பாடுகள் சிலவற்றை மட்டும் உங்களோடு பகிர்ந்துகொள்வதில் பெருமை கொள்கின்றேன். ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டாரம் அட்டவணை அனுமன் பள்ளி ஊராட்சியில் `ஒற்றுமையே வெற்றி’ என்ற நோக்கத்துடன் செயல்படும் அட்டவணை அனுமன் பள்ளி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் கார்மெண்ட்ஸ் தொழிலை மிகச் சிறப்பாகச் செய்து வருகின்றார்கள்.

உங்களுடைய தொழிலை விரிவாக்கம் செய்திட, இந்த மேடையில் ரூபாய் 90 லட்சம் வங்கிக் கடன் இணைப்பை வழங்க இருக்கின்றோம். உங்களுடைய தொழில் சிறக்க, என்னுடைய வாழ்த்துகள். கோபி வட்டாரம் மேவணி ஊராட்சியில் துணி வியாபாரம் செய்து வரும் மேவணி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் சிறப்பாக செயல்பட்டு, வெற்றிகரமாக உங்கள் கூட்டமைப்பை நிகழ்த்தி வருகின்றீர்கள். இன்றைக்கு இந்த மேடையில் உங்களின் கூட்டமைப்பின் தொழில் விரிவாக்கத்திற்காக ரூபாய் 40 லட்சம் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட இருக்கின்றது. உங்களுக்கு என்னுடைய வாழ்த்துகள். என்னுடைய பாராட்டுகள்.

அதேபோல் துணி வியாபாரம், ஜமுக்காளம் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்ற அம்மாப்பாளையம் ஊராட்சி அளவிலான சகோதரிகள் தாமரை டான்வா மகளிர் சுய உதவிக் குழு மற்றும் செல்லியாண்டியம்மன் மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகளுக்கும் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள்.

எனவே, அரசின் அத்தனை திட்டங்களையும் பயன்படுத்திக் கொண்டு பெண்கள் தங்கள் வீட்டையும் நாட்டையும் முன்னேற்ற, வளர்ச்சி அடைய செய்ய நீங்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தக்கூடிய அனைத்து திட்டங்களுக்கும் நீங்கள் தான் நம் முதலமைச்சரின் தூதுவர்கள். இந்த அனைத்துத் திட்டங்களையும் நீங்கள்தான் மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

உங்களுக்கு இங்கே கடன் வழங்கப்பட்டது. அதை வெறும் கடன்தொகையாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய திராவிட மாடல் அரசு பார்க்கவில்லை. உங்களின் உழைப்பின் மீது வைத்திருக்கக்கூடிய நம்பிக்கையாகதான் நம் முதலமைச்சர் அவர்கள் பார்க்கிறார். இந்த நிகழ்ச்சியை முடித்துவிட்டு கோவை சென்று அங்கிருந்து மும்பை செல்கின்றேன்.

### விளையாட்டுத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற மாநிலம்!

இன்றைக்கு இந்தியாவிலேயே விளையாட்டுத் துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற மாநிலம் என்று தமிழ்நாட்டை தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். எனவே, அந்த விருதைப் பெறுவதற்கு முன்பு, தாய்மார்கள் உங்களுடைய வாழ்த்துகளைப் பெறுவதற்காகதான் இங்கு வந்திருக்கின்றேன்.

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் கீழ் நலத்திட்டங்களைப் பெற்ற பயனாளிகள் உங்கள் அனைவருக்கும் மீண்டும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் முத்துசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், ஏ.ஜி.வெங்கடாசலம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையின் அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் செந்தில்குமார் ஐ.ஏ.எஸ், ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்ரமணியம், துணை மேயர் செல்வராஜ், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் நவமணி கந்தசாமி, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திவ்யலட்சுமி ஐ.ஏ.எஸ், செயல் இயக்குநர் ஸ்ரேயாசிங் ஐ.ஏ.எஸ், மாவட்ட ஆட்சித் தலைவர் ராஜகோபால் சிங்காரா ஐ.ஏ.எஸ்., ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் சிவகிருஷ்ணமூர்த்தி ஐ.ஏ.எஸ்., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜவகர் ஐ.பி.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் சாந்தகுமார்,

ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் நல்லசிவம், நெசவாளர் அணிச் செயலாளர் சிந்து ரவிச்சந்திரன், இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் திருவாசகம், திருவேங்கடம் உள்ளிட்ட கழகத்தினர் பலரும் கலந்துகொண்டனர்.

மேலும் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் அமைச்சர்கள், மக்கள் பிரதிநிதிகள் காணொலிக் காட்சி வாயிலாக இணைந்திருந்தனர். ஈரோட்டில் நலத்திட்ட உதவிகள் கொடுக்கத் தொடங்கியதும் அந்தந்த மாவட்டங்களில் அவர்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினர்.





ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தந்த கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளர் வீட்டு வசதி துறை அமைச்சர் சு. முத்துசாமி முன்னிலையில் கழக இளைஞர் அணி துணைச் செயலாளர் கே.இ.பிரகாஷ் ஏற்பாட்டில் ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கிளாம்பாடி பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் கே.தர்மராஜ் விபத்தில் அடிபட்டு கால் அறுவை சிகிச்சை செய்யப்பட்ட நிலையில் அவருக்கு மருத்துவ உதவி தொகை ரூபாய் 1,00,000 மற்றும் ஈரோடு மாநகரம் கோட்டை பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.நடராஜ் சிறுநீரக பாதிப்பு சிகிச்சை பெறுவதற்காக மருத்துவ உதவித்தொகை ரூபாய் 50,000 அவர்களிடம் வழங்கினார்.

## கூட்டாட்சி உருக்குலைந்த நாட்டை பிரதமர் மோடி உருவாக்குகிறார்!

# நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெறும்!

## மாநிலங்களவையில் திருச்சி சிவா பேச்சு!

புதுடெல்லி, பிப். 9-

**கூட்டாட்சி உருக்குலைந்த நாட்டை பிரதமர் மோடி உருவாக்கி வருகிறார் எனவே வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 'இந்தியா' கூட்டணி வெற்றி பெற்று நாட்டை அதன் உண்மையான இடத்திற்கு கொண்டு வரும் என்று மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.**

அவர் பேசியது வருமாறு:

ஒன்றிய அரசால் நியமிக்கப்பட்ட சில ஆளுநர்களை போல அல்லாமல், ஒன்றிய அரசால் கொடுக்கப்பட்ட குறிப்பை, மரபுக்கு மீறி எவ்வித திருத்தமும் செய்யாமல் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் வாசித்த குடியரசு தலைவருக்கு நன்றி சொல்லி என் உரையை தொடங்குகிறேன்.

இந்த அரசு கூட்டாட்சிக்கு எதிரானது, மதச்சார்பின்மைக்கு எதிரானது, ஏழைகளுக்கு எதிரானது, பணக்காரர்களுக்கு ஆதரவானது, பெண்களுக்கு எதிரானது, சிறு தொழில்களுக்கு எதிரானது, பொதுத்துறை நிறுவனங்களுக்கு எதிரானது, பெரு முதலாளிகளுக்கு ஆதரவானது, விவசாயிகளுக்கு எதிரானது, தொழிலாளர்களுக்கு எதிரானது. ஒன்றிய ஒன்றிய அரசுக்கு ஆதரவானது, மாநில அரசுகளுக்கு எதிரானது! ஏன் நான் இவற்றையெல்லாம் சொல்கிறேன்?

அரசுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டுகளை தவிர்த்து விட்டு செல்ல முடியாது! மேலும் இவை அடிப்படை ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளும் அல்ல!

இந்த அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மாநிலக் கட்சிகளையும், உள்ளூர் பிரச்சனைகளையும் குறைத்து மதிப்பிடுவதற்கான முயற்சிகள் பட்டவர்த்தனமாக செய்யப்படுகின்றன.

இந்த அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையோடு நடந்து கொள்வதற்கு நாங்களே அனுபவப்பட்ட சாட்சி. உதாரணத்திற்கு வருவாய் அதிகார பங்கீட்டை எடுத்துக் கொள்ளுங்கள். 14ஆவது நிதிக் குழு 42 சதவீதம் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் நாம் அவ்வளவு பெறுவது இல்லை.அது 34 சதவீதம் பிறகு 31.3 சதவீதம் எனக் குறைந்து தற்போது மிகவும் குறைவாக 25 சதவீதம் பெறுகிறோம்.

2021-22 ஆம் நிதி ஆண்டில் ஒரு லட்சத்து 70 ஆயிரம் கோடியாக இருந்தது அடுத்த ஆண்டு குறைந்து, ஒரு லட்சத்து 40 ஆயிரம் கோடியாகி, தற்போது ஒரு லட்சத்து 24 ஆயிரம் கோடி ஆகிவிட்டது. தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு மிகப் பெரிய அளவில் நேரடி வரியை வழங்கி வருகிறது. ஆனால் நாங்கள் தமிழ்நாட்டில் இருந்து ஒரு ரூபாய் ஒன்றிய அரசுக்கு வரியாக செலுத்தினால் பங்கீட்டுத் தொகையாக 29 பைசா மட்டுமே திரும்ப கிடைக்கிறது. ஆனால் இதே உத்தரபிரதேசத்தை எடுத்துக் கொண்டால் அவர்கள் ஒரு ரூபாய் வரியாக கட்டி இரண்டு ரூபாய் 73 பைசா பங்கிட்டு தொகையாக திரும்பப் பெறுகிறார்கள்.

**இது என்ன ஏற்றத்தாழ்வு? ஏன் இந்த பாகுபாடு?**

இது என்ன ஏற்றத்தாழ்வு? ஏன் இந்த பாகுபாடு? ஒரே நாடு என்கிறீர்கள், அனைவரும் சமம் என்கிறீர்கள், பிறகு ஏன் இந்த துரோகம்? ஜிஎஸ்டி நடைமுறையை எடுத்துக் கொண்டால் உத்தேசமாக தமிழ்நாட்டுக்கு 20,000 கோடி இழப்பீடு ஏற்படுகிறது. அவசர அவசரமாக ஜிஎஸ்டியை அமல்படுத்தியதன் விளைவு இது. நாங்கள் ஏராளமாக அனுபவித்து விட்டோம்.

சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை முன்னெடுத்துச் செல்ல முடியவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களுக்கு எது தேவையோ அதை சட்டமாக சட்டமன்றத்தில் நிறைவேற்றுகிறது. ஆனால் அப்படி நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை அனுமதி பெறுவதற்கோ சட்டமாக மாற்றுவதற்கோ குறுக்கீடாக தடையாக ஆளுநர் மாளிகை இருக்கிறது . இதனால் அதிலும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் சட்டங்களை நிறைவேற்ற தடுமாறி வருகின்றன. எங்கெல்லாம் எதிர்க்கட்சிகள் ஆளுகிறதோ, அங்கெல்லாம் இந்த ஒன்றிய அரசின் கங்காணிகள் நுழைந்து மாநில அரசை செயல்பட விடாமல் அவர்களின் கைகளை கட்டிப்போட்டுள்ளன. மிக முக்கியமாக தற்போது தமிழ்நாட்டில் மிகப் பெரிய வெள்ளச் சேதம். முதலில் புயலாக புறப்பட்டு பின்பு பெரும் மழையாக மாறியது .தென் மாவட்டங்களும் தலைநகர் சென்னையும் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டன . நாங்கள் உடனடி நிவாரண நிதியாக 5000 கோடி ரூபாய் கேட்டோம் ஆனால் 450 கோடி தந்தார்கள் கேட்டதில் பத்து சதவீதம் கூட தரவில்லை. பிறகு பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நேரில் சம்பவ இடங்களுக்கு வந்து அங்கு என்ன நடந்துள்ளது என்பதை பார்வையிட்டார்.

பிரதமரை தமிழ்நாடு முதலமைச்சர் நேரில் சந்தித்து சேதமதிப்பீடு ரூபாய் 37 ஆயிரத்தை உடனடியாக விடுவிக்க கேட்டுக் கொண்டார் ஆனால் எதுவும் நடக்கவில்லை. பிறகு நாடாளுமன்றத்தின் அனைத்து கட்சி குழு சென்று உள்துறை அமைச்சரை சந்தித்து இழப்பீடு வழங்குமாறு சொன்னது. செய்வதாக சொன்னார் உள்துறை அமைச்சர். ஆனால் செய்யவில்லை. நெருக்கடியான இப்படிப்பட்ட நேரங்களிலும் கூட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்கள் எவ்வாறு மோசமாக பாதிக்கப்படுகின்றன என்பதற்கு அவர்களே சாட்சியாக இருக்கிறார்கள். இது ஒன்றிய அரசு மாநில அரசை நடத்தும் கூட்டாட்சி தத்துவத்திற்கு முரணானது. ஆகையால்தான் நான் இந்த அரசை கூட்டாட்சி தத்துவத்திற்கு முரணான அரசு என்று குற்றம் சாட்டுகிறேன். இது சாதாரணமாக அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு மட்டுமல்ல இதுவே உண்மை.



**மாநிலங்களின் கருத்தை ஒன்றிய அரசு கேட்பதில்லை!**

உதாரணத்திற்கு எனது அண்டை மாநிலமான ஆந்திர பிரதேசத்தை எடுத்துக் கொள்வோம். கடந்த பத்து ஆண்டுகளாக கட்சிப் பாகுபாடு இன்றி இதை நான் கேட்டு வருகிறேன். ஆந்திர பிரதேச மறுசீரமைப்புச் சட்டம் 2014க்கு பிறகு அவர்கள் தங்கள் மாகாணத்துக்கு சிறப்பு அந்தஸ்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். போலாவரம் திட்டம் நமக்கு மிகவும் அறிமுகமான ஒன்று. ஆனால் அது சம்பந்தமாக எதுவுமே கவனத்தில் கொள்ளப்படவில்லை காரணம் அங்கு பிஜேபி ஆட்சியில் இல்லை. பத்தாண்டுகள் ஓடி விட்டன. ஆனால் இன்னும் அவர்கள் தங்கள் மாகாணத்துக்கு சிறப்பு அந்தஸ்து கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள் எதுவும் நடக்கவில்லை. இப்படித்தான் மாகாணங்கள் கூறுகின்ற எதையும் காதிலே கேட்காமல் இந்திய அரசு நடந்து கொள்கிறது. இது நியாயமான முறை அல்ல என்று நாங்கள் சொல்லுகிறோம்.

ஏன் நான் மதச்சார்பின்மைக்கு முரணான அரசு என்று சொல்கிறேன்? குடியுரிமை திருத்தச் சட்டத்தை நான் நினைவிற்கு கொண்டு வர விரும்புகிறேன். மத ரீதியாக துன்புறுத்தப்பட்டு அண்டை நாடுகளிலிருந்து அகதியாக வருபவருக்கு மிகவும் நேர்மையாக, ரொம்ப தாராளமாக குடியுரிமை அளிக்கப்படுவதாக வெளிப்படையாக தெரிந்தது. ஆனால் அந்த மசோதா சட்டமாக்கப்படும் போது தெளிவாகச் சொல்லியது என்னவென்றால் 2014க்கு முன் பதிவு செய்யப்பட்டவர்கள்,மூன்று அண்டை நாட்டிலிருந்து வந்தவர்கள், ஐந்து மதத்தைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமே குடியுரிமை வழங்கப்படும் என்று சொல்லியது. அந்த மூன்று அண்டை நாடுகள் பாகிஸ்தான் பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான். அந்தக் குறிப்பிட்ட ஐந்துமதம் இந்துக்கள் கிறிஸ்தவர்கள் பார்சிகள் சீக்கியர்கள் மற்றும் பௌத்தர்கள். எங்களுடைய கேள்வி என்னவென்றால் தாராளமாக குடியுரிமை வழங்கப்படும் பொழுது மதரீதியாக துன்புறுத்தப்படுபவர்கள் பட்டியலில் இருந்து இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்களை மட்டும் ஏன் தவிர்த்தீர்கள்? மூன்று அண்டை நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றால் நீங்கள் ஏன் மற்றொரு அண்டை நாடான இலங்கையை தவிர்த்து விட்டீர்கள் ? இலங்கையில் இருந்து வந்து ஒன்றரை லட்சம் தமிழர்கள் இங்கே குடியுரிமை இல்லாமல் வாழ்கிறார்கள். குடியுரிமை இல்லாமல் அவர்கள் ஒவ்வொரு நாளும் அனுபவிக்கும் சித்திரவதைகளை இங்கே விவரிக்க முடியாது. பலமுறை அவற்றை நாங்கள் இங்கே கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம் ஆனால் கவனிக்கப்படவில்லை. அதனால் அந்த மசோதாவிற்கு நான் இங்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தேன். மத மற்றும் இன அடிப்படையில் ஆன ஒடுக்குமுறைக்கு ஆளான அண்டை நாட்டில் இருந்து வருபவர்கள் என்று சேர்த்து அதில் நான்காவது நாடாக இலங்கையையும் ஆறாவது மதமாக இஸ்லாமையும் சேர்த்துக் கொள்ள திருத்தம் கொண்டு வந்தேன் .அந்தத் திருத்தம் இந்த அரசால் இங்கே தோற்கடிக்கப்பட்டது.

முத்தலாக் மசோதா கொண்டு வரப்பட்டபோது அந்த மசோதா இஸ்லாமிய பெண்களுக்கு ஆதரவானது என்று சொல்லப்பட்டது. எல்லோரும் ஓ அப்படி இருக்கட்டும் என்று சொன்னார்கள். ஆனால் உண்மையில் அது இஸ்லாமிய ஆண்களை பலிகடாவாக்கும் ஒரு மசோதா. அரசாங்கம் கொண்டுவரக்கூடிய ஒரு மசோதா பாதுகாக்க கூடிய மசோதாவாக இருக்க வேண்டுமே தவிர பலிகடாவாக்கக் கூடிய மசோதாவாக இருக்கக் கூடாது .நான் விதவைகளின் நல்வாழ்வுக்காக ஒரு தனி நபர் மசோதா கொண்டு வந்தேன்.

துணைத் தலைவர் அவர்களே இந்தியாவில் நாலரை கோடி விதவைகள் இருக்கிறார்கள் பிருந்தாவனில் மட்டும் 20 முதல் 60 வயதுக்கு உட்பட்ட ஒன்றரை லட்சம் விதவைகள் இருக்கிறார்கள். அவர்கள் நாதியற்றவர்கள். அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், ரிக்ஷா இழுக்கிறார்கள், சிலரால் சுரண்டப்படுகிறார்கள் . தமிழ்நாட்டில் விதவைகளுக்காக பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. நான் தகவலுக்காக சொல்லுகிறேன் இந்த அவையில் நான் கொண்டு வந்த அந்த விதவைகளுக்கான மசோதா தோற்கடிக்கப்பட்டது.

பெண்களின் நலனுக்காக, அதிலும் குறிப்பாக இஸ்லாமிய பெண்களின் நலனுக்காக முத்தலாக் மசோதா கொண்டுவரப்படுவதாக சொல்கிறீர்கள் ஆனால் உண்மை அது அல்ல. நீங்கள் இஸ்லாமிய ஆண்களை தண்டிப்பதற்காக இந்த முத்தலாக் மசோதாவை கொண்டு வருகிறீர்கள். பெண்களின் நலனில் உண்மையிலேயே அக்கறை கொண்டவர்களாக இருந்தால் ஏன் விதவைகள் நல்வாழ்வுக்காக நான் கொண்டு வந்த மசோதாவை ஆதரிக்கவில்லை. இது இரட்டை நிலைப்பாடு.

**மகளிர்க்கு எதிரான ஒன்றிய அரசு!**

பெண்கள் இட ஒதுக்கீடு மசோதா கொண்டுவரப்பட்ட போது பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நீண்ட நாள் ஆசை நிறைவேறியதாகச் சொன்னார்கள். ஆனால் எப்பொழுது?மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்த பிறகு , தொகுதி வரையறை செய்து முடித்த பிறகு! இவையெல்லாம் செய்வதற்கு நீண்ட காலம் பிடிக்கும். இது வேகமாக ஓடச் செய்ய குதிரைக்கு முன் நீட்டும் கேரட்டை போல உள்ளது.இவர்கள் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டது போன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள், ஆனால் உண்மை அது அல்ல. நீங்கள் உண்மையிலேயே பெண்கள் நலனில் அக்கறை கொண்டவர்களாக இருந்தால், இந்த அரசுக்கு நான் பரிந்துரைக்கிறேன் நீங்கள் அவ்வளவு தூரம் செல்ல வேண்டியதில்லை.

மீண்டும் சொல்கிறேன் என்னுடைய மாநிலமான தமிழ்நாட்டில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் 40 சதவீத இட ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது. ஏன் நீங்கள் கொடுக்கவில்லை? ஏன் நீங்கள் கொடுக்கக் கூடாது?என்னுடைய தனிநபர் மசோதா கிடப்பில் கிடக்கிறது. அதனால் தான் நான் சொல்கிறேன். இந்த அரசு பெண்களுக்கு எதிரானது. மதச்சார்பின்மைக்கு எதிரானது . நாட்டு பிரிவினையின் போது அனைத்து முஸ்லிம்களும் என்னோடு பாகிஸ்தானுக்கு வாருங்கள் என்று முகமது அலி ஜின்னா அழைத்தார். ஆனால் இங்குள்ள முஸ்லிம்கள் நாங்கள் முஸ்லிம்கள்தான், ஆனால் எங்களது தாய் நாடு இந்தியா என்று இங்கேயே இருந்து விட்டார்கள். இந்த நாட்டுக்காக தியாகங்கள் செய்கிறார்கள் .எத்தனையோ முஸ்லிம்கள் இராணுவத்தில் பணியாற்றுகிறார்கள்.

அப்துல் கலாமை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். நாட்டில் அனைவரும் பாதுகாப்பாக இருப்பதை உணர வேண்டும் ஆனால் இங்கு அப்படி இல்லை. இவை அனைத்தையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இவை அனைத்தையும் அடிப்படை காரணங்களாக கொண்டு தான் நான் இது மதச்சார்பின்மைக்கு எதிரான அரசு என்று சொல்லுகிறேன். இந்த அரசின் அணுகுமுறையை பொறுத்து தான் இது பெண்களுக்கு எதிரான அரசு என்று நான் சொல்லுகிறேன்.

என்னுடைய சக நாடாளுமன்ற உறுப்பினர் இந்த பலவற்றை மேற்கோள்காட்டினார். மக்கள் தொகை அடிப்படையில் சமமாக இருக்கின்ற இந்தியாவையும் சீனாவையும் தனிநபர் வருமான அடிப்படையில் ஒப்பிட்டால் , இந்தியாவின் அளவு சீன தனிநபர் வருமானத்தில் நான்கில் ஒரு பங்கு ஆகும். நாட்டின் மீது அக்கறை கொண்டவனாக ஒரு நல்ல குடிமகனாக ஒரு நல்ல நாடாளுமன்ற உறுப்பினராக நான் ஒரு அதிர்ச்சி தரத்தக்க செய்தியை இங்கே சொல்ல விரும்புகிறேன். பட்டினி குறியீட்டில் உலகத்தில் 139 வது இடத்தில் இந்தியா உள்ளது.

ஜி-20 மாநாட்டை மிகவும் வெற்றிகரமாக நடத்தி முடித்து விட்டீர்கள் .ஆனால் ஜி 20 உறுப்பினராக உள்ள நாடுகளிலேயே மிகக் குறைந்த தனிநபர் வருமானம் கொண்ட நாடு இந்தியா. 22 கோடி மக்கள் இந்தியாவில் வறுமையில் உழல்கிறார்கள்.குடியரசுத் தலைவர் உரையில் கூட Garibi hatao என்ற கோஷம் இருக்கிறது. ஆனால் நாங்கள் 25 கோடி ஏழை மக்களை வறுமையில் இருந்து மீட்டு விட்டோம் என்று சொல்கிறீர்கள் அப்படியானால் இது எங்கிருந்து வந்தது? இன்னும் 22 கோடி மக்கள் வறுமை கோட்டிற்கு கீழே இருக்கிறார்கள்? இது என்ன குறியீடு ? வறுமை கோட்டிற்கு கீழ் என்பதை எந்த அளவுகோலை வைத்து தீர்மானிக்கிறீர்கள்?

**பெருமுதலாளிகளுக்கு ஆதரவானவர்கள்!**

கிராமப்புறத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 27 ரூபாய் வீதம் ஒரு மாதத்திற்கு எண்ணிக்கை 816 ரூபாய். அதுவே நகர்ப்புறத்தில் ஒரு குடும்பத்திற்கு ஒரு நாளைக்கு 33 ரூபாய் வீதம் ஒரு மாதத்திற்கு ஆயிரம் ரூபாய். கற்பனை செய்து பாருங்கள் ஒரு மாதத்திற்கு 800 ரூபாயோ அல்லது ஆயிரம் ரூபாயோ கொண்டு வாழ முடியுமா? குடும்பம் நடத்த முடியுமா ? ஆனால் அரசின் சார்பில் வாசிக்கப்பட்ட குடியரசுத் தலைவர் உரையில் நாங்கள் மக்களை வறுமையில் இருந்து மீட்டெடுத்து விட்டோம், உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா இருக்கிறது, விரைவில் மூன்றாவது இடத்திற்கு வந்து விடுவோம் என்றெல்லாம் சொல்லி இருக்கிறீர்கள் . அனைத்துக்கும் இந்த கார்ப்பரேட்டுகளே காரணம். நீங்கள் ஏழைகளுக்கு எதிரானவர்கள் பெருமுதலாளிகளுக்கு ஆதரவானவர்கள்.

நாட்டின் மொத்த வருமானத்தில் 57 சதவீதத்தை 10 சதவீத மக்கள் பெறுகிறார்கள். நாட்டின் செல்வத்தில் 65 சதவீதத்தை 10 சதவீத மக்கள் அனுபவித்து மகிழ்கிறார்கள். நாட்டின் செல்வத்தில் மூன்று சதவீதம் மட்டுமே 50 சதவீத மக்களுக்கு செல்கிறது. இந்நிலையில் எப்படி நீங்கள் மக்களை வறுமைக் கோட்டுக்கு மேலே உயர்த்துவீர்கள். இது என் நாட்டு ஏழைகளின் நிலை. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ் 4.14 கோடி பேர் பயன்பெற்றார்கள் தற்போது அது 6.16 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது .கொரோனாவின் போது எத்தனை துறைகள் பாதிக்கப்பட்டன? எதையாவது மீட்டெடுத்தீர்களா? பழைய நிலைக்கு கொண்டு வந்தீர்களா? இல்லை.

ஆனால் அரசாங்கம் சிலரின் ஏகபோகத்துக்கே கவனம் செலுத்துகிறது. அவர்கள் பொருளாதாரத்தையும் அரசின் கொள்கை முடிவையும் கூட கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள் .நான் அவர்கள் யார் என்று சொல்ல விரும்பவில்லை. ஒட்டுமொத்த நாடாளுமன்ற கூட்டத்தொடரே எப்போது பறிபோனது யாருக்காக பறிபோனது என்பது அனைவருக்கும் தெரியும் . சில தனியார் தொழிலதிபர்கள் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.

விவசாயத்திற்கு அடுத்தபடியாக 20 கோடி பேருக்கு வேலைவாய்ப்பளிக்கும் குறு தொழில்கள்துறை நாட்டில் முக்கியமான துறை. இத்துறை நாட்டின் ஒட்டு மொத்த வளர்ச்சி வீதத்தில் 29 சதவீதப் பங்களிக்கிறது. ஏற்றுமதியில் 45 சதவீத பங்களிப்பு வகிக்கிறது . நான் தொழில்துறைக்கான நாடாளுமன்ற நிலை குழுவின் தலைவராக இருப்பதால் எனக்கு இதைப் பற்றி நன்றாக தெரியும். நீங்களும் இதைப் பற்றி நன்றாகவே அறிவீர்கள். இந்த சிறு குறு தொழில் துறை போதுமான அளவுக்கு கவனிக்கப்படவில்லை. அதனால் பல தொழில்கள் நசிந்து விட்டன .பலர் வீதிக்கு வந்து விட்டார்கள்.

2300 தனிப்பட்ட கம்பனிகளின் வாராக்கடன் தொகை ரூபாய் இரண்டு லட்சம் கோடி. இந்திய வங்கிகள் பெரு முதலாளிகளுக்கு 5.3 லட்சம் கோடி கடனை தள்ளுபடி செய்துள்ளனர். நம் நாட்டில் மொத்தம் சிறு குறு தொழில் துறையில் 6 கோடி அலகுகள் உள்ளன. இது 18.65 லட்சம் அலகுகள் அல்லது 19 லட்சம் அலகுகள் செயல்படாமல் இருக்கின்றன. இவற்றின் கடன் மதிப்பு 16 ஆயிரத்து 340 கோடி. இந்த 18 அலகு 19 லட்சம் அலகுகளில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் சுமார் ஒரு கோடி பேர் . இந்த 16 ஆயிரம் கோடி ரூபாயை இவர்கள் திரும்ப செலுத்தாததால் ஒரு கோடி பேர் வேலை இழந்து 19 லட்சம் அலகுகள் நசிந்து விட்டன. ஆனால் 2300 தொழிலதிபர்கள் 2 லட்சம் கோடி ரூபாயை திருப்பி செலுத்தவில்லை. ஏற்கனவே அவர்களுடைய கடன் 5.3 லட்சம் கோடி ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது .இங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இது ஒரு எச்சரிக்கை மணி.

**ரூ.4880 கோடிக்கு விளம்பரங்கள்!**

இந்த அரசு "குறைய அரசு, நிறைய நிர்வாகம்" என்று சொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் குறைந்த சாதனைகள் நிறைய தம்பட்டம் அடிக்கப்படுகிறது . ஆனால் மக்களின் வரிப்பணம் ரூபாய் 4880 கோடி அரசாங்கத்தின் விளம்பரத்திற்காக மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது.

இந்த அவையில் இருக்கிற என் சகாக்கள் அனைவருக்கும் வேளாண் மசோதா எவ்வாறு நிறைவேற்றப்பட்டது என்பதை நினைவு கூற முடியும். பல்வேறு சட்டங்களை நிறைவேற்றி விட்டோம் என்று நீங்கள் பெருமையாக சொல்லிக் கொள்ளலாம். இங்கே பல்வேறு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டிய படி, யாரெல்லாம் அரசாங்கத்திற்கு எதிராக இங்கே குரல் எழுப்பினார்களோ, யாரெல்லாம் அரசின் தவறுகளை சுட்டிக் காட்டினார்களோ, அவர்களையெல்லாம், அந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையெல்லாம் அவையை விட்டு வெளியேற்றிவிட்டு நீங்கள் சட்டங்களை நிறைவேற்றினீர்கள். 2014 ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கத்தை சுட்டிக்காட்டினார்கள். அந்த காலகட்டத்தில் 71% மசோதாக்கள் நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்பட்டன . ஆனால் தற்போது 17 சதவீத மசோதாக்கள் மட்டுமே நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பப்படுகிறது.

ஏன் ஆரம்பத்தில் 71% ஆக இருந்தது தற்போது 17 சதவீதமாக குறைந்துள்ளது. காரணம் என்னவென்றால் மசோதாக்கள் ஆய்வு செய்யப்படுவதை இவர்கள் விரும்பவில்லை. இந்த அவையில் விவாதத்துக்கு ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் 3 மணி நேரம் என ஒதுக்கப்படுகிறது. உறுப்பினர்களுக்கு இரண்டு நிமிடம் மூன்று நிமிடம் என ஒதுக்கப்படுகிறது. ஆனால் நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பினால் அங்கே விரிவான விவாதம் நடக்கும். நாடாளுமன்ற குழுவின் ஆய்வுக்கு அனுப்பினால், அங்கே பங்குதாரர்கள் நேரடியாக சென்று தங்களது பரிந்துரைகளை செய்யலாம் அந்த பரிந்துரைகள் தீவிரமாக பரிசீலிக்கப்படும் அரசாங்கமும் அங்கு வந்து திருத்தம் செய்வதற்கும் பதிலளிப்பதற்கும் கடமைப்பட்டுள்ளது. ஆனால் இந்த அரசாங்கமோ அனைத்து நாடாளுமன்ற குழுவின் முக்கியத்துவத்தையும் இழக்க செய்துவிட்டது.

விவசாயத்துக்கான நிதிநிலை அறிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது ஆனால் உள்துறைக்கும் ராணுவத்துக்கும் மட்டும் நிதிநிலை அறிக்கையில் அதிக நிதி ஒதுக்கப்படுகிறது. அது சரி ஏன் விவசாயத்திற்கான ஒதுக்கீடு மட்டும் குறைந்து கொண்டே செல்கிறது? அவையின் துணைத் தலைவர் அவர்களே விவசாயம் இந்தியாவின் முதுகெலும்பு. மீண்டும் நான் 2008 பொருளாதார மந்தநிலையை நினைவு படுத்த விரும்புகிறேன். அந்தப் பொருளாதார மந்த நிலையால் உலகமே பாதிக்கப்பட்டது. ஐரோப்பாவில் தொடங்கிய அந்த பொருளாதார மந்த நிலை உலகம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்தியது . ஆனால் அந்தப் பொருளாதார மந்த நிலை இந்தியாவை பாதிக்காமல் காத்தது பொதுத்துறை நிறுவனங்களும் வேளாண் துறையுமே ஆகும் . ஆனால் அந்த இரண்டு துறையையுமே தற்போது நீங்கள் நசுக்குகிறீர்கள்.

வேளாண் மசோதா எந்த நோக்கத்திற்காக கொண்டுவரப்பட்டது? ஒரு சில பெரும் முதலாளிகளை ஊக்குவிப்பதற்கு கொண்டுவரப்பட்டது. அதிலும் அந்த மசோதா இந்த அவையில் முறையாக நிறை வேற்றப்படவில்லை. நாடு முழுவதும் விவசாயிகள் வீதிக்கு வந்து போராடிய பின்பு தான் அந்த சட்டம் திரும்ப பெறப்பட்டது. நிதிநிலை அறிக்கையில் விவசாயத்திற்கான ஒதுக்கீடு குறைந்து கொண்டே வருவதோடு மட்டுமல்லாமல் விவசாயிகளின் உற்பத்தி பொருள் ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள். மே மாதம் 2022 ஆவது வருடம் கோதுமை ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள். அதேயாண்டு செப்டம்பர் மாதம் அரிசி ஏற்றுமதிக்கு தடை விதித்தீர்கள் .வெங்காய ஏற்றுமதிக்கு 2022 டிசம்பரில் தடை விதித்தீர்கள். விவசாயிகளை முன்னேற்றவும் இல்லை அவர்களது உற்பத்தி பொருள்களுக்கு ஏற்றுமதிக்கு அனுமதியும் இல்லை அவர்களுக்கு ஆதரவு அளிக்கவும் இல்லை இந்த அரசு. உர விலையும் இடுபொருள்களின் விலையும் உயர்ந்து கொண்டே செல்கிறது . ஆனால் உற்பத்தி பொருட்களின் விலை செலவுக்கு கட்டுபடியாக கூடிய அளவுக்கு இல்லை.

**விவசாயிகளின் வருமானம் உயரவில்லை!**

விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்கு உயர்த்துவதாக வாக்குறுதி அளித்தீர்கள் அது நடக்கவே இல்லை. ஏழு கோடி பேருக்கு வேலை இல்லை ஆனால் நீங்கள் 7 லட்சம் பேருக்கு மட்டுமே வேலை கொடுத்துள்ளீர்கள். ஆனால் ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு புதிய வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என்று வாக்களித்தீர்கள். கருப்பு பணத்தை முற்றிலும் ஒழித்து ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் செலுத்துவோம் என்றீர்கள். சிலர் அவ்வாறு நாங்கள் சொல்லவில்லை என்றார்கள். கருப்பு பணத்தை முற்றிலுமாக ஒழித்தால் ஒவ்வொருவர் வங்கி கணக்கிலும் 15 லட்சம் செலுத்தலாம் என்று தான் சொன்னோம் என்றார்கள். கருப்பு பணத்தை ஒழித்து விட்டீர்களா 15 லட்சம் வங்கி கணக்கில் செலுத்தி விட்டீர்களா? இதெல்லாம் தேர்தலுக்காக சொன்ன வெத்து வாக்குறுதி ஜூம்லா என்று நீங்களே சொல்கிறீர்கள்.

வேளாண் மசோதா எப்படி முறையாக கொண்டு வரப்படவில்லையோ, அதேபோல் அரசியலமைப்புச் சட்டத்தின் 370 வது பிரிவை ரத்து செய்யும் மசோதாவும் முறையற்ற முறையிலேயே நடைபெற்றது. அவை விவாதங்கள் எவ்வாறு நடைபெற வேண்டுமோ அவ்வாறு அவை நடைபெறுவதில்லை. வடகிழக்கு மாகாணங்களின் மீது நீங்கள் அதிக அக்கறை எடுத்துக் கொள்கிறீர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால் மணிப்பூரில் என்ன நடந்தது? அங்கே இரு குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலை உலகமே பார்த்தது.

மணிப்பூரில் அங்கே பிரச்சனை நடந்து கொண்டிருந்த போது பலர் அமைதியாக இருந்தனர். மணிப்பூர் பிரச்சனையால் ஒட்டுமொத்த தேசமே தேங்கியது. பெண்கள் எப்படி நடத்தப்பட்டார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டது நாடாளுமன்றம் மக்களுக்கு கட்டுப்பட்டது. நாடாளுமன்றத்தில் நாங்கள் விவாதிக்க வேண்டும் விவாத பொருளை ஆராய வேண்டும் அதில் நாங்கள் முடிவெடுக்க வேண்டும். நாடாளுமன்றம் என்பது விவாதத்திற்காக. விவாதமே இல்லை என்றால் நாடாளுமன்றம் எதற்காக? உறுப்பினர்கள் தங்களது கோரிக்கைக்கு விளக்கம் அரசாங்கத்திடம் இருந்து பெற வேண்டும் என்பதற்காக நாடாளுமன்ற வருகின்றனர் ஆனால் அங்கே பதிலில்லை அமைதி நிலவுகிறது. மக்களவையில் நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்த போதும் கூட விளக்கம் அளிக்கப்படவில்லை. மணிப்பூர் பற்றி எந்தவிதமான தீர்மானமும் எந்த விதமான விளக்கமும் அரசு தரப்பில் இருந்து அளிக்கப்படவில்லை.

பாதுகாப்பையும் மீறி நாடாளுமன்றத்துக்குள் அத்துமீறி இருவர் ஊடுருவினர். நாங்கள் அது பற்றி விவாதிக்க அனுமதிக்கப்படவுமில்லை அரசாங்கம் அதை பற்றி விளக்கம் அளிக்கவும் இல்லை. நாங்கள் நாடாளுமன்றத்துக்கு வெளியே எதையும் கேட்கவில்லை. நாங்கள் விளக்கம் கேட்கவே விரும்புகிறோம் அரசாங்கம் நாடாளுமன்றத்துக்கு கட்டுப்பட்டது ஆனால் இந்த நாட்டில் என்ன நடக்கிறது? நீங்கள் நாடாளுமன்றத்தில் வந்து விளக்கம் அளிப்பது மக்களுக்கு விளக்கம் அளிப்பது போல ஆனால் அப்படி இங்கு நடக்கவில்லை. எனக்கு கொடுக்கப்படும் நேரத்தால் நான் கட்டுப்படுத்தப்படுகிறேன் . இந்த அரசு நாட்டின் பல பகுதிகளை சீரழித்து விட்டது. எனவே அந்தப் பகுதியில் இருந்து வருகின்ற எனது சகாக்களுக்கு சகோதரிகளுக்கு நான் பேசுவதற்கு வழி விட வேண்டும்.

**தமிழ்நாட்டிற்கு நிதி தரப்படவில்லை!**

தமிழ்நாடு அரசு புயல் நிவாரண நிதியாகவோ வெள்ள நிவாரண நிதியாகவோ கேட்ட நிதி அளிக்கப்படவில்லை. நிதியமைச்சர் மாநிலங்களின் மீது அதிக கவனம் செலுத்த வேண்டும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களின் மீது கவனம் செலுத்த வேண்டும்.

மகாத்மா காந்தி கிராமப்புற இந்தியாவை கனவு கண்டார், பண்டித ஜவஹர்லால் நேரு நவீன இந்தியாவை உருவாக்கினார், லால் பகதூர் சாஸ்திரி வேளாண் இந்தியாவை விரும்பினார், விபி சிங் சமூக நீதி இந்தியாவை உருவாக்கினார், மன்மோகன் சிங் உலகமயமான இந்தியாவை உருவாக்கினார், நரேந்திர மோடி அவர்கள் கூட்டாட்சி உருக்குலைந்த இந்தியாவை உருவாக்குகிறார். நாங்கள் இவற்றையெல்லாம் இங்கு பேசுவதற்கு வருத்தப்படுகிறோம். மக்கள் உங்களுக்கு பத்து ஆண்டுகள் அளித்தார்கள். இந்த பத்து ஆண்டின் ஒட்டு மொத்த விளைவு என்ன? வேலைவாய்ப்பின்மை அதிகரித்து இருக்கிறது வறுமை அதிகரித்திருக்கிறது ஏழைகள் அதிகரித்திருக்கிறார்கள் என்பதை அறிக்கையை சுட்டி காட்டுகிறது. சிறு குறு தொழில்கள் நசுக்கப்படுகின்றன. அப்படிப்பட்ட நசுக்கப்பட்ட தொழில்களை பெரும் முதலாளிகள் தங்களது கைகளில் எடுத்துக் கொள்கிறார்கள். சிறு குறு தொழில்கள் பாதுகாக்கப்பட வேண்டும். நான் ஒன்று இங்கே ஞாபகப்படுத்த விரும்புகிறேன். உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் என்ன நடந்தது? லீக் போட்டிகளில் நடந்த பத்து போட்டியிலும் வெற்றி மேல் வெற்றி குவித்து வந்தது இந்திய அணி . நாட்டிற்கே பெருமை சேர்க்கும் தருணம் என்று அனைவரும் இறுதிப் போட்டியில் காத்திருந்தோம். பிரதமர் அவர்களும் மைதானத்தில் காத்திருந்தார்கள். ஆனால் என்ன நடந்தது.

பத்து போட்டிகளில் வெற்றி மேல் வெற்றி குவித்த இந்திய அணி இறுதிப் போட்டியில் தோற்று விட்டது. நீங்கள் இரண்டு லோக் சபா தேர்தலில் தொடர்ந்து வெற்றி பெற்றீர்கள் இடைத்தேர்தல்களிலும் வெற்றி பெற்றீர்கள் ஆனால் இந்திய கிரிக்கெட் அணிக்கு இறுதிப்போட்டியில் என்ன நடந்ததோ அது போன்று 2024 தேர்தலில் இந்த அரசுக்கும் நடக்கும்.

நாங்களே வேதனைப்பட்டோம், நாங்களே அனுபவித்தோம் இன்று நாங்களே சாட்சியாகவும் இருக்கிறோம். நாங்கள் இங்கே இருக்கிறோம் அவர்கள் அங்கே இருக்கிறார்கள் மீண்டும் சொல்கிறேன் அதிகாரத்தில் இருப்பவர்களை ஏற்றுக் கொள்ள முடியவில்லை . கூட்டாட்சி தத்துவத்தை உயர்த்திப் பிடிக்க விரும்புகிறோம், உரிமைகள் பாதுகாக்கப்பட்ட மாநிலங்கள், மதச்சார்பற்ற நாட்டையே நாங்கள் விரும்புகிறோம். இளைஞர்கள் மீதும் உழைப்பாளிகள் மீதும் கவனம் செலுத்த வேண்டும். இந்தியா அதனுடைய உண்மையான நிலையிலே இருக்க வேண்டும். ஆனால் நீங்கள் அதை செய்யவில்லை.

2024 நாடாளுமன்ற தேர்தலில் ஐ.என்.டி.ஐ.ஏ. கூட்டணி வெற்றி பெறும். இந்தியாவை மீண்டும் அதனுடைய உண்மையான இடத்திற்கு கொண்டு வருவோம்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.



செங்கல்பட்டு மாவட்டம், வையாவூர் கற்பக விநாயகா மருத்துவக் கல்லூரியில் மகளிர் திட்டத்தின் மூலம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் மற்றும் நலத்திட்ட உதவிகளை குறு,சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் வரலட்சுமி மதுசூதனன், எஸ்.எஸ்.பாலாஜி, நகர் நகர்மன்றத் தலைவர் ஜெ.சண்முகம், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆர்.டி.அரசு, உதயா கருணாகரன், கண்ணன், சங்கீதா பாரதிராஜன், வையாவூர் ஊராட்சி மன்றத் தலைவர் காமராஜ், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுக்கள், பொதுமக்கள் ஆகியோர் உள்ளனர்.



நீலகிரி மாவட்டம், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமான பணிகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (08.02.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப்சிங் பேடி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் கௌசிக் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் திருமதி.கீதாஞ்சலி, மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ் உட்பட பலர் உள்ளனர்.



ஒன்றிய அரசு தமிழ்நாட்டிற்கு உரிய நிதியை வழங்காமல் புறக்கணிப்பதை கண்டித்து நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுணில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு குறித்து பொதுமக்களுக்கு விவரிக்கும் வகையில் கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான், தலைமை கழக வழக்கறிஞர் சூரியா வெற்றி கொண்டான் ஆகியோர் முன்னிலையில் மக்களுக்கு அல்வா கொடுக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து கழக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ்.பாரதி தலைமையில் ஒன்றிய அரசை கண்டித்து முழக்கங்கள் எழுப்பி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஒன்றியம், கீரப்பாக்கம் ஊராட்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.அருண்ராஜ், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி, ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, ஒன்றியக் குழுத் தலைவர்கள் ஆர்.டி.அரசு, எஸ்.ஆர்.எல்.இதயவர்மன், பேரூர் செயலாளர் டி.யுவராஜ், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மண்டல முதுநிலை மேலாளர் ரேணுகாம்பாள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளனர்.

## தமிழ்நாட்டில் மழையால் பெரும் பாதிப்பு!

# ஒன்றிய அரசு நிதி இதுவரை தரவில்லை!

## மதுரையில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!!

மதுரை, பிப்.9 -

நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு குழு 07.02.24 அன்று மதுரை மாவட்டத்தில் மக்களை சந்தித்தது. மதுரை பாண்டிக் கோவில் அருகே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தேர்தல் அறிக்கையில் இடம்பெற வேண்டிய பொதுமக்களின் கோரிக்கைகளை பெற்றனர். கோரிக்கை மனுக்களை பெற்ற பின்னர் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

இந்த ஆண்டு நடக்கக்கூடிய நாடாளுமன்ற தேர்தலுகாக திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி நியமிக்கப்பட்டு இருக்கக்கூடிய தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பல்வேறு பகுதிகளுக்கு சென்று அங்கு இருக்கக்கூடிய மக்களை, பல்வேறு துறை சார்ந்த அமைப்புகளை சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகள் எல்லாம் பெற்று தேர்தல் அறிக்கையை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் செய்து வருகிறோம்.

வழக்கமாக திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கை என்பது மக்களுக்கான தேர்தல் அறிக்கையாக எப்போதும் இருக்கும். அதற்காக இந்த ஆண்டும் தேர்தல் அறிக்கை தூத்துக்குடி கன்னியாகுமரி அதை அடுத்து மதுரையிலே இன்று மக்களை சந்தித்து மக்கள் கோரிக்கைகளை மனுவாக வாங்கி வந்துள்ளோம்.

இன்று மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்களின் கோரிக்கைகள் எல்லாம் பெற்று வருகிறோம். முதல்வர் அவர்களின் ஒப்புதலை பெற்று தேர்தல் அறிக்கையில் இடம்பெறும் என்றார்.

இதுவரை நீங்கள் பெற்ற கோரிக்கை மனுக்களில் எந்த பிரச்சினைக்கு அதிகமாக மனுக்கள் வந்தது என்ற கேள்விக்கு?

ஜி.எஸ்.டி.யில் இருக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகள் குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால் சிறு குறு தொழில் செய்யக்கூடிய தொழிலதிபர்கள் மிகப் பெரிய அளவில் பாதிக்கப் பட்டு இருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு கோரிக்கைகளை அளித்திருந்தார்கள். அதேபோல ரயில்வேயில் வழக்கமாக தென் மாநிலங்களுக்கு நிதி குறைவாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அது சம்பந்தமாக பல கோரிக்கைகள் வந்துள்ளது.

**100 நாள் வேலைத்திட்டம்!**

100 நாள் வேலை திட்டத்தில் அதில் இருக்கக்கூடிய பிரச்சினை அதாவது சரியாக சம்பளம் வழங்கவில்லை என்பது உட்பட்ட பல்வேறு பிரச்சினைகளை மக்களிடத்தில் இருந்து கோரிக்கையாக வந்துள்ளது என்றார்.

கூட்டணி கட்சிகளுக்கு முக்கியத்துவம் தரவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டு உள்ளது என்ற கேள்விக்கு?

தமிழக முதல்வர் ஆட்சியை பொறுப்பேற்ற பின்பு தி.மு.க.வுக்கு வாக்களிக்காதவர்கள் கூட ஏன் வாக்களிக்கவில்லை என்று நினைக்க கூடிய அளவிற்கு ஆட்சி நடத்தி வருகிறோம்.

முதல்வர் அவர்கள் கூட்டணி கட்சிகளை மதித்து அந்த பிரதிநிதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களை அரவணைத்து நடத்தி தான் வருகிறார்.

இதுக்கு முன்னாடி இருந்த தேர்தல் அறிக்கை என்பது சட்டமன்ற தேர்தலுக்கான அறிக்கையாக



இருந்தது. அதில் பெரும்பாலும் கொடுக்கப்பட்டிருக்க கூடிய வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறோம். மேலும் ஒவ்வொன்றாகவும் நிறைவேற்றி வருகிறோம்.

மகளிர்க்கு ஆயிரம் ரூபாய் திட்டம் எவ்வளவு நிதி கடுமையான நிதி நெருக்கடிகளும் வழங்கி வருகிறார் முதலமைச்சர். அவ்வாறு சட்டமன்றத்தில் தேர்தல் அறிக்கையில் வழங்கப்பட்ட ஒவ்வொரு வாக்குறுதிகளும் ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறார்.

அதற்கு முன்னால் நாடாளுமன்ற தேர்தலில் அவருடைய வாக்குறுதிகளை அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. இரண்டு தேர்தல் முடிந்துவிட்டது இன்று வரை 15 லட்சம் ரூபாய் யாருக்கும் வந்து சேரவில்லை. யாருக்கும் சரியாக போய் சேராத ஒரு சூழ்நிலை உள்ளது.

அதேபோல தென் மாநிலங்களுக்கு ரயில்வே நிதியானது குறைந்து கொண்டே தான் வருகிறது. கல்விக்காக ஒதுக்கக்கூடிய அந்த நிதி குறைந்து கொண்டே தான் வருகிறது.

**மகளிர்க்கான இட ஒதுக்கீடு!**

பெண்களுக்கான இட ஒதுக்கீடு மசோதா கொண்டு வந்து நிறைவேற்றி இருக்கிறார்கள். ஆனால் அது எப்போது வரும் என்பது தெரியவில்லை. பத்து வருடமாக அல்லது இருபது வருடமாக என்பது கூட தெரியாத ஒரு சூழ்நிலை தான் உள்ளது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் தான் ஒன்றிய அரசில் பயணிக்க வேண்டிய ஒரு அவலமான சூழ்நிலையை இருந்து கொண்டிருக்கிறோம்.

மழையால் சென்னை பாதிக்கப்பட்டது . அதேபோல தென் மாவட்டங்கள் மழையால் பாதிக்கப்பட்டது இன்று வரை தரப்பட்டிருக்கக்கூடிய நிதி எதுமில்லை.

**முதலமைச்சர் வழங்கிய நிவாரணம்**

முதலமைச்சர் அவர்கள் தான் நிவாரணம் கொடுத்து இருக்கிறார்கள். மத்திய அமைச்சர் அமைச்சகத்தில் இருந்து எந்த நிதியும் வந்ததில்லை. மதிப்பீடு செய்ய கமிட்டியினர் மூன்று முறை வந்து விட்டார்கள். இன்று வரை ஒரு பைசா கூட வரவில்லை. இப்படிப்பட்ட ஒரு மனநிலையுடன் தமிழ்நாட்டுக்கு எதையும் செய்யக்கூடாது என்ற ஒரு நிலையில் தான் இருக்கிறார்கள்.

கடந்த சட்டமன்ற தேர்தலில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவே ற்றப்பட்டதா என்ற கேள்விக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். மகளிருக்கு ஆயிரம் ரூபாய் மிக முக்கியமான ஒரு திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட்ட திட்டம். எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.

அதோடு ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருகிறோம். தி.மு.க.வைப் பொருத்த வரை கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நாங்கள் நிறைவேற்றி வருகிறோம் என்றார்.

பேட்டியின் போது அமைச்சர்கள் பி.மூர்த்தி, பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், முன்னாள் எம்.பி., டி.கே.எஸ். இளங்கோவன், அரசு தலைமை கொறடா கோவி செழியன், ஏ.கே.எஸ்.விஜயன், சட்டமன்ற உறுப்பினர்கள் எழிலரசன், எழிலன் நாகநாதன், சென்னை மேயர் பிரியா, மாவட்ட செயலாளர்கள் கோ.தளபதி எம்.எல்.ஏ., ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ.,

சேடப்பட்டி மு.மணிமாறன், கம்பம் ராமகிருஷ்ணன், தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.தமிழரசி, ஆ.வெங்கடேசன், மகாராஜன், சிவகங்கை மாவட்ட துணை செயலாளர் சேங்கைமாறன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் .பி.கே.சேகர்பாபு நேற்று (08.02.2024) சென்னை, மதுரவாயல், மார்கசகாய ஈஸ்வரர் திருக்கோயிலில் ரூ.73.76 இலட்சம் மதிப்பீட்டிலான சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, ரூ. 39.58 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம் மற்றும் மடப்பள்ளியை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர்.க.கணபதி, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர் வே.ராஜன் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி ரமணி மாதவன், திருக்கோயில் செயல் அலுவலர் .க.அருட்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட மாடல் ஆட்சியில் தவறுகள் எங்கு நடந்தாலும்,

# யார் செய்திருந்தாலும் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு எச்சரிக்கை!

சென்னை, பிப்.9-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் நேற்று (08.02. 2024) சென்னை, மதுரவாயல், மார்கசகாய ஈஸ்வரர் திருக்கோயிலில் ரூ.73.76 இலட்சம் மதிப்பீட்டிலான சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கு அடிக்கல் நாட்டி, ரூ.39.58 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம், மடப்பள்ளி மற்றும் பேவர் பிளாக் தரைத்தளம் ஆகியவற்றை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

பின்னர் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்தல், திருக்கோயில் சொத்துக்களை பாதுகாத்தல், நிர்வாக பயன்பாட்டிற்கான அலுவலகங்களை ஏற்படுத்துதல், பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்தி வழங்குதல் போன்ற பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப் பட்டு வருகிறது. அந்த வகையில் 800 ஆண்டுகள் பழமை வாய்ந்த மதுரவாயல், அருள்மிகு மார்கசகாய ஈஸ்வரர் திருக்கோயிலில் ரூ.39.58 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டடம், மடப்பள்ளி மற்றும் பேவர் பிளாக் தரைத்தளம் ஆகியவை பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டும், திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.50 கோடி மதிப்பிலான சொத்து கண்டறியப் பட்டு அதனை பாதுகாத்திடும் வகையில் ரூ.73.76 இலட்சம் மதிப்பீட்டிலான சுற்றுச்சுவர் கட்டும் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

மார்கசகாய ஈஸ்வரர் திருக்கோயிலில் 12 ஆண்டுகளுக்கு முன்பு பாலாலயம் செய்து தொடங்கப்பட்ட திருப்பணிகள் முடிவுக்கு வாராமல் இருந்ததை அறிந்து, இந்த அரசு பொறுப்பேற்றவுடன் திருப்பணிகளை விரைவுப்படுத்தி 2022-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் குடமுழுக்கினை சிறப்பாக நடத்தினோம். இத்திருக்கோயிலுக்கு உபயதாரர் நிதியில் சுமார் ரூ.1.35 கோடி மதிப்பீட்டில் ஐந்து நிலை ராஜகோபுரம் கட்டுகின்ற திருப்பணி விரைவில் தொடங்கி வைக்கப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இன்று வரை 1,360 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நடத்தப்பட்டுள்ளது. நில மீட்பு பணிகளை துரிதமாக மேற்கொண்டு இதுவரை ரூ.5,594 கோடி மதிப்பிலான 6,180 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டு ள்ளன. அதேபோல திருக்கோயில் சொத்துக்களை பாதுகாத்திடும் வகையில் மயிலாப்பூரில் நவீன ரோவர் கருவி உதவியுடன் தொடங்கப்பட்ட நில அளவை பணிகளில் இதுவரை 1,60,191 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு எல்லைக் கற்கள் பதிக்கப் பட்டு திருக்கோயிலுக்கு சொந்தமான நிலம் என அறிவிப்பு பலகைகளும் வைக்கப்பட்டுள்ளன.

திருக்கோயில்களின் முகப்புகளில் கம்பீரமான ராஜகோபுரம் அமைய வேண்டும் என்ற நோக்கத்தினை செயல்படுத்திடும் வகையில் 2022-2023-ஆம் ஆண்டில் 6 திருக்கோயில்களுக்கு ராஜகோபுரம் அமைக்கவும், 2023-2024-ஆம் ஆண்டில் 15 திருக்கோயில்களுக்கு ராஜகோபுரம் அமைக்கவும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், சட்டமன்ற அறிவிப்பில் அறிவிக்கப்படாத 3 திருக்கோயில்களையும் சேர்த்து மொத்தம் ரூ.55.50 கோடி மதிப்பீட்டில் ராஜ கோபுரங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கபாலீஸ்வரர் திருக்கோயில் முன்புறம் நேற்றைய முன்தினம் இரவு தனிநபர் ஒருவர் காகித துண்டுகளை தீயிட்டு எரித்த காட்சியானது திருக்கோயில் சிசிடிவி கேமராவில் பதிவாகி உள்ளது. இதுகுறித்து திருக்கோயில் நிர்வாகம் சார்பில் காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோயிலில் 24 மணி நேரமும் காவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் திருக்கோயிலுக்கு வெளியில் நடந்திருந்தாலும் திருக்கோயிலின் சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் காவல் துறை புலன் விசாரணை மேற்கொண்டு வருகிறது. அதேபோல திருவேற்காடு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் அம்மனின் நகையை உதவி அர்ச்சகர் திருடி, அதை அடகு கடையில் அடமானம் வைத்திருந்தார். அந்த நகையை திருக்கோயில் நிர்வாகம் மீட்டுள்ளதோடு, சம்பந்தப்பட்ட உதவி அர்ச்சகர் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியானது சட்டத்தின்படி நடக்கின்ற ஆட்சி என்பதால் தவறுகள் எங்கு நடந்தாலும், யார் செய்திருந்தாலும் சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ர் க.கணபதி, வே.ராஜன் சென்னை மண்டல இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, மாநகராட்சி மன்ற உறுப்பினர் திருமதி ரமணி மாதவன், திருக்கோயில் செயல் அலுவலர் க.அருட்செல்வன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் CMC ல் மாஸ்டர் ஹெல்த் செக்கப் கிளினிக் கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரி (சிஎம்சி) வேலூர், ராணிப்பேட்டை வளாகத்தில் மாஸ்டர் ஹெல்த் செக்கப் கிளினிக் மற்றும் டி.ஜி.ஹெல்த் அசிஸ்டென்ட் கியோஸ்க் ஆகியவை கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி மற்றும் சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இதில் மருத்துவர்கள் மற்றும் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் ஜெ.லட்சுமணன் மற்றும் திருச்சி சுந்தரம் மருத்துவமனை டாக்டர்.ஷில்பாகாந்தி உடனிருந்தனர்.



பூவிருந்தவல்லி ஒன்றியம் கூடப்பாக்கம் ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 16 லட்சம் ரூபாயில் புதிய நியாய விலை கடை கட்டுவதற்கான பணியை சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊராட்சி துணைச் சேர்மனும். ஒன்றியச் செயலாளருமான கொத்தியம்பாக்கம் டி.தேசிங்கு, ஒன்றிய குழு தலைவர் எம்.ஜெயக்குமார், ஒன்றிய குழு துணை தலைவர் பரமேஸ்வரி கந்தன் ஒன்றிய நிர்வாகிகள் இ.கந்தபாபு, ஜெ.சாக்ரடீஸ், ஜி.சுகுமார், எம்.குணா, பா.கந்தன், ஊராட்சி செயலாளர் எஸ் குணசேகர் கிளைக் கழகச் செயலாளர் தனசேகர் மற்றும் அணிகளின் நிர்வாகிகள் பரணிதரன், குணா பிரவீன், இ.வி.பி.பிரதீப், டி.மணி வண்ணன், எம்.உதயகுமார், கார்த்தி, ராஜேஷ், தியாகராஜ், சிபி, பிரேமா கருப்பாய் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் காட்பாடி வட்டம் கரிகிரி பகுதியில் தமிழ் நாடு நகர்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.42.56கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 400புதிய அடுக்கு மாடி குடியிருப்புகளை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்து பயனாளிகளுக்கு வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் மு.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா, துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழுத் தலைவர் வேல்முருகன், துணைத் தலைவர் சரவணன், மண்டலக் குழுத் தலைவர் புஷ்பலதா, ஒன்றியக் கழகச் செயலாளர் தணிகாசலம், ஊராட்சி மன்ற தலைவர் தேவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (8.2.2024) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நெடுஞ்சாலைத்துறையில், பணிபுரியும் பணியாளர்களுக்கு "பணி மாற்றம் மற்றும் பதவி உயர்வு ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்வின் போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நெடுஞ்சாலைத்துறை முதன்மை இயக்குநர் திருமதி ந.சாந்தி, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் கட்டுமானம் & பராமரிப்பு இரா.சந்திரசேகர் மற்றும் இணை இயக்குநர் (நிர்வாகம்) திருமதி ஆர்.விமலா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் விழா - தொடர் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!

சென்னை, பிப்.9-

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மார்ச் 1-ஆம் தேதி முதல் மார்ச் 25-ஆம் தேதி வரை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள் நடைபெற உள்ளது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:

கழகத் தலைவர், தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், மார்ச் 1-ஆம் தேதி முதல் மார்ச் 25-ஆம் தேதி வரை தொடர்ந்து மாவட்டம் முழுவதும் தொடர் பொதுக்கூட்டங்கள், கீழ்க் கண்ட ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகங்களில் கீழ்க்கண்ட தேதிகளில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள விவரப்படி சிறப்பு பேச்சாளர்களைக் கொண்டு நடைபெற உள்ளது.

1.3.2024 - வெள்ளியன்று காலை 9.00 மணியளவில் - மாவட்டம் முழுவதும் அனைத்து கிளைக் கழகங்களிலும் கழக கொடியேற்றி இனிப்பு வழங்கும் விழா நடைபெற உள்ளது. அன்று பகல் 12.00 மணியளவில் மாவட்டத்தில் உள்ள 37 ஆதரவற்றோர் இல்லங்களில் அறுசுவை உணவு வழங்கப்பட உள்ளது.

அன்று பகல் 12.30 மணியளவில் - காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் பரனூரில் தொழு நோயாளிகளுக்கு உணவு - உடை வழங்கப்பட உள்ளது. மார்ச் 1-ஆம்



தேதியன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவிக்கும் விழா நடைபெற உள்ளது. காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும்,

பல்லாவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகல் 12.00 மணியளவில் குரோம் பேட்டை அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும், பகல் 12.00 மணியளவில் -திருப்போரூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும், பகல் 1 மணியளவில் குன்றத்தூர் அரசு பொது மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவிக்கப்பட உள்ளது.

மார்ச் 2-ஆம் தேதி முதல் மார்ச் 25-ஆம் தேதி வரை நடைபெற உள்ள தொடர் பொதுக்கூட்டங்கள் மற்றும் அந்தந்த ஒன்றிய - நகர-பகுதி-பேரூர்களில் கூட்டம் நடைபெறும் விவரம் வருமாறு : -

2.3.2024 சனி, திண்டுக்கல் ஐ.லியோனி - பல்லாவரம் வடக்கு பகுதி, 3.3.2024 ஞாயிறு- கம்பம் செல்வேந்திரன், கந்திலி கரிகாலன் - செங்கல்பட்டு நகரம், 4.3.2024 திங்கள்- நாஞ்சில் சம்பத், செங்கை தாமஸ் - ஆலந்தூர் தெற்கு பகுதி,

5.3.2024 செவ்வாய் - சுப வீரபாண்டியன், வெ.அன்புவாணன் - குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், 6.3.2024 புதன் - புதுக்கோட்டை விஜயா, ஆரணி மாலா - திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம், 7.3.2024 வியாழன்- கோவி செழியன், ஆலந்தூர் மலர்மன்னன் - பம்மல் தெற்கு பகுதி,

8.3.2024 வெள்ளி - நெல்லிக்குப்பம் புகழேந்தி, சேப்பாக்கம் பிரபாகரன் - திருப்போரூர் தெற்கு ஒன்றியம், 9.3.2024 சனி - சபாபதி மோகன், ஆலந்தூர் ஒப்பிலா மணி - செம்பாக்கம் வடக்கு பகுதி, 10.3.2024 ஞாயிறு- ஈரோடு இறைவன், தக்கோலம் தேவபாலன், செம்பாக்கம் தெற்கு பகுதி,

11.3.2024திங்கள்-சைதை சாதிக், சென்னை அரங்கநாதன்- மறைமலைநகர் நகரம், 12.3.2024 செவ்வாய் - தமிழன் பிரசன்னா, செங்கை சந்தானம் - பல்லாவரம் தெற்கு பகுதி, 13.3.2024 புதன் - ராஜீவ் காந்தி, பரிதி இளம் சுருதி - ஆலந்தூர் வடக்கு பகுதி, 14.3.2024 வியாழன் - மதிவதனி, கவிஞர் நன்மாறன் - குன்றத்தூர் வடக்கு ஒன்றியம்,

15.3.2024 வெள்ளி - குத்தாலம் கல்யாணம், போடி காமராஜ் - திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் - பேரூர், 16.3.2024 சனி - கரூர் முரளி, பென்னேரி சிவா - காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம், 17.3.2024 ஞாயிறு-சேலம் சுஜாதா, நாகம்மை கருப்பையா - தாம்பரம் கிழக்கு பகுதி, 18.3.2024திங்கள்-காரமடை நாகநந்தினி, குடியாத்தம் புவியரசி - கண்டோன் மெண்ட் நகரம்,

19.3.2024 செவ்வாய் - கவிஞர் தமிழ்தாசன், தமிழ் சாதிக் - பம்மல் வடக்கு பகுதி, 20.3.2024 புதன் - சைதை சாதிக், எழும்பூர் கோபி - குன்றத்தூர் நகரம், 21.3.2024 வியாழன் - ஈரோடு இறைவன், அத்திப்பட்டு சாம்ராஜ் - திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம், 22.3.2024 வெள்ளி - ராஜீவ்காந்தி, முரசொலி மூர்த்தி - மாங்காடு நகரம்,

23.3.2024 சனி - தமிழன் பிரசன்னா, திருவொற்றியூர் கருணாநிதி - காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம், 24.3.2024 ஞாயிறு-கான்ஸ்டைன் ரவீந்திரன், தாம்பரம் ஜின்னா - திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் - பேரூர், 25.3.2024 திங்கள் - கோ.வி. செழியன், வண்ணை புகாரி - புனித தோமையார் மலை வடக்கு ஒன்றியம்

எனவே, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள், மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் தொடர் பொதுக்கூட்டம் மற்றும் நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து,

இக்கூட்டத்திற்கான அழைப்பிதழை முறையாக அச்சிட்டு, அந்தந்த ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் அடங்கி உள்ள கழக நிர்வாகிகள் மற்றும் இயக்கத் தோழர்கள் அனைவருக்கும் தந்து, அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து, இப்பொதுக் கூட்ட மேடையிலேயே ஆங்காங்கு உள்ள ஏழை - எளிய மக்களுக்கு நலதிட்ட உதவிகளை வழங்கி நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் எழுச்சியோடு ஏற்பாடு செய்திடும்படி தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (08.02.2024) மும்பையில் நடைபெற்ற "SPORTSTAR ACES–2024" விருது விழாவில் பங்கேற்று, "Best State for Promotion of Sports" (விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்) என்ற பிரிவில் தமிழ்நாடு மாநிலம் தேர்வு செய்யப்பட்டதற்கான விருதை பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா மற்றும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி உடனிருந்தனர்.

### தமிழ்நாட்டிற்கு

# வெள்ள நிவாரண நிதி இதுவரை ஒதுக்கப்படவில்லை!

## மக்களவையில் கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றச்சாட்டு!

புதுடெல்லி, பிப்.9-

தமிழ்நாட்டிற்கு, வெள்ள நிவாரணம் ஜனவரி 27 ஆம் தேதிக்குள் வழங்கப்படும் என ஒன்றிய பா.ஜ.க. அரசு உறுதியளித்த நிலையில், இன்று வரை நிதி ஒதுக்கவில்லை என நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குற்றஞ் சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டைப் புரட்டிப் போட்ட புயல் வெள்ள சேதங்களை சரி செய்யவும் நிவாரண உதவியாகவும் 37 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என தமிழ்நாடு அரசு கோரியிருந்தது. ஆனால் இதுவரை ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு செய்யவில்லை.

இந்நிலையில் இது குறித்து, நாடாளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என்று தி.மு.க. சார்பில், ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. கேள்வி நேரம் முடிந்ததும் அந்த பிரச்சினையை நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எழுப்பினார்.

அப்போது பேசிய அவர்,



ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவைச் சந்தித்து வெள்ள நிவாரணம் வேண்டும் என வலியுறுத்தியதாகவும், ஜனவரி 27 ஆம் தேதிக்குள் வெள்ள நிவாரணம் வழங்கப்படும் என கூறியதாகவும் தெரிவித்துள்ளார். ஆனால், இதுவரை நிதி ஒதுக்கவில்லை என்றும் டி.ஆர். பாலு குற்றஞ்சாட்டினார். பிரச்சினைக்கு பதில் அளிப்பதற்கு நாடாளுமன்றத்தில் தற்போது ஒரு அமைச்சர்கள் கூட இல்லாத நிலை இருக்கிறது என்றும் அவர் கூறினார்.

தமிழ்நாடு தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும், நாடாளுமன்ற கழகக் தி.மு.க. குழுத் தலைவர் டி.ஆர். பாலு குற்றஞ்சாட்டியுள்ளார்.

# ஒடிசாவில் ராகுல்காந்தி நீதி யாத்திரை!

## வழிநெடுகிலும் காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு!

ஜர்சுகுடா, பிப்.9-

ஒடிசா மாநிலம் ஜர்சுகுடாவில் ராகுல்காந்தி, காலை தமது நீதி யாத்திரையை தொடங்கினார். அவருக்கு வழி நெடுகிலும், காங்கிரஸ் தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பளித்தனர். தொண்டர்களிடம் கைகுலுக்கிய படியும், செல்ஃபி எடுத்தும் ராகுல்காந்தி தமது நீதி யாத்திரையை தொடர்ந்தார்.

யாத்திரையில் உரையாற்றிய ராகுல்காந்தி, பிரதமர் நரேந்திர மோடி ஒரு போதும் ஜாதி வாரி கணக்கெடுப்பை நடத்த மாட்டார் என ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஏனென்றால், பிரதமர் மோடி தெலி என்னும் பொது பிரிவைச் சேர்ந்தவர் என்றும், ஆனால் தாம் ஓ.பி.சி. பிரிவைச் சேர்ந்தவர் என்று கூறி மக்களை ஏமாற்றியுள்ளதாகவும் ராகுல்காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி ஓபிசி பிரிவில் பிறக்க



வில்லை. அவர் பொதுப்பிரிவான தெலி என்னும் பிரிவில் பிறந்தார்

தெலி பிரிவு, கடந்த 2000-ல் பா.ஜ.க. அரசால் ஓபிசி பிரிவில் இணைக்கப்பட்டது.

எனவே தான் ஓ.பி.சி, விவசாயிகள், தொழிலாளர்களை அவர் சந்திப்பதில்லை. அதானி உடன் மட்டும் தான் அவர் நட்பு பாராட்டுகிறார்.

தான் ஒரு ஓ.பி.சி. பிரிவை சேர்ந்ததாக கூறி மக்களை ஏமாற்றி வருகிறார். ஒருபோதும் ஜாதிவாரி கணக்கெடுப்பை பிரதமர் மோடி நடத்த மாட்டார் என்று ராகுல் காந்தி குற்றஞ் சாட்டினார்.

### கச்சத்தீவு அருகே

# ராமேசுவரத்தைச் சேர்ந்த 19 மீனவர்கள் சிறைபிடிப்பு!

## மீனவர்களின் 2 விசைப்படகுகளை சிறைப்பிடித்து இலங்கைக் கடற்படை அட்டூழியம்!

ராமேசுவரம், பிப்.9-

கச்சத்தீவு அருகே எல்லைத் தாண்டி மீன்பிடித்ததாக கூறி ராமேசுவரத்தை சேர்ந்த 19 மீனவர்களையும், அவர்களது 2 விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமநாதபுரம் மாவட்டம் ராமேசுவரத்தில் இருந்து நேற்று 430 விசைப் படகுகளில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்வளத்துறை அனுமதி பெற்று கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

அதிகாலை கச்சத்தீவு, நெடுந்தீவு இடையே நடுக் கடலில் ராமேசுவரத்தை சேர்ந்த ரீகன் மற்றும் சசி ஆகியோருக்கு சொந்தமான 2 விசைப்படகுகளில் 17 மீனவர்கள் மற்றும் ஒடிசாவை சேர்ந்த இருவர் என 19 பேர் மீன் பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது, அவர்களை எல்லைத் தாண்டி மீன் பிடித்ததாக கூறி, படகுகளுடன் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்தனர்.

தொடர்ந்து, மீனவர்களின் படகுகளையும் காங்கேசம் துறை முகத்திற்கு அழைத்துச் சென்று இலங்கை கடற்படையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் சிவகங்கை மாவட்டம், இளையான்குடி நகர கூட்டுறவு வங்கியின் மூலம் பொதுக் காலக் கடன் திட்டத்தின்கீழ் 6 பயனாளிகளுக்கு ரூ.5.70 இலட்சம் மற்றும் பெண்களுக்கான புதிய பொற்காலக் கடன் திட்டத்தின்கீழ் 10 பயனாளிகளுக்கு ரூ.10.00 இலட்சம் மொத்தம் 16 பயனாளிகளுக்கு ரூ.15.70 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகள், 5 பயனாளிகளுக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் மற்றும் தேய்ப்பு பெட்டிகளும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தலைவர் காஜாமுகைதீன் (எ) துறைமுகம் காஜா ஆகியோர் வழங்கினர்.



தி.மு.க. செய்தி தொடர்பு அணித் தலைவர் டிகே.எஸ்.இளங்கோவன், இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன், துணை அமைப்பு செயலாளர் ஆஸ்டின், இலக்கிய அணி இணைச் செயலாளர் ஈரோடு இறைவன், மீனவர் அணிச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், துணைச் செயலாளர் விபி. பொன்னரசு ஆகியோர், தி.மு.க. கூட்டணி வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மாபெரும் வெற்றி பெறுவதற்காக நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு 8 வது வார்டைச் சேர்ந்த உதயசூரியன் வடிவேலு முன்னெடுத்துள்ள இரு சக்கர வாகன பிரசாரத்தை கழக தலைமை நிலையமான அண்ணா அறிவாலயத்தில் நேற்று (08.02.24) தொடங்கி வைத்தனர்.

# ஈரோட்டில் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு கடனுதவி - பல்வேறு நலத்திட்ட உதவிகள் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

















பெண்களின் முன்னேற்றத்திற்கு பொருளாதார சுதந்திரமே தொடக்கப்புள்ளி என்பதை உணர்ந்து மகளிர் முன்னேற்றத்துக்காக கழக அரசு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், தமிழ்நாடெங்கும் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2,504 கோடி அளவுக்கு வங்கி கடன் இணைப்புகளை வழங்க முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார். அதன் ஒரு பகுதியாக, தந்தை பெரியார் பிறந்த ஈரோடு மண்ணில் 2,337 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 20,500 மகளிருக்கு ரூ.100.34 கோடி வங்கி கடன் இணைப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். மேலும், மகளிர் சுய உதவிக் குழு சகோதரிகள் தயாரிக்கும் பொருட்களை ஏற்றிச் சென்று விற்பனை செய்திடும் வகையில், ரூ.3.20 கோடி மதிப்பில் 100 மதி எக்ஸ்பிரஸ் மின் வாகனங்கள் வழங்கப்படுவதன் அடையாளமாக, 6 மின் வாகனங்களை ஈரோட்டை சேர்ந்த மகளிருக்கு வழங்கி தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் போன்றவற்றின் கீழ் பல்வேறு நலத்திட்டங்களை வழங்கி பெண்களின் சுயசார்பு பொருளாதாரத்தை உறுதி செய்வதிலும், அவர்களின் வளர்ச்சியிலும் நமது திராவிட மாடல் அரசு என்றென்றும் உறுதியுடன் செயல்படுமென அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தி உரை நிகழ்த்தினார். அப்போது அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்டச் செயலாளர் என்.நல்லசிவம் துணை பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி., ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் எம்.எல்.ஏ., வெங்கடாசலம் எம்.எல்.ஏ., உள்பட அரசு அதிகாரிகள் கழக முன்னணியினர் உடனிருந்தனர்.



குமரிமாவட்ட விசைப்படகு மீன்பிடிப்போர் நலசங்கம் தமிழ்நாட்டில் இரண்டாவதாக மீனவர்களுக்காக குளச்சலில் உருவாக்கப்பட்ட இச்சங்கத்தின் 50 வது பொன்விழா பிப்ரவரி மாதம் 5ம் நாள் குளச்சலில் வைத்து கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சபாநாயகர் அப்பாவு அவர்களுடன் தமிழ்நாட்டின் மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் மனோதங்கராஜ், மேயர் ரெ.மகேஷ் ( கிழக்கு மாவட்டச் செயலாளர்) மற்றும் மாநில மீனவரணி செயலாளர் ஏ.ஜோசப் ஸ்டாலின் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ் நாட்டின் முன்னாள் அமைச்சர் அன்னை லூர்தம்மாள் சைமன் அவர்களின் முழு உருவச் சிலை சபாநாயகர் அப்பாவு அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.



சென்னை, நந்தம்பாக்கம், வர்த்தக மையத்தில், நேற்று (08.02.2024) தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், கணித்தமிழ் 24 மாநாட்டை முன்னிட்டுப் பெறப்பட்ட நூற்றுக்கணக்கான கட்டுரைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து உருவாக்கப்பட்டுள்ள "கணிக்கோவை" நூலை வெளியிட்டார். இம்மாநாட்டில், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர்தீரஜ் குமார், ஏஐ சிங்கப்பூர் திட்டமிடல் குழுவின் தலைவர் டேரிஸ் லியு, பாஷினி அமைப்பின் தலைமைச் செயல் அலுவலர் அமிதாப் நாக், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் இயக்குநர் சே.ரா.காந்தி, உலக நாடுகளின் மொழி அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### திசையன்விளை - இராதாபுரம் - நாங்குநேரி ஆகிய வட்டங்களில்

# மக்களுடன் முதல்வர் திட்டம் மூலம் 1010 பேருக்கு ரூ.3.28 கோடியில் நல உதவிகள்!

## சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு வழங்கினார்!

நெல்லை, பிப். 9 -

நெல்லை மாவட்டம் திசையன்விளை சுடலை யாண்டவர் திருமண மண்டபத்தில் திசையன்விளை, இராதாபுரம், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற"மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் மூலம் பெறப்பட்ட மனுவில் தகுதிபெற்ற 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சட்டப் பேரவை தலைவர் மு.அப்பாவு வழங்கினார்.

நெல்லை மாவட்டம் திசையன்விளை சுடலை யாண்டவர் திருமண மண்டபத்தில் திசையன்விளை, இராதாபுரம், நாங்குநேரி ஆகிய வட்டங்களில் நடைபெற்ற "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் மூலம் பெறப்பட்ட தகுதி பெற்ற பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா தலைமையில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் வி.எஸ்.ஆர்.ஜெகதீஸ், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று தகுதி பெற்ற 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்புள்ள நலத்திட்ட உதவிகளை வழங்கி தெரிவித்ததாவது.

அரசின் சேவைகள் விரைவாகவும், எளிதாகவும், ஏழை, எளிய மக்களை சென்றடையும் வகையிலும் நிர்வாகத்தில் வெளிப்படுத்த தன்மை ஏற்படுத்திடவும் "மக்களுடன் முதல்வர்" என்ற புதிய திட்டத்தினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் 18.12.2023 அன்று கோயமுத்தூர் மாவட்டம் ஆவாரம் பாளையத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

"மக்களுடன் முதல்வர்" என்ற இப்புதிய திட்டத்தின் கீழ் பொதுமக்கள் அதிகமாக அணுகும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நகராட்சி நிர்வாகத்துறை, ஊரக வளர்ச்சி துறை, ஆதி திராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, சமூக நலத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, கூட்டுறவுத்துறை, மகளிர் மேம்பாட்டு கழகம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை, எரிசக்தி துறை,தொழில்கள் துறை ஆகிய 13 அரசு துறைகள் சார்ந்த கோரிக்கைகளைப் பெற்று தீர்வு காண்பதற்கு முதலமைச்சர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் அனைத்து நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு மற்றும் கிராம ஊராட்சி அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்படுகிறது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் மேற்கண்ட 13 அரசுத்துறைகளின் சேவைகள் எளிதில் கிடைத்திடவும், தாமதங்களை தவிர்த்திட வேண்டும் என்பதுதான் இந்த திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

அதன்படி "மக்களுடன் முதல்வர்" திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக நெல்லை மாவட்டத்தில் 05.01.2024 முதல் தொடங்கி 23.01. 2024 வரை நெல்லை மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் நகர்ப்புறங்களை ஒட்டியுள்ள கிராம ஊராட்சிகளில் மொத்தம் 44 முகாம்கள் நடத்தப்பட்டதில் 8261 மனுக்கள் பெறப்பட்டது.

இன்று நடைபெற்ற விழாவில் வருவாய்துறை மூலம் 398 பயனாளிகளுக்கு ரூபாய் 2,56,96,448, இலவச பட்டாக்களும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மூலம் 4 பயனாளிகளுக்கு 23,600 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்களும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 5 பயனாளிகளுக்கு 5,00,000 ம் மதிப்பிலான சக்கர நாற்காலியும், 5 பயனாளிகளுக்கு ரூபாய் 75,000 ம் மதிப்பிலான இலவச திறன் பேசிகளும், சமூக நலத்துறை மூலம் 158 பயனாளிகளுக்கு ரூபாய் 65,25,000 ம் மதிப்பிலான தங்க நாணயங்களும், 440 பயனாளிகளுக்கு இலவச பட்டா, நத்தம் பட்டா,முதியோர், விதவை சான்றிதழ் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ் என மொத்தம் 1010 பயனாளிகளுக்கு ரூபாய் 3,28,20,048 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு ஏழை,எளிய மாணவர்கள் பசியுடன் படிக்கக் கூடாது என உயரிய நோக்கில் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

மேலும் ஸ்மார்ட் வகுப்பறைகள், பெண்கள் உயர் கல்வியில் பயில்வதை ஊக்குவிக்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், இல்லம் தேடி கல்வி,நான் முதல்வன், இன்னுயிர் காப்போம் 48 மணி நேரம் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை வழங்கும் திட்டம் போன்ற முன்னோடி திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறார்கள்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சி காலத்தில் இராதாபுரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளுக்கு கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள் கொண்டு வரப்பட்டது.

இப்பணிகள் பராமரிப்பின்றி கடந்த காலத்தில் மேல் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் இப்பகுதி மற்றும் இராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது. தற்போது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் ரூபாய் 1028 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு குடிநீர் திட்ட பணிகள் முழு வீச்சில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

---

### தென்காசி வடக்கு மாவட்டம்

# வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம் சிவகிரி பேரூர்க் கழகப் பொறுப்பாளர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் வடக்கு ஒன்றியம், சிவகிரி பேரூர்க் கழகச் செயலாளர் செ.சு.செண்பகவிநாயகம் அவர்கள், மாநில மருத்துவ அணி துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவரை பேரூர்க் கழகச் செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக ஜி.சேதுசுப்பிரமணியன், (சிவகிரி, தென்காசி மாவட்டம்) அவர்கள் சிவகிரி பேரூர்க் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட பேரூர்க் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.



திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி சட்ட மன்ற தொகுதிகுட்பட்டதொகுதிகுட்பட்ட திருவள்ளூர் ஒன்றியம் காக்களூர் ஊராட்சியில் உள்ள அரசு மேல் நிலைப்பள்ளியில் படிக்கும் மாணவ மாணவியர்களுக்கு பூவிருந்தவல்லி சட்ட உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தமிழ்நாடு அரசின் விலையில்லா மிதிவண்டி வழங்கினார். உடன் ஒன்றியச் செயலாளர் ஆர்.ஜெயசீலன், ஒன்றிய குழு தலைவர் ஜெயசீலி ஜெயபாலன், பொதுகுழு உறுப்பினர் த.எத்திராஜ், தலைமை ஆசிரியர் சு.ஜெகதீசன், ஒன்றிய நிர்வாகிகள் கே.கே.சொக்கலிங்கம், டி.எம்.ராமச்சந்திரன், டி.கே.சீனிவாசன், எஸ். சௌந்தரராஜன், ஒன்றிய கவுன்சிலர் டி.கே.பூவண்ணன், த.சுகுமார், ஶ்ரீதர், சங்கர், பிரபு, சிவா பிரகாஷ், சதீஷ், எம்.கார்த்தி, மதன், விக்கி, ஜெயபாலன், கதிரவன், வேலு தம்பி, முருகன், பாலாஜி, செந்தில், பரதன், எட்டிப்பன் உள்பட கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்ளனர்.

### ஈரோடு

## கே.சந்திரசேகர் இல்ல மண விழா!

ஈரோடு, பிப். 9 -

ஈரோடு மாநகரக் கழக துணைச் செயலாளர் கே. சந்திரசேகர் இல்ல மண விழா வரவேற்பு நாளை நடைபெறுகிறது.

இது பற்றிய விவரம் வருமாறு:-

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துகளுடன் ஈரோடு மாநகரக் கழக துணைச் செயலாளர் கே.சந்திரசேகர் மகனும் மாமன்ற உறுப்பினர் சி.பிரவீனா சகோதரருமான சி.பிரதீப்பிற்கும், வீரமணி - மதியழகி ஆகியோரின் மகள் வீ.சௌமதிக்கும் திருமண வரவேற்பு விழா 10.2.2024 சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மேல் 9 மணிக்குள் ஈரோடு திண்டல் மேட்டுக்கடை தங்கம் மஹால் - IIல் நடைபெற உள்ளது.

நாளை திருமண வரவேற்பு விழாவில் மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள், ஆன்றோர் சான்றோர்கள், அனைத்து கட்சி பிரமுகர்கள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் -2024

## 'நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு' மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## (திருத்தப்பட்டது)

# தலைமைக் கழக அறிவிப்பு

மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர்** அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்றத் தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்க இருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், நெசவாளர்கள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், கல்வியாளர்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க. தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

## தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

## (திருத்தப்பட்டது)

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| 2024 " பிப்ரவரி - 9 | ஓசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| " பிப்ரவரி - 10 காலை | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| மாலை | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு,கரூர் |
| " பிப்ரவரி - 11 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு |
| " பிப்ரவரி - 16 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| " பிப்ரவரி - 17 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| " பிப்ரவரி -18 காலை | வேலூர் | வேலூர் ,இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| மாலை | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| " பிப்ரவரி 21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் : 6.2.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள சிறுதானிய உணவகத்தை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து, விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள சிறுதானிய உணவுகளை பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி.எழிலரசன், மாநகராட்சி மேயர் எம்.மகாலட்சுமி யுவராஜ், ஒன்றியக் குழுத் தலைவர்கள், எஸ்.டி.கருணாநிதி, ஆர். கே.தேவேந்திரன் ஆகியோர் உள்ளனர்.



ஆவடி மாநகராட்சி அருகில் உள்ள கலைஞர் திடலில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சி.பி.ஐ.எம் மற்றும் தோழமை கட்சிகள் சார்பில் எதிர்க்கட்சி ஆளும் மாநிலங்களில் ஆளுநர்கள் அத்துமீறல், மாநில உரிமை கூட்டாட்சி கோட்பாடுகளுக்கு எதிராக செயல்படும் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மாநில அளவில் நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்தில் தலைமை கழக ஆலோசனைப்படி முன்னாள் அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பங்கேற்று கண்டன உரையாற்றினார். உடன் மாநகர மேயர் ஜி. உதயகுமார், மாநகர பொறுப்பாளர் சண் பிரகாஷ், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, மாவட்ட துணை செயலாளர் காயத்திரி ஸ்ரீதர், தோழமைக் கட்சி நிர்வாகிகள் அந்திரிதாஸ், பூபாலன், மயில்வாகனன், அமீத்பாபு, டி.தேசிங்கு, ஜி.ராஜேந்திரன், ஜி.நாராயனபிரசாத், பேபி சேகர், பொன்.விமல், ப.ச.கமலேஷ், தி.வை.இரவி, உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### மதுரையில் எய்ம்ஸ்

# மருத்துவக் கல்லூரி கட்டப்படுவதில் தாமதம் ஏன்?

## மக்களவையில் கலாநிதி வீராசாமி கேள்வி!

புதுடெல்லி, பிப். 9-

'மதுரையில் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி கட்டப்படுவதில் தாமதம் ஏன்?' என்று நாடாளுமன்ற மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி கேள்வி எழுப்பினார்.

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். கலாநிதி வீராசாமி, மக்களவையில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசியதாவது:

குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது பேச எனக்கு வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். புதிய ஆண்டின் நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத் தொடரில் குடியரசுத் தலைவர் உரையாற்றுவது வழக்கம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஆனாலும் இது அடிப்படையில் அரசாங்கத்தின் கொள்கையை அறிவிப்பதாக இருப்பதும் வழக்கமே. இந்த உரை அரசாங்கத்தால் எழுதப்பட்டு அதை குடியரசுத் தலைவர் படிக்கின்றார் என்பதுதான் உண்மை. உண்மையைச் சொல்வதனால் நமது குடியரசுத் தலைவர் பட்டியல் பழங்குடியினராக இருந்தும் வடக்கு கிழக்கில் பழங்குடியினருக்கு நடைபெறும் கொடூரங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. அவருக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தால் இதுகுறித்து அவர் உறுதியாக குறிப்பிட்டிருப்பார் என்று நான் நம்புகிறேன்.

குறைந்தபட்சம் ஒரு ஆறுதல் வார்த்தை அல்லது நம்பிக்கையான வார்த்தையாவது சொல்லி இருக்கலாம். அங்குள்ள உள்ளூர் மக்களுக்கு இந்த அரசு அவருக்கு அந்த வாய்ப்பைக் கூட வழங்காதது வருத்தமளிக்கிறது. மேலும் அவர்கள் இந்த நாட்டில் இருந்து அந்நியப் பட்டவர்கள் அல்ல. அவர்களும் நம் நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதை உணர வேண்டும்.

அடுத்ததாக, ஜனாதிபதியின் உரையில் வளர்ச்சி மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி பற்றி சில விவரங்களை இந்த அரசு தொடர்ந்து சொல்லி வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் நடந்ததை அதற்கு முந்தைய பதவிக் காலங்களுடன் ஒப்பிடுகையில் நீங்கள் இந்தியாவைப் பார்த்தால் இந்தியா மிகவும் கலாச்சார ரீதியாக வளமான நாடு தொன்று தொட்டு விளங்கி வருகிறது. முகலாயர் காலத்து இந்தியாவைப் பார்த்தாலும் இந்தியாவின் பாரம்பரியம் தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. அந்தக் காலத்திலும் இந்தியா பணக்கார நாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது.

அந்நாளில் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை இந்தியாவின் பங்காக இருந்தது. ஆனால் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இந்தியாவின் செல்வம் பறிக்கப்பட்டது. அப்போது உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் பங்கு ஒரு சதவீதம் அல்லது இரண்டு சதவீதம் என்று இருந்தது. 1947 இல் சுதந்திரம் அடைந்தபின், அடுத்த 44 ஆண்டுகளில் நாம் மிகவும் ஏழ்மையான பாரம்பரியத் தொழில் மூலம் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தோம். பொருளாதாரத்தில் அந்த நாட்களில் நாடு ஒரு ஆரம்ப கட்டத்தில் இருந்தது. நாம் அடைந்த சுதந்திரத்தை அமைதியான வழியில் உறுதி செய்ய வேண்டியிருந்தோம்.

மகாத்மா காந்தி, நேரு மற்றும் சுபாஷ் சந்திர போஸ் போன்ற நமது மாபெரும் தலைவர்களின் தியாகத்தால் நாம் சுதந்திரம் பெற்றோம். ஆனால் இந்தியா தொடர்ந்து சுதந்திர நாடாக இருக்காது என்று பல நாடுகள் அப்போது கூறின. நமது நாடு விரைவில் சிதைந்து சரிந்து விடும் என்று எதிர்பார்த்தனர். சுதந்திரம் பெற்றதும் முதல் 40 ஆண்டுகளுக்கு நாட்டின் அடிப்படை கட்டுமானத்தை வளர்ப்பது முதன்மை நோக்கமாக இருந்தது. அந்த காலகட்டத்தில், நம்மிடம் போதுமான விவசாய விளை பொருட்கள், போதுமான பால் உற்பத்தியை பெருக்க வேண்டி இருந்தது. அந்தக் காலகட்டத்தில் தான் பசுமை புரட்சியும், வெண்மை புரட்சியும் ஏற்பட்டன. அது 1991 முதல் 1996 வரை மட்டுமே - பி.வி. நரசிம்மராவ் பிரதமராகவும், நிதியமைச்சராக இருந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் - ஆகியோரல் நாட்டின் பொருளாதாரம் உலகமயமாக்கப்பட்டது. அன்றிலிருந்து இந்தியாவின் வளர்ச்சியை நீங்கள் பார்த்தால், அது மிகவும் வெற்றிகரமான மற்றும் மிகவும் பாராட்டத்தக்க வகையில் வளர்ந்துள்ளது. 1994 ஆம் ஆண்டின் தசாப்த வளர்ச்சியைப் பார்த்தால், 1994 இல் நமது மொத்த உள்நாட்டு உற்பத்தி சுமார் 300 பில்லியன் டாலர்களாக இருந்தது, மேலும் நாங்கள் 700 பில்லியன் டாலர்களைத் தொட்டோம்.

2004. அதாவது 130 சதவீத வளர்ச்சி, அதாவது 13 சதவீத வருடாந்திர வளர்ச்சி அந்தக் காலத்தில் நிகழ்ந்தது. பின்னர் 2004 முதல் 2014 வரை சுமார் 700 பில்லியன் டாலர்களில் இருந்து 2.1 டிரில்லியன் டாலர்களாக உயர்ந்தது. இது மிகவும் பாராட்டக்கூடிய 18 சதவீத வருடாந்திர வளர்ச்சியாகும். அந்த காலகட்டத்தில் இது 180 சதவீத வளர்ச்சியாக இருந்தது. ஆனால் 2014 மற்றும் 2024 க்கு இடையில் என்ன நடந்தது என்று பார்த்தால், 2.1 டிரில்லியன் டாலர் என்பது 3.3 டிரில்லியன் டாலர்களை மட்டுமே உயர்ந்துள்ளது. தொற்றுநோய் மற்றும் உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான போர் போன்ற பெரிய சவால்கள் உலகம் முழுவதையும் பின்னுக்குத் தள்ளியது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அதையும் மீறி நமது வளர்ச்சி இன்னும் கொஞ்சம் நம்பிக்கைக்குரியதாக இருந்திருக்கலாம். கடந்த 10 ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி சுமார் 60 சதவீதம் மட்டுமே, அதாவது ஆண்டுக்கு சுமார் ஆறு சதவீதம்.

தற்போது நாம், குடியுரிமை (திருத்த) சட்டம் குறித்தும் பேசிக் கொண்டிருக்கிறோம். நமது நாடாளுமன்ற நிலை குழு தலைவராக இருக்கும் திரு டி.ஆர். பாலு அவர்கள் இச்சட்டத் திருத்தம் செய்யும்போது இலங்கை தமிழர்களை துரதிஷ்டவசமாக கைவிட்டு விட்டோம் என்று குறிப்பிட்டார். தற்போது இந்தியாவில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட இலங்கை தமிழர்கள் உள்ளனர். 40 ஆண்டுகளுக்கு மேல் இங்கு வசித்து வருகின்றனர். இவர்கள் 1983ல் இருந்து இங்கு வசித்து வருகின்றனர். அவர்களது குழந்தைகளுக்கு கல்வி மறுக்கப்படுகிறது. கடந்த 40 ஆண்டுகளாக அவர்களை அகதிகளாக வைத்துள்ளோம். கௌரவ தலைவர் (பத்ருஹரி மஹ்தாப்): குடியுரிமை (திருத்த) சட்டம் மத துன்புறுத்தலில் அதிகமாக இருந்தது. இந்த துன்புறுத்தலும் மதம் மற்றும் மொழி சார்ந்ததாக இருந்தது. இலங்கையின் முக்கிய மதம் பௌத்தம் ஆக இருந்தது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அங்கு வாழும் தமிழ் மொழி பேசுபவர்கள் அங்கு தங்கக்கூடாது. நீங்கள் அறிந்திருப்பீர்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.



### கருப்பு ஜூலை

1983ல் கருப்பு ஜூலை, எனப்படும் காலத்தில் அவர்கள் கடந்து வந்த கொடூரங்கள் பயங்கரமானவை பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான கொடுமைகளை இப்போது நினைத்தாலும் என்னை நடுங்க வைக்கிறது. இது நடந்த போது நான் 10ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். நான் 10-ம் வகுப்பு மாணவனாக இருந்த போது இந்த கொடுமைகள் நடந்த அன்று பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. பொதுவாக, விடுமுறை கிடைக்கும்போதெல்லாம் மகிழ்வோம். ஆனால் அன்று, ஒவ்வொரு வகுப்புத் தோழனும் அங்கே நடந்த திகில் கதைகளை கேட்டு கண்ணீர் வடித்தோம். எனவே இலங்கைத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க இந்த அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பொருத்தமான திருத்தம் செய்ய வேண்டும். ஐயா, ஒரு லட்சம் பேர் முகாம்களில் வாழ்கிறார்கள் அவர்கள் அனைவருக்கும் குடியுரிமை வழங்க வேண்டும்.

இரண்டு பிரதமர்கள் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். முன்னாள் பிரதமர்கள் இந்திரா காந்தி மற்றும் ராஜீவ் காந்தி, இருவரும் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்தியாவிற்கு திரும்பும் இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும் என உறுதியளித்தனர். ஆனால் அதுவும் பறிக்கப்பட்டு விட்டன.

மிக மிக பரிதாபமான சூழ்நிலையில் வாழ்கிறார்கள். அவர்களின் நிவாரணத்திற்காக தமிழ்நாடு அரசு தொடர்ந்து நிதியுதவி வழங்கி வருகிறது. மேலும், இந்த அரசு ஒரு அறிவிப்பை வெளியிட்டது. பெண் குழந்தைகளின் திருமண வயதை 21 ஆக நிர்ணயிக்க வேண்டும். இது ஒரு பாராட்டுக்குரிய முடிவு என்று நான் நினைக்கிறேன், ஏனெனில் மகப்பேறு இறப்பு, அல்லது சிசு இறப்பு போன்றவற்றை குறைக்கும் என்பதால் இதனை வரவேற்கின்றேன். பொதுவாக 17 வயதில் பிளஸ் 2 முடித்து இருப்பார்கள். அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு பெற்றோர்கள் இந்த பெண்களுக்கு என்ன செய்யப் போகிறார்கள்?

### தமிழ்நாடு முன்னோடி!

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் பிளஸ் 2 முடித்த மாணவிகளுக்கு பட்டப் படிப்பு திட்டத்தை கொண்டு வந்துள்ளார். இதன்படி கல்லூரிக்குச் செல்லும் பெண்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஒவ்வொரு மாதமும் ரூ. 1000 வழங்குகிறார். இதன் மூலம் அதிகமான பெண்கள் பட்டப் படிப்பு படிக்க ஊக்குவிக்கப் படுகின்றனர். அரசாங்கம்--திருமண வயது என்று சொல்லும் இந்த மாதிரி ஒரு சட்டம் இருக்கும்போது பெண்களுக்கு 21 ஆண்டுகள் --சில வகையான ஊக்கத்தொகைகளை வழங்குவதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இந்தப் பெண்களின் முன்னேற்றத்திற்காக, இது போன்ற திட்டங்கள் ஏதாவது செய்ய வேண்டும். அதன் மூலம் அவர்கள் கல்வி கற்க வாய்ப்பு உண்டாகும். மேலும் வேலை வாய்ப்புகள் கூட அவர்களுக்கு சிறப்பாக இருக்கும். தமிழ்நாடும் பல திட்டங்களில் முன்னோடியாக உள்ளது.

மதிய உணவுத் திட்டத்தை, ஆரம்பத்தில் நமது மாபெரும் தலைவர் காமராஜரும் அதைத்தொடர்ந்து வந்த அரசுகளால் அதே செம்மைப்படுத்தப்பட்டு சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது. இந்த மதிய உணவு திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச் சத்து குறைபாட்டை குறைக்கிறது. ஆனாலும் இருந்தபோதிலும், மதிய உணவுத் திட்டத்தால் மட்டுமே கூடுதலான குழந்தைகள் பள்ளிகளுக்கு செல்வதை கண்டோம்.

காலை உணவு உண்ணாமல் மாணவர்கள் தவிப்பதை தவிர்க்க, காலையிலும் தற்போது உணவு வழங்கப்படுகிறது, எங்கள் முதல்வர் காலை உணவு திட்டத்தையும் கொண்டு வந்துள்ளார். ஆரம்பப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரையிலான பள்ளி மாணவர்களுக்கான இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அடுத்ததாக தமிழ்நாடுத்தில் BPL குடும்பங்களுக்கு மாதத்திற்கு ரூ 1000 வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் அவர்களின் வறுமையில் இருந்து அவர்களை வெளியே கொண்டு வருகிறது.

மேலும், தமிழ்நாட்டில் இன்னும் ஒரு திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். அதன் மூலம் பெண்கள் பேருந்துகளில் இலவசமாக பயணம் செய்யலாம். இது பெண்களை ஊக்குவிப்பதோடு அவர்கள் வேலைக்கு செல்வதையும் ஊக்குவிக்கும். இதன் மூலம் அதிக சேமிப்பை பெறுகின்றனர். இந்த அரசு விவசாயிகள் நலன் பற்றி பேசுகிறது மற்றும் பெண் நலன். இது போன்ற இலக்கு கொள்கைகளை கொண்டு வருவதை நான் உணர்கிறேன் இந்த பெண்களுக்கு தங்களை வலுவூட்டுவதற்கும் அதை உறுதி செய்வதற்கும் நிச்சயமாக உதவுங்கள். அவர்கள் பொருளாதார ரீதியாகவும் சிறப்பாக உள்ளனர்.

குரு சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வரும்போது, உள்ளன. 6.34 கோடி MSME கள். இவற்றில் 6.3 கோடி சிறு தொழில் நிறுவனங்கள் ஆகும். அவர்களின் முதலீடு ரூ.1 கோடி வேண்டும் என அரசை கேட்டுக்கொள்கிறேன். இந்த நுண் தொழில்களுக்கு ஒரு தனி அமைச்சகம் அமைக்க வேண்டும் ஏனெனில் 98 சதவீதம் MSMEகள் என்பது சிறு தொழில்கள் மட்டுமே.

### பெரிய ரயில் நெட்ஒர்க்!

அடுத்ததாக இந்த அரசு வருமான வரியை 30 சதவீதத்தில் இருந்து 23 ஆக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு குறைத்துள்ளது. அதே சமயத்தில் குறுந்தொழில்களின் உரிமையாளர்கள் இன்னும் 30 சதவீத வரி செலுத்துகின்றனர். விற்று முதல் இருப்பதால் 15 லட்சத்திற்கு மேல் 5 கோடி ரூபாய் வரை சம்பாதிக்கும் போது 30 சதவீதம் என்று இருக்கின்றது.

உள் கட்டமைப்பு பற்றி, அனைவரும் பேசுகிறார்கள். ஆனால் இந்தியா உள்கட்டமைப்பு என்று வரும் போது இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டுமென்று தான் சொல்ல வேண்டும். உள்கட்டமைப்பு சரக்குகளுக்கு ஒரு பெரிய பிரத்யேக ரயில் நெட்வொர்க் தேவை. அதை நாம் செய்வதில்லை. தற்போதுள்ள உள் கட்டமைப்பு மிகவும் மோசமாக இருப்பதால் விபத்துகளின் எண்ணிக்கையும் அதிகமாக உள்ளது. உண்மையில் ஆபத்தானது. மற்ற நாடுகளுடன் நம் நாட்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது நான் உணர்கிறேன்.

ஜப்பானில் அதிவேக தண்டவாளங்கள் இருந்தன, எந்த ஒரு சம்பவமும் இல்லை கடந்த 50 ஆண்டுகளில் எப்பொழுதும் உயிரிழப்பு பதிவு செய்யப்படவில்லை. எனவே, நாம் எப்படி சிறந்த முறையில் மேம்படுத்த முடியும் என்பதை பார்க்க அந்த வகையான நாடுகளில் இருந்து படிப்பினைகளை எடுத்துக் கொள்ளுங்கள். மேலும் உள்நாட்டு நீர் வழிகள் குறித்தும் பேச விரும்புகிறேன். அரசாங்கம் நீர் வழிகள் வளர்ச்சிக்காக ரூ 6 லட்சம் கோடி முதலீடு செய்துள்ளது. நீர் வழிகள், தேசிய நீர் வழிகள், குறிப்பாக தமிழ்நாடு மற்றும் ஆந்திராவில் நீர் வழிகள் குறித்து பலமுறை கேட்டாலும் நீர் வழிகள் ஆணையத்திடமிருந்து எங்களால் எந்தவிதமான பதிலையும் பெற முடியவில்லை. எனவே உள்நாட்டு நீர் வழிகளும் மேம்படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மருத்துவக் கல்லூரி என்று வரும்போது கடந்த 10 ஆண்டுகளில் மருத்துவக் கல்லூரிகள் மேம்பட்டு உள்ளன. நான் என் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் தமிழ்நாட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளாக மதுரையில் எய்ம்ஸ் கல்லூரி கட்டிடம் கட்டப்படவில்லை. அதே நேரத்தில் அறிவிக்கப்பட்ட மற்ற கல்லூரிகள் அனைத்தும் கட்டிடம் கட்டப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மாணவர்கள் படிக்கும் இடத்தில் மருத்துவ கல்லூரி மருத்துவமனை செயல்பட்டால் நோயாளிகள் பயனடைகின்றனர். ஆனால் இங்கு, எய்ம்ஸ் மருத்துவ கல்லூரி மாணவர்கள் ராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். தங்கள் வாழ்நாளில் எய்ம்ஸ் மருத்துவமனையில் காலடி எடுத்து வைக்காமல் எய்ம்ஸ் மருத்துவர்களாக வெளியேறினர்.

### விளையாட்டுத் துறை!

விளையாட்டுத் துறையை பொருத்தமட்டில் இந்த நாட்டில் விளையாட்டு துறையின் வளர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளது. முக்கியமாக நூற்றுக்கும் மேற்பட்ட பதக்கங்களை பெற்றிருப்பதை கண்டு பெருமிதம் கொள்கிறோம். பாராலிம்பிக் விளையாட்டுகள் ஆசிய விளையாட்டுகள் மற்றும் அனைத்து நிகழ்வுகளிலும் வென்றார். ஆனால் நீங்கள் வளர்ச்சிக்காக மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ 600 கோடி. குஜராத் மாநிலத்துக்கு செலவிடப்பட்டுள்ளது. அதே சமயம் ஹரியானா மாநிலம் அதிகபட்ச பதக்கங்களை வென்றது; அதற்கு அற்பமான ரூ 60 கோடி தமிழ்நாட்டுக்கு நிச்சயமாக அதை விட மிகக் குறைவாக வழங்கப்பட்டிருக்கும் என்பது உங்களுக்கு தெரியும். எனவே, இந்த அரசாங்கம் திறமையானவர்களை கண்டறிந்து, எப்படி சிறந்ததாக இருக்கும் என்பதை பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த மாநிலங்கள் விளையாட்டில் ஈடுபடும் நபர்களின் எண்ணிக்கையை பொறுத்து பதக்கங்கள் பெறுகின்றன, அதற்கேற்ப நிதி ஒதுக்கீடு செய்து உரிமையை உறுதி செய்ய வேண்டும்.

அதேபோல, கேந்திரிய வித்யாலயா குறித்தும் அரசு ஒரு கொள்கையை கொண்டுள்ளது. ஒரு காலத்தில் கேந்திரிய வித்யாலயா பள்ளிகள், இரயில்வே நிலையத்தில் கட்டப்பட்டன. ஆனால் தற்போது இரயில்வே துறை நில வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. இதனால் பள்ளிகளுக்காக இரயில்வே நிலங்களை கேந்திரிய வித்யாலயா பயன்படுத்துவதை சாத்தியமற்றதாக்கி விடுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளாக இரயில்வே அமைச்சர் மற்றும் கல்வி அமைச்சர் இருவரையும் அனுகி எனது தொகுதியில், ஒரு கேந்திரிய வித்யாலயா பள்ளி அமைத்து தர கோரி வருகின்றேன். ஆனால் என்னால் இன்று வரை கேந்திரிய வித்யாலயா சங்காதனுக்கு நிலத்தைப் பெற்றுத் தர முடியவில்லை. உங்கள் மூலம், நான் எனது வட சென்னை தொகுதியில் ஒரு கேந்திரிய வித்யாலயாவை தொடங்குவதற்கு ஒரு இடத்தை கோருகிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி நாடாளுமன்றத்தில் பேசினார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் வட்டம் களியப்பேட்டை ஊராட்சியில் NRGES திட்டத்தின் கீழ் ரூ.39 லட்சம் மதிப்பில் சிறு பாலம் அமைப்பதற்கு கா. சுந்தர் எம்.எல்.ஏ. அடிக்கல் நாட்டினார், இதில் ஒன்றிய கழக செயலாளர் டி.குமார், பொறியாளர் லீ.பாளையம், ஒன்றிய குழு உறுப்பினர் கு. துரைவேல், ஊராட்சி மன்ற தலைவர் பிருந்தாவதி சரவணன், ஒன்றிய பொருளாளர் பாலமுருகன், காவூர் மோகன், கழக நிர்வாகிகள் கமலக்கண்ணன், ராஜகோபால், நேதாஜி, முருகன், யோகநாதன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் - இரண்டு பகுதிகளில்

# பேருந்து வழித்தடங்களை நீட்டிப்பு செய்து பேருந்து சேவை!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

*பெரம்பலூர், பிப். 9 -*

*பெரம்பலூர் மாவட்டத்தில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் இரண்டு பகுதிகளில் பேருந்து வழித்தடங்களை நீட்டிப்பு செய்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேருந்தை தொடங்கி வைத்து மக்களுடன் பயணம் செய்தார்.*

*பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் போக்குவரத்துத்துறையின் சார்பில் இரண்டு பகுதிகளில் பேருந்து வழித்தடம் நீட்டிப்பு செய்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேருந்தை தொடங்கி வைத்தார்.*

*தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் கோரிக்கைகள், அடிப்படைத் தேவைகள் அனைத்தையும் அறிந்து கொண்டு அதனை தொடர்ந்து நிறைவேற்றி வருகிறார்கள்.*

*அவரது வழியில் செயல்பட்டு வரும் போக்குவரத்துத்துறை அமைச்சர் பெரம்பலூர் மாவட்ட வளர்ச்சிக்காக பல்வேறு திட்ட பணிகளை தொடர்ந்து செய்து வருகிறார்.*

*பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் அயினாபுரம் மற்றும் அனைப்பாடி கிராம, பள்ளி கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் காலை மாலை நேரங்களில் அரியலூர் மற்றும் கொளக்காநத்தம் செல்வதற்கு தினசரி 6 நடைகள் கூடுதல் பேருந்து சேவையினை துவக்கி வைத்தும், பெரம்பலூரிலிருந்து சில்லக்குடி வரை செல்லும் நகரபேருந்தினை காரைப்பாடி வரையும் நீட்டிப்பு செய்தும் போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேருந்து சேவையினை தொடங்கி வைத்து வைத்து, மக்களோடு பயணம் செய்தார்.*

*இந்நிகழ்வில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (கும்பகோணம்) லிட் மேலாண் இயக்குநர் மகேந்திர குமார், பொது மேலாளர் சக்திவேல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*

### குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசுப் பள்ளிகளில் 10 முதல் 12ம் வகுப்பு வரை பயிலும்

# மாணவ - மாணவிகளுக்கு முக்கிய வினா - விடைகள் அடங்கிய புத்தகங்கள் வழங்கல்!

*பெரம்பலூர், பிப். 9-*

*பெரம்பலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ-மாணவிகள் பொதுத்தேர்வுகளை எளிதாக எதிர்கொள்ளும் வகையில்,தனது சொந்த நிதியில் தயாரிக்கப்பட்ட மிக முக்கிய வினா-விடைகள் அடங்கிய புத்தகங்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பல்வேறு அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளுக்கு வழங்கினார்.*

*போக்குவரத்துத்துறை அமைச்சர் தனது சொந்த நிதியில் குன்னம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசுப்பள்ளிகளில் 10, 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் 8,612 மாணவ மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" என்ற தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள அனைத்து பாடப்பிரிவுகளுக்குமான மிக முக்கிய வினா விடைகள் அடங்கிய புத்தகங்களை வழங்கி வருகின்றார்.*

*அதனடிப்படையில் இன்று 10ஆம் வகுப்பு பயிலும் 306 மாணவ,மாணவிகளுக்கும், 11ஆம் வகுப்பு பயிலும் 352 மாணவ, மாணவி களுக்கும், 12 ஆம் வகுப்பு பயிலும் 274 மாணவ, மாணவிகளுக்கும் என மொத்தம் பல்வேறு பள்ளிகளில் பயிலும் 932 மாணவ,மாணவிகளுக்கு "தேர்வை வெல்வோம்" என்ற தலைப்பிலான புத்தகங்களை போக்குவரத்துத்துறை அமைச்சர் வழங்கினார்.*

*இந்தப் புத்தகங்கள் கல்வித்துறையில் பல ஆண்டுகள் அனுபவம் வாய்ந்த மற்றும் அரசுப் பொதுத் தேர்வு களில் தொடர்ந்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக தங்கள் மாணவர்களை 100 சதவீதம் தேர்ச்சி பெற வைத்த அரியலூர் மாவட்ட அரசு பள்ளிகளின் ஆசிரியர்கள் 25 பேர் அடங்கிய குழுவினரால் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு கட்ட ஆய்வுக்குப்பின் மாணவ மாணவிகள் எளிதில் படிக்கும் வகையில், தேர்வில் கட்டாயம் கேட்கப்பட்ட வாய்ப்புள்ளதாக கருதப்படும் வினாக்கள் அதற்கான விடைகளுடன் இப்புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. வினாக்களும், விடைகளும் மாணவர்களுக்கு புரியும் வகையிலும் எளிய நடையில் உருவாக்கப்பட்டுள்ளது.*

*அதனைத்தொடர்ந்து ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கூத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி, கொளக்காநத்தம் அரசு மேல்நிலைப்பள்ளி, காரை அரசு மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் பயிலும் 186 மாணவர்கள், 166 மாணவிகள் என மொத்தம் 352 மாணவ, மாணவிகளுக்கு ரூ.17,01,560 மதிப்பிலான இலவச மிதி வண்டிகளை போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார்.*

*இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, மாவட்ட கல்வி அலுவலர் பெ.ஜெகநாதன், ஆலத்தூர் வட்டாட்சியர் சத்தியமூர்த்தி, பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.*



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, மாதர்பாக்கம் பகுதியில் நடைபெற்ற மருத்துவ முகாமில், முதுகு தண்டு வட பாதிப்பிற்கும் கல்வி நிதி உதவி கோரிய செல்வி நீலாவதி த/பெ.எ.மணி வசம் ரூ.25,000/-க்கான காசோலையை மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தனது சொந்த செலவில் வழங்கினார். உடன் ஆ.சத்தியவேல், உதயகாந்தம்மாள், மெய்யழகன், தேவஅன்பு, ரெட்டம்பேடு செந்தில், மருத்துவ அணி பாலசந்தர், உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சி.பி(எம்) மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் எதிர்கட்சி ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்களை கண்டித்து, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், பொன்னேரியில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. சி.பி.(எம்) மாவட்ட செயற்குழு உறுப்பினர் கே.விஜயன் தலைமையில் நடைபெற்ற ஆர்பாட்டத்தில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகர், சிபிஎம். நம்பிராஜன், கோபால், தி.மு.க மாவட்ட நிர்வாகிகள் மு.கதிரவன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், கே.சுப்பிரமணி, ஜி.ரவிக்குமார், ம.தி.முக மாவட்ட செயலாளர் மு.பாபு விடுதலை சிறுத்தைகள் நீலமேகம், சி.பி.ஜ.அருள், மனிதநேய மக்கள் கட்சி யூசுப், திராவிடர் கழகம் பன்னீர்செல்வம் மற்றும் இந்தியா கூட்டணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.

## ஜெர்மனியில் விமான ஊழியர்கள் வேலைநிறுத்தம்!

ஜெர்மனி, பிப். 9-

ஜெர்மனியின் மிகப்பெரிய விமான நிறுவனமான லுப்தான்சா ஐரோப்பாவில் 2-வது பெரிய விமான நிறுவனமாக திகழ்கிறது.

லுப்தான்சா விமான நிறுவன கிளைகளில் சுமார் 25 ஆயிரம் பேர் பணிபுரிகிறார்கள். ஜெர்மனி நாட்டில் பிராங்க்பர்ட், முனிச் பகுதிகளில் லுப்தான்சா விமான நிறுவனங்களின் முக்கிய அலுவலகங்கள் உள்ளன.

அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் லுப்தான்சா கிளைகள் செயல்பட்டு வருகின்றன. பல நாடுகளுக்கும் விமான சேவைகள் நடந்து வருகிறது.

இந்நிலையில் ஜெர்மனியில் உள்ள லுப்தான்சா ஏர்லைன்ஸ் விமான நிறுவன ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி இன்று திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு உள்ளனர். இதனால் 1000 விமான சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

இந்த வேலை நிறுத்தத்தால் ஜெர்மனியில் இருந்து சென்னை வரும் விமானங்களும், சென்னையில் இருந்து ஜெர்மனி செல்லும் விமானங்களும் திடீரென ரத்து செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் இருந்து அமெரிக்கா, கனடா, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளுக்கு செல்ல வேண்டிய லுப்தாப்சா விமான பயணிகளும் தவிப்புக்கு உள்ளாகினர். ஊழியர்களின் வேலைநிறுத்தத்தால் 1 லட்சம் பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த போராட்டம் நேற்று காலை 7 மணிக்கு ஜெர்மனியில் தொடங்கியது. 27 மணி நேரம் இந்த போராட்டம் நீடிக்கும். இன்று (வெள்ளிக்கிழமை) காலை 7:10 மணிக்கு போராட்டம் முடிவடையும் என விமான தொழிற்சங்கம் அறிவித்துள்ளது.





சைதை மேற்கு பகுதி 140 வது வட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் படிப்பகத்தின் 24ஆம் ஆண்டு விழா படிப்பகத்தின் நிறுவனர் மாவட்ட பிரதிநிதி கு.புகழ்வேந்தன் தலைமையில் நடைபெற்றது இந்த விழாவில் நலத்திட்ட உதவி வழங்கியவர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் மா.சுப்பிரமணியன், உடன் திரு.வி.க. சட்ட மன்ற உறுப்பினர் பா.தாயகம் கவி, எஸ்.குணசேகரன், தலைமை பொது குழு உறுப்பினரும் 140வது வட்ட மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், களக்காடி எல்லப்பன், சைதை.த.சம்பத், வி.பி.ஜானகிராமன், த. பாபு, கவிதாகௌதமன், ந.தமிழரசு, சை.மு.சேகர், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, டி.என்.சிவமணி, சைதை ஜி.பாபு, சைதைஆர். ரவி, பிரஸ்.க. மணி, எஸ்.ரங்கநாதன், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், எம். அய்யாவு, ஆர்.பன்னீர், ஜி. ஜே.மோசஸ், ச.தினகரன் மற்றும் மகளிர் அணி, இளைஞர் அணி, மாணவர் அணி, கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### வாணியம்பாடியில் ரெயில்வே மேம்பாலம் - தொகுதியில் 3 மேம்பாலங்கள் தேவை!

# வேலூர் விமான நிலையத்துக்கு விரைந்து அனுமதி வழங்குக!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

*புதுடெல்லி, பிப்.9-*

*வேலூர் விமான நிலையத்திற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் பேசுகையில் வலியுறுத்தினார்.*

*அவர் பேசியதாவது:-*

*இந்த மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து இந்த அவையில் மீண்டும் மீண்டும் நான் வைக்கும் ஒரே கோரிக்கை எனது வேலூர் மக்களவைத்தொகுதிக்குட்பட்ட வாணியம்பாடி சட்டமன்றத் தொகுதியில் எல்.சி. 81 எனப்படும் ரயில்வே மேம்பாலம் நீண்ட நாள் கோரிக்கை. மக்கள் ரயில் பாதைக்கு இருபுறமும் கடந்து சென்று வந்து கொண்டுள்ளனர்.*



*நாளொன்றுக்கு 120 முதல் 140 வரை ரயில்கள் இந்த வழித்தடத்தில் கடந்து செல்கின்றன. ஆனாலும் மக்கள் நீண்ட காத்திருப்புக்கு பிறகு இருபுறமும் கடந்து சென்று வருகின்றனர். இதற்கு முன்பு இருந்த ஆட்சியில் இந்த கோரிக்கை பாராமுகமாகவே இருந்தது. துட்சமாக நினைத்தனர்.*

*நான் மக்களவை உறுப்பினரான பிறகு இதற்காக எனது கூக்குரலை எழுப்பிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே எல்.சி. 81 மேம்பாலப் பணிகளை ஒன்றிய அரசு தொடங்கி விரைந்து முடிக்க வேண்டும் என்பது எனது முக்கிய கோரிக்கையாகும்.*

*இரண்டாவதாக தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் திட்டமான சென்னை - பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் பெருமுகை, கந்தனேரி, வெட்டுவானம் ஆகிய இடங்களில் மூன்று முக்கிய மேம்பாலங்கள் கட்டப்பட வேண்டும். இதற்கு தேவையான நிதி ஒதுக்கப்பட்டு டெண்டர் ஒப்பந்த புள்ளிகளும் பெறப்பட்டு டெண்டரும் முடிவாகிய பின்னரும் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கிறது. அதற்கு என்ன காரணம்.? இந்த மூன்று முக்கிய பணிகளையும் விரைந்து முடிக்குமாறு மீண்டும் ஒருமுறை இந்த அவையில் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.*

*மூன்றாவதாக வேலூரில் கடந்த பல ஆண்டுகளாக வேலூர் விமான நிலையம் அமைக்கும் பணியானது ஏறக்குறைய முழுவதும் நிறைவேற்றப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாநில அரசும் தேவையான நிலத்தை ஆர்ஜிதப்படுத்தி விமான போக்குவரத்துத் துறையிடம் வழங்கி விட்டது. அனைத்து தொழில் கருவிகள், உபகரணங்கள் நிறுவப்பட்டு விட்டது. ஆனால் இன்று வரை வேலூர் விமான நிலையப்பணிகள் முடிக்கப்படாமல் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வரவில்லை.*

*ஆகையால் அவைத் தலைவர் வாயிலாக, எனது வேலூர் நாடாளுமன்றத் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான வாணியம்பாடியில் எல்சி-81ல் மேம்பாலம் அமைத்திடவும், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சிறுமுகை, கந்தனேரி, வெட்டுவானம் ஆகிய இடங்களில் மூன்று முக்கிய பாலங்கள் அமைத்திடவும் வேலூர் விமான நிலையம் விரைந்து அனுமதி வழக்குமாறு மீண்டும் வலியுறுத்திக் கோரிக்கை வைக்கிறேன்.*

*இவ்வாறு அவர் வலியுறுத்தினார்.*



திருச்சி மாவட்ட ஆட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான குறை தீர்க்கும் முகாமில் மாவட்ட ஆட்சியர் எம்.பிரதீப் குமார் பங்கேற்று டி.என்.பி.எஸ்.சி. குரூப்-1 தேர்வில் முதல் நிலை தேர்ச்சி பெற்ற செவித்திறன் குறைபாடு மாற்றுத்திறனாளி திவ்யாவிற்கு ரூ. 50,000/- ரொக்கப் பரிசும், 10க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ஆவின் பாலகம் வைப்பதற்கு தல ரூ.50 ஆயிரத்திற்கான ஆவின் முகவர் நியமன ஆணையும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினரும், மாற்றுத்திறனாளிகள்முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் ரெ.தங்கம்,ஆவின் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி முத்துமாரி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சந்திரமோகன், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் டாக்டர் சி. ரமேஷ்,செவித்திறன் உதவியாளர் வி. செல்லப்பாண்டியன் மற்றும் மாவட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

### தருமபுரி தொகுதியில் உள்ள

# குரும்பர் - லம்பாடி மக்களை எஸ்.டி. பிரிவில் சேர்க்க வேண்டும்!

## மக்களவையில் டாக்டர் டி.என்.வி.செந்தில்குமார் பேச்சு!

*புதுடெல்லி, பிப்.9*

*சாதிவாரிக் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்பட வேண்டும் என்றும், குரும்பர் மற்றும் லம்பாடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான எஸ்.டி. பிரிவில் சேர்க்க வேண்டும் என்றும், தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் டி.என்.வி.செந்தில் குமார் மக்களவையில் வலியுறுத்தினார்.*

*2023-ஆம் ஆண்டு பட்டியல் படுத்தப்பட்ட மற்றும் பழங்குடி சாதிகளில் சட்டத் திருத்த மசோதாவை டாக்டர் செந்தில் குமார் ஆதரித்து உரையாற்றினார்.*

*அவர் பேசியதாவது:-*

*இந்த மசோதா நீண்ட காலமாக பின்தங்கிய பல சமூகங்களுக்கு ஒரு விடிவு காலமாக இருக்கும். அதே போல் எனது தருமபுரி தொகுதியிலும் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன்.*

*தருமபுரி நாடாளுமன்ற தொகுதியில் பாப்பிரெட்டிப்பட்டி, அரூர், தர்மபுரி, பாலக்கோடு, மேட்டூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகள் உள்ளன.*



*இங்கு குறிப்பாக குரும்பர் மற்றும் லம்பாடி சமூகத்தினர் சமூக பொருளாதார நிலையில் பின்தங்கி உள்ளனர். இவர்கள் மிக நீண்ட காலம் கோரிக்கையான எஸ்டி அந்தஸ்து கோரி வருகிறார்கள். நான் லம்பாடி மற்றும் குரும்பர் சமூகத்தின் பிரதிநிதிகளுடன் தமிழ்நாடு அரசை அணுகி எங்களது முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து அம்மக்களின் கோரிக்கையை முன்வைத்தேன் மற்றும் நமது ஒன்றிய பழங்குடியினர் அமைச்சர் அர்ஜுன் முண்டா அவர்கள் மிகவும் உதவியாக இருந்தார் என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.*

*குருமா, குருமன், குரும்பா, குரும்ப கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் ஆகியோரை எஸ்.டி பட்டியலில் குருமன் (எஸ்.டி) என்ற இணைச்சொல்லாக சேர்க்கும் பட்டியலை தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது. இவையெல்லாம் வெறும் ஒலி மாறுபாடுகளே ஆகும் இதனால் பல இளைஞர்கள் அரசு வேலைவாய்ப்பும், கல்லூரி சேர்க்கையில் இட ஒதுக்கீட்டை இல்லாமல் வாய்ப்பை இழந்து வருகின்றனர்.*

*இவை அமலுக்கு வரும் பட்சத்தில் குருமா, குருமன், குரும்பா, குரும்ப கவுண்டர், குரும்பன் மற்றும் குரும்பர் சமூக இளைஞர்களுக்கு விடியல் கிடைக்கும். லம்பாடி சமூகத்தைப் பற்றி எடுத்துக் கொண்டோம் என்றால் அவர்கள் அண்டை மாநிலங்களான கர்நாடகா மற்றும் ஆந்திராவில் அட்டவணை பட்டியலில் உள்ளனர். ஆனால் அதே தமிழ்நாட்டிலும் இல்லை.*

*தமிழ்நாடு அரசு இப்போது ஒரு புதிய எத்னிக் ஆய்வுக்கு சென்றுள்ளது. அந்த ஆய்வு முடிந்தவுடன் நாங்களும் அதை ஒன்றிய அரசுக்கு அனுப்புவோம், அதன் பிறகு துரித நடவடிக்கை எடுக்க வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.*

*எனது நாடாளுமன்றத் தொகுதியான தர்மபுரியில் பல்வேறு மலைப் பகுதிகளில் ஏகலைவா மாதிரி உறைவிடப்பள்ளி தொடங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை உங்கள் வாயிலாக ஒன்றிய அரசுக்கு சமர்ப்பிக்கிறேன். இறுதியாக சபாநாயகர் வாயிலாக நான் ஒன்றிய அரசுக்கு சாதிவாரிக் கணக்கெடுப்பு விரைவில் நடத்தப்பட வேண்டும். இதனால் பல்வேறு இனக் குழுக்கள், பின்தங்கியவர்கள் மற்றும் விளிம்புநிலை மக்கள் போன்ற பல்வேறு பிரிவுகளின் அனைத்து பிரதிநிதிகளுக்கும் சமமான வாய்ப்பு வழங்கப்படும். எனவே ஜாதிவாரி கணக்கெடுப்பு ஆரம்பத்தில் துரிதமாக நடத்தப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் பேசினார்.*

### பி.மணிமாறன் எம்.சி. முன்னிலையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைக்கிறார்!

# வேளச்சேரி 177-வது வார்டில் 1 கோடியே 12 லட்சம் மதிப்பில் குடிநீர் குழாய் அமைக்கும் பணி!

## அசன் மௌலானா - இரா.துரைராஜ் - அரிமா சு.சேகர் பங்கேற்பு!

*சென்னை, பிப்.9 -*

*வேளச்சேரி தொகுதி 177-வது வார்டில் ஒரு கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குடிநீர் குழாய் பதிக்கும் பணியினை மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பி. மணிமாறன் முன்னிலையில், மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா. சுப்பிரமணியன் இன்று தொடங்கி வைக்கிறார்.*

*தமிழக முதல்வரின் சீர்மிகு ஆட்சியின் தொடர்ச்சியாக 177 வது வார்டு, வேளச்சேரி விஜயநகர் முதல் வி.ஜி.பி.செல்வா நகர் வரை ரூபாய், ஒரு கோடியே பண்ணிரண்டு இலட்சத்து ஐம்பத்தோராயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய குடிநீர் குழாய் பதிக்கும் பணிகளை 177 வது வார்டு மாமன்ற உறுப்பினர், பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சி பொருளாளர், வேளச்சேரி பெ.மணிமாறன் முன்னிலையில் இன்று (9-02-2024 வெள்ளிக்கிழமை) காலை 11:30 மணியளவில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர், தமிழச்சி தங்கபாண்டியன் துவக்கி வைக்கிறார்கள்.*

*இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, மண்டல குழு தலைவர் இரா.துரைராஜ்,பகுதி கழக செயலாளர் அரிமா சு.சேகர், மாமன்ற உறுப்பினர்கள் எஸ்.பாஸ்கரன்,வே.ஆனந்தம், மகேஷ்வரி முருகவேல், வட்டக் கழகச் செயலாளர்கள், ஜி.பி.எஸ். பால சதிஷ், பொ.த.மதிவாணன், கழிவு நீர் மற்றும் குடிநீர் வாரிய அதிகாரிகள், வட்டக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக முன்னணியினர், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காளி வி.எஸ்.வாசன்

### பிப்ரவரி 9 (2007)



**மயிலாடுதுறை வட்டக் கழகத்தின் முதல் துணைச் செயலாளராகவும், நீண்டகாலம் காளி ஊராட்சி மன்றத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்பு அறப்போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு சுமார் பத்தொன்பது முறை சிறை சென்றவர்.**

**முரசொலி, நம்நாடு ஆகிய நாளிதழ்களில் சில ஆண்டுகள் சுருக்கெழுத்தராகவும் செய்தியாளராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### ஜி.எஸ்.எல்.வி. எப்14 ராக்கெட் பிப்ரவரி 17ம் தேதி விண்ணில் செலுத்தப்படும்!

## இஸ்ரோ தகவல்!

புதுடெல்லி, பிப். 9-

வானிலை முன் அறிவிப்பு தகவல்கள் அடங்கிய காலநிலை தரவுகளை அறிந்துகொள்வதற்காக 'இன்சாட்-3டிஎஸ்' என்ற செயற்கைக் கோளை இஸ்ரோ பெங்களூருவில் வடிவமைத்துள்ளது.

இந்நிலையில், இந்த செயற்கைக்கோளை ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தில் தயார் நிலையில் உள்ள ஜி.எஸ்.எல்.வி. எப்-14 ராக்கெட்டில் பொருத்தி, பிப்ரவரி 17ம் தேதி மாலை 5.30 மணிக்கு விண்ணில் செலுத்த இஸ்ரோ தயாராகி வருகிறது.

காலநிலை தரவுகளைத் தெரிந்து கொள்வதற்காக தற்போதுள்ள சுற்றுப்பாதையில் இன்சாட்-3டி மற்றும் 3 டி.ஆர். செயற்கைக் கோள்கள் சேவைகளை தொடர்ந்து வழங்கி வருகிறது.

இன்சாட்-3 டி.எஸ். செயற்கைக்கோள் மேம்படுத்தப்பட்ட வானிலை ஆய்வுகளை வழங்குவதுடன் வானிலை முன் அறிவிப்பு திறன்களை அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த செயற்கைக்கோளில் அதிநவீன கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. குறிப்பாக 6 சேனல் இமேஜர் மற்றும் 19 சேனல் சவுண்டர் கருவிகள் வானிலை ஆய்வுகளுக்காகவும், உயர்தர தரவுகளை சேகரிப்பதற்காகவும் அனுப்பப்படுகிறது.

இந்த செயற்கைக்கோள், 'டேட்டா ரிலே டிரான்ஸ்பாண்டர்' (டி.ஆர்.டி) போன்ற அத்தியாவசிய தகவல் தொடர்பு கருவிகளைக் கொண்டுள்ளது. இந்த கருவி தானியங்கி தரவு சேகரிப்பு தளங்கள் மற்றும் தானியங்கி வானிலை நிலையங்களில் இருந்து தரவுகளையும் பெறுகிறது. இன்சாட் 3 டி.எஸ். செயற்கைகோளில் தகவல் தொடர்பு அம்சங்களுடன், நிலம் மற்றும் கடல் பரப்புகளை கண்காணிக்கும் வகையில் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன.

இதுதவிர பேரழிவு எச்சரிக்கை அமைப்புகளுக்கான தரவுகளை வழங்குவதுடன், முன்கூட்டியே எச்சரிக்கை அளிக்கும் திறன்களையும் கொண்டுள்ளது.



டெல்லியில் நடைபெற்ற யூத் கேம்ஸ் ஃ பெடரேஷன் ஆப் இந்தியா 2024 சிலம்பு போட்டியில் தமிழ்நாட்டில் இருந்து சென்னை, மதுரை, ஈரோடு, கன்னியாகுமரி, சேலம், சிவகங்கை செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிக அளவில் கலந்து கொண்டனர் இதில் அதிக அளவில் சாம்பியன் ஷிப் பட்டத்தை செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதி பெருங்களத்தூரில் அமைந்துள்ள பெண்ணில் விளையாட்டு அகாடமியை சேர்ந்த 36 மாணவ மாணவிகள் இந்த விளையாட்டு போட்டியில் கலந்து கொண்டனர். இதில் வெற்றி பெற்றவர்கள் 26 கோல்ட் மெடல் 6 சில்வர் மெடல் 4 பிரான்ஸ் மெடல்களை வீரர்கள் வீரங்களைகள் பெற்றனர். அனைவரும் தாம்பரம் மாநகரக் கழக செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.வை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் பயிற்சியாளர்கள் எம்,ஆறுமுகம், ஆர்.காளிங்கன், ஆர். சந்தியா, ஐசக் எக்ஸ் எம்.சி. ஆகியோர் உள்ளனர் .

# வஞ்சிக்கப்படும் தமிழ்நாடு..விழித்துக்கொள்வோம்..உரிமைகளை மீட்போம்..

17வது மக்களவையின் கடைசி நாடாளுமன்றக் கூட்டத்தொடர் டெல்லியில் நடைபெற்று வருகிறது. மக்களவைத் தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், இந்த கூட்டத்தொடர் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகப் பார்க்கப்பட்டது. இதில், குடியரசுத் தலைவரின் உரைக்கு நன்றி தெரிவித்துப் பேசிய பிரதமர் மோடி, மறைமுகமாக தமிழ்நாடு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்களை சீண்டினார்.

மோடி தனது உரையில், " சிலர் என் வரி, என் பணம் என்று பேசுகிறார்கள். இது என்ன மாதிரியான பேச்சு.. இது நாட்டிற்கே ஆபத்தான பேச்சு" என்று குறிப்பிட்டார். தமிழ்நாட்டிடம் இருந்து அதிகமான நிதியைப் பெறும் ஒன்றிய பாஜக அரசு, நமக்குத் திருப்பித் தருவதோ மிக மிக சொற்பம் என்று தொடர்ந்து சுட்டிக்காட்டி வருபவர் நம் முதலமைச்சர்தான். தமிழ்நாட்டின் உரிமைக் குரலை நம் முதலமைச்சர் ஓங்கி

ஒலித்து வந்ததன் விளைவு, இன்று பாஜக ஆளாத மற்ற மாநிலங்களும் அதே குரலை எழுப்பத் தொடங்கியுள்ளன. குறிப்பாக நேற்று ( பிப்ரவரி 8 ம் தேதி) டெல்லியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள நிதிப்பகிர்வில் கேரளாவிற்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்து போராட்டம் நடத்தினார்.

தமிழ்நாட்டில் திமுக வினர், ஒன்றிய பாஜக மாற்றாந் தாய் மனப்பான்மையோடு தமிழ்நாட்டு மக்களுக்கு அல்வா கொடுப்பதை குறிப்பிடும் விதமாக, மக்களுக்கு அல்வா கொடுத்து பாஜக வின் முகத்திரையை கிழித்தனர்.


தமிழ்க் கேள்வி
**தி.செந்தில் வேல்**
மூத்த ஊடகவியலாளர்.

உள்ளபடியே நிதிப்பகிர்வில் என்னதான் நடக்கிறது என்பதை நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் வில்சன் அவர்கள் கேளவி எழுப்ப அதற்கு ஒன்றிய நிதித்துறையின் இணை அமைச்சர் அளித்துள்ள பதில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்நாடு உள்ளிட்ட பாஜக ஆட்சி செய்யாத தென்னிந்திய மாநிலங்கள் மிகப்பெரும் அளவில் வஞ்சிக்கப்படுவது அந்த ஆவணத்தின் மூலம் அம்பலமாகியுள்ளது. அதை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம். அதற்கு முன், வில்சன் அவர்களைத் தொடர்பு கொண்டு பாராட்டுகளைத் தெரிவித்தேன், அவர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உங்கள் அப்பன் வீட்டுப் பணமா என்று எழுப்பிய அந்த உரிமைக் குரல்தான் என்னை இது குறித்த உண்மைகளை அறியச் செய்யத் தூண்டியது என்றார். அந்த வகையில் .உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் நாம் பாராட்டியே ஆக வேண்டும்.

இனி நாம் எப்படி எல்லாம் வஞ்சிக்கப்படுகிறோம் என்பதைப் பார்ப்போம்..

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு ஒன்றிய அரசுக்கு செலுத்திய வரி என்பது, ரூபாய் 6,00,674.49 கோடி (ஆறு லட்சத்து அறுநூற்றின் எழுபத்தி நான்கு புள்ளி நான்கு ஒன்பது கோடி ரூபாய்) ஆனால், ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் இருந்து தமிழ்நாடு பெற்றது, வெறும், 1,58,145.62 கோடி ரூபாய். ( ஒரு லட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து நூற்றி நாற்பத்தி ஐந்து புள்ளி ஆறு இரண்டு கோடி ரூபாய் ) இதே போலத்தான் கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா என்று பாஜக ஆளாத தென் மாநிலங்களும் ஒன்றிய பாஜக அரசின் மாற்றாந்தாய் மனப்போக்கால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஒட்டுமொத்தமாக தென்னிந்திய மாநிலங்கள் மூலமாக ஒன்றிய அரசுக்கு கிடைத்த வரி வருவாய் ரூபாய் 22,26,983.39 கோடி ஒட்டுமொத்த தென்னிந்திய மாநிலங்கள் அனைத்திற்கும் சேர்த்து ஒன்றிய அரசு திருப்பிக் கொடுத்த நிதி வெறும் ரூபாய் 6,42,295.05 கோடி அதாவது உத்தரப்பிரதேசம் என்ற ஒரு மாநிலத்திற்கு மட்டும் ஒன்றிய அரசு வழங்கியது ரூபாய் 6,91,375.12 கோடி. ஒட்டுமொத்த தென்னிந்தியாவிற்கும் வழங்கியது ரூபாய் 6,42,295.05 கோடி. ஒட்டுமொத்த தென்னிந்தியாவை விட ஒரே ஒரு மாநிலத்திற்கு ( உத்தரப்பிரதேசத்திற்கு ) கூடுதல் நிதியை வழங்கியுள்ளது பாஜக அரசு. எளிமையாகச் சொல்ல வேண்டும் எனில், 1 ரூபாய் செலுத்திய தமிழ்நாட்டிற்கு வெறும் 26 பைசா மட்டுமே திருப்பி அளித்துள்ளது பாஜக அரசு அதுவே 1 ரூபாய் மட்டுமே கொடுத்துள்ள உத்தரப்பிரதேசத்திற்கு 2 ரூபாய் 2 பைசா அளித்துள்ளது.

1 ரூபாய் அளித்த மத்தியப் பிரதேசத்திற்கு 1 ரூபாய் 70 பைசாவும், 1 ரூபாய் அளித்த ராஜஸ்தானுக்கு 1 ரூபாய் 14 பைசாவும் ஒன்றிய பாஜக அரசு கொடுத்துள்ளது. இதைச் சுட்டிக் காட்டி கேள்வி எழுப்பிய நம் முதலமைச்சரைத் தான் மறைமுகமாக நாடாளுமன்றத்தில் சாடுகிறார் பிரதமர். ஆனால், இதே பிரதமர் குஜராத் முதலமைச்சராக இருந்தபோது, குஜராத் நிதிப்பகிர்வில் பாதிக்கப்படுவதாக குற்றம் சாட்டியவர்தான்.

ஆக முதலமைச்சராக இருந்தபோது ஒரு பேச்சு, பிரதமராக மாறிய பின் ஒரு பேச்சு என்று மாற்றி மாற்றி பேசுவது மட்டுமின்றி, வட இந்தியாவில் மட்டும் கணிசமான இடங்களைப் பிடித்தால் போதும் மீண்டும் ஆட்சியைப் பிடித்துவிடலாம் என்ற நம்பிக்கையில் பாஜக தென்னிந்திய மாநிலங்களை வஞ்சித்து வருவது ஆதாரங்களுடன் அம்பலமாகியுள்ளது.

திராவிடக்கொள்கைகளால் தமிழ்நாடு வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து இந்தியாவின் முதன்மை மாநிலமாக மாறியுள்ளது. மதவாத கொள்கைகளால் தாங்கள் ஆட்சி செய்யும் மாநிலங்களை பின்னோக்கி இழுத்துச் சென்று அவற்றின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக மாறியுள்ளது பாஜக.

வரும் மக்களவைத் தேர்தலில் பாஜக மீண்டும் ஆட்சிக்கு வந்தால், நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வட இந்தியாவில் அதிகப்படுத்தும். தென்னிந்தியாவில் எம்.பி.க்களின் எண்ணிக்கை குறைக்கப்படும். அதன் பின்னர் வட இந்தியாவில் மத வெறியை ஊட்டியும் வட இந்திய மாநிலங்களுக்கு மட்டும் கூடுதல் நிதியைப் பகிர்ந்தளித்தும் தொடர்ந்து வெற்றி பெற முடியும் என்ற நிலையை பாஜக உருவாக்கும். அவ்வாறான நிலை உருவானால் அது இந்தியக் கூட்டாட்சித் தத்துவத்திற்கு மிகப்பெரிய பேராபத்தாக முடியும் என்பதை கருத்தில் கொண்டு வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பாஜகவை தமிழ்நாட்டில் இருந்து மட்டுமல்ல இந்தியாவில் இருந்தே அப்புறப்படுத்துவோம் மாநில உரிமைகளைக் காப்போம்

## கும்பகோணத்தில் அண்ணா நினைவு நாள்

கும்பகோணம், பிப். 9 - பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் மாநகர தி.மு.க மற்றும் கும்பகோணம் கிழக்கு, மத்திய மற்றும் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தலைமையில், செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் தாராசுரம், மற்றும் கும்பகோணம் மகாமக குளம் அருகில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு அமைதி பேரணியாகச் சென்று மாலை அணிவித்து மரியாதை செய்தனர். ப.தமிழழகன், குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, டி.கணேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


உதகை அருகே கட்டட விபத்தில் உயிரிழந்த 6 பெண்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறி அரசின் சார்பில் தலா ரூபாய் 2 லட்சத்திற்கான காசோலைகளை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வழங்கினார்.

### உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

# ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு மேற்கொண்டார்!

உதகை, பிப். 9 - நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.3.03 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் புறநோயாளிகள் பிரிவு கட்டடத்தினை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் முன்னிலையில், அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு நேற்று (08-02-2024) குத்துவிளக்கேற்றி திறந்து வைத்து, பார்வையிட்டார்.

இவ்விழாவில், அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள், அனைத்து தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில் மருத்துவத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து சிறப்பான முறையில் மருத்துவத்துறையை வழிநடத்தி வருகிறார்கள். அந்த வகையில் மக்களைத் தேடி மருத்துவம், முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத்திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 மணி நேரம் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசால் சிறப்பாக செயல் படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இன்று கோத்தகிரி அரசு மருத்துவமனையில் சிறப்பு பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் ரூ.3.03 கோடி மதிப்பீட்டில், புதிதாக கட்டப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவு, அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் ஆண்கள், பெண்கள் புறநோயாளிகள் பிரிவு கொண்ட கட்டடம் கட்டப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் கோத்தகிரி மற்றும் அதன் சுற்றுபுற கிராமங்களில் வாழும் மக்களுக்கும், சுற்றுலா பயணிகளுக்கும் சிறந்த முறையில் 24 மணிநேரமும் சிகிச்சை அளித்திட இப்புதிய மருத்துவ கட்டடத்தின் மேல் தளத்தில் 10 படுக்கை வசதி கொண்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவும், அறுவை சிகிச்சை அரங்கமும் அமைக்கப்பட்டுள்ளது. அனைத்து நவீன மருத்துவ உபகரணங்களுடன் சிகிச்சை அளிக்க இக்கட்டடம் வடிவமைக்கப்பட்டுள்ளது. கீழ் தளத்தில் உள்ள புறநோயாளிகள் சிகிச்சை பிரிவில், ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக சிகிச்சை அறைகள் அமைக்கப்பட்டுள்ளன. மாற்றுத்திறனாளிகளும், முதியோர்களும், கர்ப்பிணி பெண்களும் சிரமம் இல்லாமல் சிகிச்சை பெற அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இம்மருத்துவமனை 66 படுக்கைகள்வ சதிகளுடன், 14 மருத்துவர்கள், 18 செவிலியர்கள் மற்றும் இதர பணியாளர்களை கொண்டு செயல்பட்டு வருகிறது. இதில் சி.டி.ஸ்கேன் மெசின், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மெசின், மல்டிபேரா மானிட்டர், இருதய துடிப்பு சீராக்கும் கருவி, ஆட்டோமெட்டிக் இரத்த பரிசோதனை கருவி போன்ற உயர்தர உபகரணங்கள், நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க பயன் படுத்தப்படுகின்றன.

மேலும், இந்த மருத்துவமனையில், பொது மருத்துவப் பிரிவு, பொது அறுவை சிகிச்சை பிரிவு, குழந்தைகள் சிகிச்சை பிரிவு, மகப்பேறு பிரிவு மற்றும் எலும்பு முறிவு சிகிச்சைப் பிரிவுகளின்கீழ் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. 12 மாதங்களுக்கு முன்பு இம்மருத்துவமனை கட்டுமான பணிகள் தொடங்கப்பட்டு, தரமாக கட்டப்பட்டு, பணிகள் நிறைவு பெற்று, இன்று பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய

4 ஏக்கர் நிலப்பரப்பில் இம்மருத்துவமனை அமைந்துள்ளது. இதன்மூலம் எதிர் காலத்தில் மருத்துவமனையின் பல உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கட்டுமான பணிகளும் மேற்கொள்ள ஏதுவாக அமையும். அதே போல, கோத்தகிரி மருத்துவமனையில் டயாலிசிஸ் பிரிவு வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இதனை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

தமிழ்நாட்டில் 3 கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள்

90 சதவீதத்தினர், 2 கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்கள்

95 சதவீதத்தினர் 3 கொரோனா தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்கள்

98 சதவீதத்தினராக உள்ளனர். இந்தியாவிலேயே மலை மாவட்டங்களில் நீலகிரி மாவட்டத்தில்தான் 100 சதவீதம் கொரோனா தடுப்பூசி பொதுமக்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கூடலூர் பகுதியில் ரூ.31 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, அதற்காக அடிக்கல் நாட்டப்பட்டு, தற்போது கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது. அதேபோல், நீலகிரி மாவட்ட மக்கள் பிற மாவட்டங்களான கோவை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சென்று சிகிச்சை மேற்கொள்வதை தவிர்க்கும் வகையில் உதகையிலேயே 600 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

நீலகிரி மாவட்டத்திலுள்ள 6 தாலுக்காக்களில் உள்ள அரசு மருத்துவமனைகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், நீலகிரி மாவட்டத்திற்கு புதிய 3 நகர்புற நலவாழ்வு மையங்கள் தோற்றுவிக்கப்படும் என அறிவித்ததன் அடிப்படையில் கூடலூர், குன்னூர் மற்றும் உதகை ஆகிய நகராட்சிகளில் தலா 1 நகர்புற நலவாழ்வு மையங்கள் ஒதுக்கப்பட்டு, தற்போது இரண்டு நகர்புற நலவாழ்வு மையங்களின் கட்டுமான பணிகள் முடிவடைந்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

அதேபோல், கடநாடு பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும், குன்னூர் உமரிகாட்டேஜ் காலேஜ் பகுதியில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையமும் கட்டுவதற்கான பணிகள் நடைபெற்று வருகிறது. விரைவில் இதனையும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. எனவே, நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் அரசு மருத்துவமனையில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவத்துறை மற்றும் கல்வித்துறை ஆகிய இரு துறைகளும் தனது இரண்டு கண்களாக பார்த்து, அதிகபடியாக நிதி ஒதுக்கீடு செய்து, பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் திட்டங்களை அறிவித்து, மேம்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், நீலகிரி மாவட்டத்தில் மருத்துவ வசதிகளை நாடி பெரும்பாலான மக்கள் உயர்தர மருத்துவ சிகிச்சைகளுக்கு அருகிலுள்ள கோயமுத்தூர் மாவட்ட மருத்துவமனைகளுக்கே சென்று, சிகிச்சை மேற்கொண்டு வருகிறார்கள். இதனை கருத்திற்கொண்டு, உதகை, கோத்தகிரி, குன்னூர் மற்றும் கூடலூர் ஆகிய பகுதிகளிலுள்ள அரசு மருத்துவமனைகளை அதிகபடியாக நிதி ஒதுக்கீடு செய்து நவீன கருவிகள் கொண்டு உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று கோத்தகிரி பகுதியில் கட்டப்பட்ட விபத்து மற்றும் அவசர சிகிச்சை, அறுவை சிகிச்சை அரங்கம் மற்றும் புறநோயாளிகள் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்த வசதிகளை நோயாளிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இவ்விழாவில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மாவட்ட ஆட்சித்தலைவர் மு.அருணா, சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்ட இயக்குநர் கௌசிக், மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் துறை இயக்குநர் மரு.இளங்கோ மகேஷ்வரன், மாவட்ட ஊராட்சித்தலைவர் பொன்தோஸ், இணை இயக்குநர் மருத்துவ நலப்பணிகள் மரு.பழனிசாமி, துணை இயக்குநர் (சுகாதார பணிகள்) மரு. பாலுசாமி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் திரு. பூசணகுமார், பொதுப்பணித் துறை கண்காணிப்பு பொறியாளர் சத்தியவாகீஸ்வரன் (கோவை மண்டலம்), செயற்பொறியாளர் தவமணி, உதவி செயற்பொறியாளர்கள் மாணிக்கவேல் (கட்டடம் மற்றும் பராமரிப்பு உபகோட்டம்), கிரண்குமார் (மின் பிரிவு), உதவிப் பொறியாளர் சம்பத் குமார், கோத்தகிரி ஊராட்சி ஒன்றியத்தலைவர் ராம்குமார், கோத்தகிரி வட்டாட்சியர் கோமதி, கோத்தகிரி பேரூராட்சித்தலைவர் திருமதி.ஜெயகுமாரி, துணைத்தலைவர் உமாநாத் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கடலூர் மேற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் ஆர்.வி.ராம்சிங் மணவிழா!

## அமைச்சர் சி.வெ.கணேசன் நடத்தி வைக்கிறார் - கழக முன்னணியினர் வாழ்த்து!

*கடலூர் பிப்ரவரி - 9*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் ஆசியுடன் கழகத் தலைவர் தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்லாசியுடன் கடலூர் மாவட்டம் விருத்தாசலம் வட்டம் தெற்கு பெரியார் நகர் நினைவில் வாழும் ஆர். விவேகானந்தன் நலமுடன் பவானி ஆகியோரின் மகனும், மாவட்ட துணை அமைப்பாளருமான இன்ஜினியர் ஆர்.வி.ராம்சிங் கடலூர் மாவட்டம் நெய்வேலி வட்டம் ஆர்ச் கேட் ஆர். நடராஜன் ஜெகஜோதி ஆகியோரின் மகள் என்.அக்சயா (எ) அமுதா ஆகியோரின் திருமணம் (11.02.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணிக்கு மேல் 9: மணிக்குள் விருத்தாசலம் ஆனந்தா திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.*

*திருமணத்தை கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையேற்று நடத்தி வைக்கிறார். நகர கழக செயலாளர் தண்டபாணி வரவேற்புரையாற்றுகிறார்.*



*சட்டமன்ற உறுப்பினர்கள் சபா. இராசேந்திரன், தி.வேல்முருகன், ஏ.ஜெ. மணிகண்ணன், எம்.ஆர். ராதா கிருஷ்ணன், டி. ஆர். வி.ரமேஷ் எம்.பி., மாநில பொறியாளர் அணி தலைவர் துரை.கி. சரவணன், கே. எஸ். கருணா, மாவட்ட அவைத்தலைவர் டாக்டர். நந்த கோபாலகிருஷ்ணன், பி.வி.பி. முத்துக்குமார், பாவாடை கோவிந்தசாமி, சி.வெ.இமயம், கனக. கோவிந்தசாமி, டாக்டர்.சங்கவி, முருகதாஸ், தி. வேல்முருகன், எம்.எஸ். கணேஷ்குமார், கோட்டேரி சுரேஷ், ராணி தண்டபாணி, எம். அகர்சந்த், நாகூர்கனி எம். சுரேஷ்சந்த், ஆர். எஸ்.எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், ஜி. சதீஷ்குமார், பொன்.கணேஷ், அரங்க. பாலகிருஷ்ணன் , விஜய், அபிதா குமார், சி.வெ.க. வெங்கடேசன் ஆகியோர் முன்னிலை வைக்கின்றனர்.*

*நகர மன்ற தலைவர் கே.ராஜேந்திரன், , ஜி. தண்டபாணி, வி.கே. வெங்கட்ராமன், எஸ்.ராஜ வன்னியன், பட்டூர்.அமிர்தலிங்கம், பா.செங்குட்டுவன், வி.பி.பி. பரமகுரு, அடரி. சின்னசாமி, சிவ. தியாகராஜன், பி. பக்கிரிசாமி, ப. மணிவண்ணன், சபா. பாலமுருகன், ஏ.குணசேகரன், முடப்பள்ளி ஆசைத்தம்பி, எஸ். ராமு செந்தமிழ் செல்வி, கருப்பசாமி பொ .புகழேந்தி, என். பாரி, என். பலராமன், ஆர். இராதாகிருஷ்ணன், க. இராஜேந்திரன், கே.அறிவழகன், சி.செல்வம், எம். குமரவேல், சுந்தர வடிவேல், ஜெயமூர்த்தி, சுகுணாசங்கர், வெண்ணிலா, கோதண்டம், மலர்மூர்த்தி அறிவுடை நம்பி, குரு.சரஸ்வதி, இரா. செங்குட்டுவன், கர்ணன், எம்.கே. அருள்குமார், பாரி. இப்ராகிம இரா. சுப்பிரமணியன், எஸ்.நம்பி ராஜன் , வி.ஆர். மணிகண்டன், சந்தானலட்சுமி, சுந்தரமூர்த்தி, தர்ம.மணிவேல், பி.எஸ்.நடராஜன், வை. தட்சிணாமூர்த்தி, பட்டி. கருணாநிதி, ஜி. எஸ்.ஆனந்தன், பட்டி. வசந்தகுமார், கே. செந்தில்குமார், டி.எஸ்.சரவணன், ஆர்.எஸ். மணிகண்டராஜன், இரா. ராஜேந்திரன், சன்.அன்பழகன், பி. பாண்டுரங்கன், பிரதீப், எஸ் ஞானசேகர், துரைவாசுதேவன், ஆர்.மூர்த்தி, ஆர்.குமார், கே. எஸ்.ரவி, ஜெ. மோகன், தளபதி ஆர்.குமார், மணிவண்ணன், கார்த்திகேயன், பெரிய.செந்தில், வி.ரமேஷ்,*

*ஆட்டோ பாண்டியன், தங்க. அன்பழகன், அன்சார் அலி, தளபதி கா. கிருஷ்ணமூர்த்தி, கே. வெங்கடேசன், டி. முத்துக்குமார், எஸ்.சுந்தரி, என். ஜெயலக்ஷ்மி, உஷாபாலு ஷகிலாபாலு தீபாமாரி முத்து, அருள்மணி, பி. வசந்தி, ராஜாத்தி, எம். அறிவழகி, கரிமுனிஷா, ராஜ்குமார், எச். கருணாநிதி, கே.ரவிச் சந்திரன், கே. இளங்கோவன், மெக்கானிக், சரவணன் எஸ். ராஜேஷ் தங்க.நாராயணசாமி த பிரபா கரன், எஸ். துரைராஜ் பூதாமூர் முத்து டைலர் பி.சிவா சீனிவாசகாந்தி எஸ்.மதியழகன் ஆர்.கே.குமார் செந்தில் குமார் ஜி.கதிர்காமன் சேகர் எஸ். அரங்கநாதன் சசிகுமார் நல்லுசாமி சேதுராமன் ஏ.மதனகுரு சாமிநாதன் ஜி. கே.பிரபு ஏ.ஆர். கதிரவன் அறிவழகன் திராவிடசெல்வி கனக. செந்தில்நாதன் பொன். சிவகுமார் எஸ். வெங்கடேசன் கேப்டன் காமராஜ் ஜி.எஸ்.சுரேஷ் கே. கொளஞ்சியப்பன் மற்றும் பலர் வாழ்த்துகின்றனர்.*

*எம்.ஜெ.எம். ஜோசப் சி.வி ரூபன் கிருஷ்ணராஜ் கா.செல்வமணி கே.சக்தி வேல் பி முத்தழகன் கே துரையரசன் கே மணிகண்டன் ஆர் பாலகுமாரன் லோகு ஆகியோர் நன்றி உரை ஆற்றுகின்றனர்.*


திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட சின்ன கடம்பூர் உள்ளிட்ட பல்வேறு கிளைகளில் கிளைக் கழக கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளரும் திருத்தணி சட்டமன்ற தொகுதி உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் பங்கேற்று வருகின்ற நாடாளுமன்ற தேர்தலின் போது பணியாற்றுவது குறித்தும் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் மார்ச் 1ஆம் தேதி அன்று கொண்டாடுவது குறித்தும் பல்வேறு கழகப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கி அப்பகுதியில் உள்ள பொது மக்களின் குறைகளை கேட்டறிந்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் ஆர்த்தி ரவி உள்பட கிளை கழக செயலாளர் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

தேனி வடக்கு மாவட்டம், தேனி நகரத்தைச் சேர்ந்த எம்.வி.கே.ஜீவா கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Sus pension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18
நாள்- 8.2.2024

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க.


பல்லாவரம் மற்றும் அஸ்தினாபுரம் பகுதிகளில் உள்ள மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 2.10 கோடி மதிப்பீட்டில் புதிய பள்ளி வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி, மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை ஆகியோர் அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தனர், அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள், பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள், பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




காஞ்சிபுரத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசை கண்டித்து மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் தலைமை கழகம் அறிவிப்புக்கு இணங்க காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ கலந்துகொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார் உடன் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்ச்செல்வன், மேயர் திருமதி மகாலட்சுமி, தலைமை செயற்குழு உறுப்பினர் எம் எஸ் சுகுமார் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்




விருதுநகரில் ஒன்றிய மோடி அரசைக் கண்டித்து தேசம் தழுவிய ஆர்ப்பாட்டம் சி.பி.ஐ.எம். மாவட்டச் செயலாளர் கே.அர்ஜுனன் தலைமையில் நடைபெற்றது. இதில் ராமசாமி, சி.பி.ஐ. பொன்னு பாண்டி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பாலசுப்பிரமணியன் சி.பி.எம். நகரச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், நகர மன்றத் தலைவர் எஸ்.ஆர்.எஸ்.ஆர்.மாதவன், கழக பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், தொ.மு.ச. ராஜ செல்வம், தி.க.நல்லதம்பி, புகழேந்தி, நகர அவைத் தலைவர் காசிராஜன், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி எல்.திருமாறன், சி.பி.எம். தேனி வசந்தன், சி.பி.எம். முருகன், நேஷனல் ராமர், ஆர்.மரியராஜ் மற்றும் நிர்வாகிகள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

## நாகை - மயிலாடுதுறை மாவட்டங்களில்

# உவர்நீர் மீன் வளர்ப்பு திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் செ.இராமலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, பிப். 9-

நாகை - மயிலாடுதுறை மாவட்டங்களில் உவர்நீர் மீன் வளர்ப்புத் திட்டத்திற்கு நிதி அளிக்கப்பட்டுள்ளதா? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

மக்களவையில் மீன்வளம், கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத் துறை அமைச்சருக்கு மயிலாடுதுறை மக்களவை தொகுதி உறுப்பினர் எஸ். இராமலிங்கம் அவர்கள் பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், நிதி ஒதுக்கீடு பற்றி எழுப்பிய வினா வருமாறு:

(அ) பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) திட்டத்தின் கீழ், மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள மீன்/இறால் விவசாயிகளுக்கு, தேவை அடிப்படையிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல் மற்றும் உவர்நீர் மீன் வளர்ப்பு/உப்புநீர்/காரத்தன்மை நீருக்கான புதிய குளங்கள் கட்டுதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஒன்றிய அமைச்சகம் நிதி உதவி அளித்துள்ளதா? அப்படியானால், கடந்த ஐந்து ஆண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் அதன் விவரங்கள் மற்றும் இல்லையென்றால், அதற்கான காரணங்கள்;

(ஆ) பால்வள மேம்பாட்டுக்கான தேசியத் திட்டம்,



ராஷ்ட்ரிய கோகுல் மிஷன், பால் பதப்படுத்துதல் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா மற்றும் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி ஆகியவற்றின் கீழ் தமிழ்நாடு மாநிலத்திலிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் விவரங்கள்; மற்றும்

(இ) அரசாங்கத்திடம் இருந்து முதன்மை ஒப்புதல் பெற்ற முன்மொழிவுகளின் எண்ணிக்கை மற்றும் அதன் அடுத்தடுத்த முன்னேற்றங்கள் என்ன?

ஸ்ரீ பர்ஷோத்தம் ருபாலா, (மீன்வளத்துறை, கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர்) 06-02-24 அன்று கீழ்க்கண்ட பதிலை அளித்துள்ளார்

அது வருமாறு:-

(அ) இந்திய அரசின் மீன்வளத் துறையானது, "பிரதான் மந்திரி மத்ஸ்ய சம்பதா யோஜனா (PMMSY) என்ற முதன்மைத் திட்டத்தை, இதுவரை இல்லாத வகையில் 2020-21 நிதியாண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் (UTs) ரூ.2005 கோடி முதலீட்டில் செயல்படுத்தி வருகிறது. PMMSY இன் கீழ், தமிழ்நாடு மாநில அரசிடமிருந்து பெறப்பட்ட திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில், இந்திய அரசின் மீன்வளத் துறை, 2020-21 முதல் இன்று வரை மொத்தம் ரூ.934.23 கோடி செலவில் மத்தியப் பங்கான ரூ.376.91 கோடியுடன் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது., இதில் தேவை அடிப்படையிலான புதிய ஓட்டுடலி மீன் (Shell fish) மற்றும் துடுப்பு உவர் மீன்(Finfish) குஞ்சு பொரிப்பகங்கள், உவர் நீர் மீன் வளர்ப்புக்காக புதிய குளங்கள் அமைத்தல்., உவர் நீர் மீன் வளர்ப்பிற்கான உள்ளீடுகள், உவர் நீர்/உப்பு/காரப் பகுதிகளுக்கு உள்ளீடுகள் உட்பட உயிர்க்கூழ்மம் (பயோஃப்ளோக்) குளங்கள் அமைத்தல் போன்ற செயல்பாடுகளும் அடங்கும். தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளபடி மயிலாடுதுறை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தேவை அடிப்படையிலான உவர் நீர் குஞ்சு பொரிப்பகங்களை நிறுவுதல் மற்றும் உவர் நீர் மீன் வளர்ப்பு! உவர்நீர்/ காரத்தன்மைக்கான புதிய குளங்கள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் விவரங்கள் இணைப்பு இல் கொடுக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ): இந்திய அரசாங்கத்தின் கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத் துறை (DAHD), உள்நாட்டுப் பசு இனங்களின் மேம்பாடு மற்றும் பாதுகாப்பு, மாடுகளின் எண்ணிக்கையை மரபணு ரீதியாக மேம்படுத்துதல் மற்றும் பாலை மேம்படுத்துதல் ஆகியவற்றை மையமாகக் கொண்டு 2014 முதல் ராஷ்ட்ரிய கோகுல் மிஷனை செயல்படுத்தி வருகிறது. மாடுகளின் உற்பத்தி மற்றும் பால் உற்பத்தித்திறன் அதன் மூலம் தமிழ்நாடு உட்பட நாட்டில் உள்ள அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு பால் உற்பத்தியை பெருக்கி அதிக லாபம் ஈட்ட வழி வகுக்கிறது. ராஷ்ட்ரிய கோகுல் மிஷனின் கீழ் மாநிலத்திலிருந்து DAHD ஆல் முன்மொழிவு பெறப்பட்ட மொத்தம் ரூ.12992.29 லட்சம் செலவில் 12 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் இணைப்புII இல் கொடுக்கப்பட்டுள்ளன.

DAHD ஆல் செயல்படுத்தப்படும் "பால்வள மேம்பாட்டுக்கான தேசிய திட்டம் (NPDD)" திட்டத்தின் கீழ், 9 திட்டங்கள் தமிழகத்திற்கு பெறப்பட்டு, மொத்த திட்ட மதிப்பான ரூ.25922.50 லட்சத்தில் மத்திய அரசாங்கத்தின் ரூ.18210.30 லட்சம் பங்குடன் இதுவரை, ரூ. தமிழகத்திற்கு 13642.395 லட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது, அதில் ரூ.12024.193 லட்சம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் விவரங்கள் இணைப்புIII இல் கொடுக்கப்பட்டுள்ளன. DAHD ஆல் செயல்படுத்தப்பட்ட "பால் பதப்படுத்துதல் மற்றும் உள் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி" திட்டத்தின் கீழ், 30.11.2023 வரை, மொத்த திட்டச் செலவு ரூ. 285.82 கோடியில் (கடன் கூறு ரூ. 228.65 கோடி) உள்பட, 4 திட்டங்கள் தமிழ்நாட்டிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு அவர் பதிலளித்தார்.

## தி.மு.க. மகளிர் அணி

# புதுக்கோட்டை வடக்கு மாவட்ட துணைத் தலைவர் நியமனம்

### தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு

**புதுக்கோட்டை வடக்கு மாவட்டம்**

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மகளிர் அணி துணைத் தலைவராக **திருமதி கமலா செல்வம்** அவர்கள் நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 8.2.2024

ஜெ.ஹெலன்டேவிட்சன்,
செயலாளர்,
தி.மு.க. மகளிர் அணி



திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழக தோழர்கள் இல்லங்களில் கொடியேற்றம் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய திமுக சார்பில் கழக நிர்வாகிகள் இல்லத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ நேரில் சென்று கொடியேற்றினர். உடன் திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் எஸ்.மகாலிங்கம் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் களம்பாக்கம் எம்.பன்னீர்செல்வம், மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## எழும்பூர் சட்டமன்றத் தொகுதி

# சூளை பகுதி வழியாகச் செல்லும் பேருந்துகளை அதிகரித்திடுக!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., கோரிக்கை!

சென்னை,பிப்.9-

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சூளை பகுதி வழியாகச் சென்று வரும் மாநகரப் பேருந்து தடம் எண்கள் 34, 35, 7E ஆகியவற்றின் பயண எண்ணிக்கையை (trip) அதிகரிக்கவும்; சூளை பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பயனடையும் வகையில் 64K, 64D ஆகிய இரண்டு பேருந்துகளும் சைடன்ஹாம்ஸ் சாலை பெரியமேடு பேருந்து நிறுத்தத்திற்கும் புளியந்தோப்பு P1 காவல் நிலையத்திற்கும் இடையிலுள்ள பேருந்து நிறுத்தங்களில் நின்று செல்லவும்; நிறுத்தப்பட்டுவிட்ட பேருந்து தடம் எண்.4Dஐ மீண்டும் சூளை பகுதி வழியாக வள்ளலார் நகரிலிருந்து காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரி வரையிலும் இயக்கிடவும் கோரி தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் போக்குவரத்துக் கழக அமைச்சருக்கு கடிதங்கள் எழுதி, அவரிடம் அளித்திருக்கிறார்.

1. பேருந்து தடம் எண்.34 (திருவொற்றியூர் முகப்பேர்), 2. பேருந்து தடம் எண்.7E (பாரிமுனை முகப்பேர்), 3. பேருந்து தடம் எண்.35 (பாரிமுனை அயனாவரம்) ஆகிய மூன்று பேருந்துகளும் எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சூளை பகுதி வழியாக இயக்கப்பட்டாலும், இப்பேருந்துகள் காலையில் ஒரு முறை மற்றும் மாலையில் ஒரு முறை என்ற அளவில் இரண்டு முறை மட்டுமே வந்து செல்கின்றன. இதன் காரணமாக, சூளை மற்றும் அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த பொதுமக்கள் இத்தடப் பேருந்துகள் செல்லும் வழியிலுள்ள பகுதிகளுக்குச் சென்று திரும்பவுதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். எனவே, 34, 35, 7E ஆகிய மூன்று தடப் பேருந்துகளின் பயண எண்ணிக்கையை அதிகப்படுத்த ஆவன செய்யுமாறு கோரியும்;

பேருந்து தடம் எண் 64 K பாரிமுனையிலிருந்து பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக கண்ணதாசன் நகருக்கும்; பேருந்து தடம் எண்.64 D பாரிமுனையிலிருந்து பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக மாதவரத்திற்கும் சென்று திரும்பி வந்த நிலையில், பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருவதையொட்டி, தற்பொழுது இவ்விரு தடப் பேருந்துகளும் சூளை, சைடன்ஹாம்ஸ் சாலை வழியாகச் சென்று வருகின்றன.

எனினும், இவ்விரு தடப் பேருந்துகளும் சைடன் ஹாம்ஸ் சாலை பெரியமேடு பேருந்து நிறுத்தத்திற்குப் பிறகு, அதற்கு அடுத்துள்ள சிவசக்தி தியேட்டர், கண்ணப்பர் திடல், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் டிமலஸ் சாலையிலுள்ள P4 காவல் நிலையம் உள்ளிட்ட பேருந்து நிறுத்தங்களில் நிற்காமல், அவற்றையெல்லாம் தாண்டி P1 புளியந்தோப்பு காவல் நிலைய பேருந்து நிறுத்தத்தில் மட்டுமே நின்று செல்கின்றன. இதன் காரணமாக, எழும்பூர் தொகுதிக்குட்பட்ட சூளை மற்றும் அதன் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த பொது மக்கள் இவ்விரு பேருந்து சேவைகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே, சூளை பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் பயனடையும் வகையிலும், இத்தடம் வழியாகச் செல்லும் மற்ற பேருந்துகளில் கூட்ட நெரிசலைக் குறைக்க உதவிடும் வகையிலும் 64K மற்றும் 64D ஆகிய இரு தடப் பேருந்துகளையும் சிவசக்தி தியேட்டர், கண்ணப்பர் திடல், வட்டாட்சியர் அலுவலகம், டிமலஸ் சாலை P4 காவல் நிலையம் ஆகிய பேருந்து நிறுத்தங்களில் இரு வழி தடத்திலும் நின்று செல்ல ஆவன செய்யக் கோரியும்;

பேருந்து தடம் எண். 4D, வள்ளலார் நகரிலிருந்து காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி வரையிலும் பேசின் பாலம் சாலை, நடராஜ் தியேட்டர், சூளை வழியாக இயக்கப்பட்டு வந்த நிலையில், இப்பேருந்து சேவை தற்பொழுது நிறுத்தப்பட்டு விட்டது. இதன் காரணமாக, மேற்கண்ட பகுதியைச் சேர்ந்த பொதுமக்களும் கல்லூரி மாணவிகளும் எழும்பூர் ரயில் நிலையம், எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை, எழும்பூர் மகளிர் நல மருத்துவமனை, எத்திராஜ் கல்லூரி, காயிதே மில்லத் கல்லூரி ஆகிய இடங்களுக்குச் சென்று திரும்பவதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கிவருகின்றனர். இந்நிலையில் இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் மற்றும் கல்லூரி மாணவிகளின் நலன் கருதி நிறுத்தப்பட்ட இப்பேருந்து சேவையை (4D) மீண்டும் பேசின் பாலம் சாலை, நடராஜ் தியேட்டர், சூளை வழியாக இயக்கிடக் கோரியும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சருக்கு மூன்று தனித்தனியான கடிதங்களை எழுதி, அவரிடம் அளித்திருப்பதாக இ.பரந்தாமன், எம்.எல்.ஏ. கூறினார்.

## மண்டலத் தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை பங்கேற்பு! பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில்

# ரூ.2 கோடியில் புதிய பள்ளி வகுப்பறை கட்டடங்கள் கட்டும் பணிகள்!

## இ. கருணாநிதி எம்.எல்.ஏ. - மேயர் க. வசந்தகுமாரி தொடங்கி வைத்தனர்!

சென்னை,பிப்.9-

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 மற்றும் 3 பகுதிகளில் உள்ள பொன்னியம்மன் கோயில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப்பள்ளி ஆகிய தனியார் பள்ளிகளுக்கு நிகரான பள்ளிகளாக இப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

இப்பள்ளிகளில் அதிகமான அளவில் மாணவர்கள் சேர்க்க விருப்பம் தெரிவித்து வருகின்றனர் மாணவ மாணவிகளை சேர்க்க போதிய வகுப்பறைகள் இல்லாததால் மாணவர் சேர்க்கை மேற்கொள்ள முடியாமல் நீடித்து வந்தன.

இதைத்தொடர்ந்து பொது மக்களிடம் இருந்தும் பள்ளி ஆசிரியர்கள் இருந்தும் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினருக்கு தொடர்ந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் இருந்தன. இதைத் தொடர்ந்து பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இரண்டு பள்ளிகளுக்கும் புதிய கட்டடங்கள் வகுப்பறை கட்டிடம் கட்ட வேண்டும் என்று தொடர்ந்து எடுத்த முயற்சியில் பயனாக தற்போது பொன்னியம்மன் கோயில் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ஏற்கனவே 70 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் சட்டமன்ற உறுப்பினரால் அடிக்கல் நாட்டப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

அதைத்தொடர்ந்து இன்று மண்டல தலைவர் இ. ஜோசப் அண்ணாதுரை தலைமையில் ரூபாய் 70 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்களுக்கு அடிக்கல் நாட்டு பணிகள் துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர்இ. கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி ஆகியோர் கலந்து கொண்டு பணிகளை தொடங்கி வைத்தனர்.

அதைத்தொடர்ந்து அஸ்தினாபுரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியில் ரூபாய் 70 லட்சம் மதிப்பீட்டில் புதிய வகுப்பறை கட்டிடங்கள் கட்டும் பணிகளை பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி தாம்பரம் மாநகராட்சி மேயர் க. வசந்தகுமாரி ஆகியோர் பணிகளை தொடங்கி வைத்து அதை தொடர்ந்து பள்ளியின் ஆண்டு விழா நிகழ்ச்சியிலும் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ்கள் பரிசுகள் வழங்கி மாணவ மாணவிகளை கௌரவித்து நிகழ்ச்சி சிறப்பித்தார்கள்.

அப்பொழுது பகுதி கழகச் செயலாளர் ஏ. கே. கருணாகரன், பள்ளியின் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் மாமன்ற உறுப்பினர்கள் சரண்யா மதுரை வீரன் சரஸ்வதி சந்திரசேகர் பள்ளியின் மேலாண்மை குழு உறுப்பினர்கள் பெற்றோர் ஆசிரியர் கழக நிர்வாகிகள் மாநகராட்சி செயற்பொறியாளர் உதவி பொறியாளர்கள் பெற்றோர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## வேளச்சேரி 174வது வட்டம்


# பி.சதீஷ்குமார் - பி.மங்கள லட்சுமி மண விழா!

## கழக முன்னணியினர் வாழ்த்து!

சென்னை, பிப்.9

வேளச்சேரி 174வது வட்ட இளைஞர் அணித் தோழரும், அடையார் இ.பாபு - பி.கல்பனா ஆகியோரின் புதல்வருமான பி.பலராமன் என்கிற சதீஷ் குமார் - பி.மங்கள லட்சுமி ஆகியோரின் மண விழா 11.2.2024 - ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 7 மணிக்கு கோட்டூர் ஏரிக்கரைச் சாலையில் அமைந்துள்ள பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவில் திருமண மண்டபத்தில் நடைபெறுகின்றது.

முன்னதாக 10.2.2024 சனிக்கிழமை அன்று மாலை



6.30 மணிக்கு டி.ஜெ.மியூசிக் குழுவினரின் இசை நிகழ்ச்சியுடன் மணவிழா வரவேற்பு நிகழ்ச்சி நடைபெறுகின்றது.

இதில் கழக முன்னணியினர், தோழர்கள் கலந்துகொண்டு மண மக்களை வாழ்த்துகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.சு. தங்கராசன்

### பிப்ரவரி 9 (1985)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கி, உசிலம்பட்டி வட்டக் கழகச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும், நீண்டகாலம் தொடர்ந்து சேடபட்டி ஒன்றியக் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி துணைத் தலைவர், உசிலம்பட்டி நிலவள வங்கி தலைவர் பொறுப்பு வகித்தவர்.

இந்தித் திணிப்பு, சட்டநகல் எரிப்பு, மிசா எதிர்ப்பு, கருப்புக் கொடி உள்ளிட்ட கழகம் அறிவித்த பெரும்பாலான போராட்டங்களில் கலந்துகொண்டு பல முறை சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**




கடலூரில்
கலைஞர்
பண்பாட்டுப்
பாசறை விழா




# நூற்றாண்டின் தலைவருக்கு நூற்றாண்டு விழா

09.02.2024 – வெள்ளிக்கிழமை
புனித வளனார் மேல்நிலைப் பள்ளி அரங்கம், கடலூர்.

சிறப்பு மலரை வெளியிட்டு விழாப் பேருரை
**M.R.K.பன்னீர்செல்வம்** B.Sc., BL.,
மாண்புமிகு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர்

கண்காட்சியினை திறந்து வைத்து சிறப்புரை
**கா.இராமச்சந்திரன்**
மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர்

கலைநிகழ்ச்சிகளை தொடங்கி வைத்து சிறப்புரை
**பி.கே.சேகர்பாபு**
மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்


மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி சிறப்புரை
**சி.வெ.கணேசன்**
மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும்
திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர்

என்றும் அன்புடன்
## கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

---



நாள் : 09.02.2024 வெள்ளிக்கிழமை
நேரம் : மாலை 6:00 மணியளவில்
இடம் : சுகுமாரி திருமண மண்டபம்
காஞ்சிபுரம்.






அனைவரையும் வருக ! வருக !!
என வரவேற்கும்...
வழக்கறிஞர் **சி.வி.எம்.பி.எழிலரசன்** B.E.,B.L., MLA
செயலாளர், தி.மு.க. மாணவர் அணி
காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர்

**ப.திருமாவேலன் எழுதிய**

# வைக்கம் வீரரும் ஜெயமோகனின் கயமையும்

நூல் வெளியீட்டு அறிமுக விழா

தலைமை :
திராவிட ஆழ்வார்
**எஸ்.ஜெகத்ரட்சகன்** எம்.பி. அவர்கள்
மேனாள் ஒன்றிய அமைச்சர்

நூல் வெளியிடுதல் :
மாண்புமிகு
**எ.வ.வேலு** அவர்கள்
பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்

பெற்றுக் கொள்ளுதல் :
மாண்புமிகு
**தங்கம் தென்னரசு** அவர்கள்
நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுத் துறை அமைச்சர்

முன்னிலை :
மாண்புமிகு
**தா.மோ.அன்பரசன்** அவர்கள்
ஊரக தொழிற்துறை அமைச்சர்
காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க செயலாளர்

திரு. **க.சுந்தர்** எம்.எல்.ஏ.,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயலாளர்

திரு. **க.செல்வம்** எம்.பி.,
காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர்

# திராவிட சினிமா

## 44

**திராவிடக் கொள்கைகளை, சமதர்ம நோக்கங்களை, சமூகநீதிச் சிந்தனைகளைத் திரைத்துறை மூலம் மக்களிடம் கொண்டு சேர்த்தனர் நமது முன்னோடிகள். அந்த வகையில், திரைப்படம் என்கிற நவீன ஊடகத்தின் மூலம் அரசியல் மாற்றத்துக்கான திருப்புமுனைகளை உருவாக்கின, திராவிடம் பேசிய திரைப்படங்கள். அந்த வரலாற்றை மீண்டும் வாசிக்கத் தருகிறது திராவிட சினிமா.**





# திராவிட அரசியலும் எழுபதுகளின் தமிழ்த் திரைப்படங்களும்!

■ வீ.மா.ச.சுபகுணராஜன்

*1967-ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா தலைமையிலான தி.மு.க. அரசு அமையுமென்று அன்றைய காங்கிரஸ் கட்சியும், அதன் மாபெரும் தலைவர்களும் கனவில்கூட நினைக்கவில்லை என்பதே உண்மை. அண்ணா வரலாறு காணாத மாபெரும் கூட்டணியைக் கட்டியமைத்து, தேர்தலைச் சந்தித்தார். எனினும், தி.மு.க. மட்டுமே தனிப்பெரும்பான்மை பெறுமென, கூட்டணியில் இருந்த ராஜாஜி உள்ளிட்டவர்களும் எண்ணவில்லை.*

*தி.மு.க.வின் தனித்த பெரும்பான்மை இந்தியக் குடியரசையே அதிர வைத்த வெற்றி. ஆம், இந்திய அரசியல் வரலாற்றில் ஒரு மாநிலக் கட்சி, அதிலும் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் 1962-ஆம் ஆண்டில்தான் 'தனித் திராவிட நாடு' கோரிக்கையைக் கைவிட்ட கட்சி, அறுதிப் பெரும்பான்மை பெற்று ஆட்சியில் அமர்ந்தது அதுவே முதல்முறை. இன்னுமொரு கருத்தில் கொள்ளவேண்டிய வரலாற்றுத் தரவு, மாநிலக் கட்சி என்ற கட்டமைப்பை எந்தவித தனித்த மத அடையாளமும் சாராமல் உருவாக்கிக் கொண்ட கட்சி தி.மு.க மட்டுமே. காஷ்மீரிலும் பஞ்சாபிலும் மாநிலக் கட்சிகள் இருந்தன என்றாலும், அவை மத அடையாளத்தைக் கொண்டிருந்தன என்பதை மறுக்கவியலாது.*

*அதனால்தான் இந்திய தேசியவாதம் கொந்தளித்து, இழிவு பேசியது. தேசிய முதலாளிகளும், குறிப்பாக திரைத்துறையினரும் கடுமையான எதிர்வினையாற்றினர். எதிர்வினை என்பது அதன் வன்மத்தை வெளிப்படுத்தும் முறையான சொல் அல்ல. ஆம், தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட உடன், எதிர்ப்புகள் வலுவாக எதிர்த்தாக்குதல் நடந்தன. இதில் அனைத்துவிதமான தேசிய வாதங்களும் இணைந்து நின்றன.*

### தேசியத்தின் வன்மம் வேரறுப்பு

*ஆட்சிப் பொறுப்பு என்பது, அண்ணாவின் அறிவுறுத்தல் போல 'அரியணை சுகம் வழங்கும் பதவியல்ல. லட்சியங்களைக் கடமைகளை முன்னெடுப்பதற்கான வாய்ப்பு. ஆனால் ஆட்சியாளருக்கான பெருஞ்சுமை, தடுப்பாட்டம்'. ஆம், ஆட்சிப் பொறுப்பு, மறுநாளிலேயே வாக்குறுதி நிறைவேற்றத்தைக் கோரும் எதிர்க்கட்சியினருக்கு பொறுப்பாக பதிலளிக்கும் தார்மீகக் கடமை கொண்டது. திட்டச் செயல்பாடுகளையும், பதில்களையும் கையாளும் பணி சவாலானது.*

*அரிசி, படி பத்து ரூபாய்க்கு விற்பதை நியாயப்படுத்திய பெருந்தலைவர்கள், 'எங்கே ரூபாய்க்கு மூன்று படி' என மூன்றாவது நாளிலேயே மக்கள் தரப்புப் போராளிகள் ஆனார்கள். ஆட்சிப் பொறுப்பேற்ற குறுகிய காலத்திலேயே நேர்ந்த அண்ணாவின் அதிர்ச்சி மரணம், இங்கே பெரும் சரிவுக்கு வழிவகுக்க முடியாமல் தூணாக நின்றது, பெரியார் எனும் தகப்பன். கலைஞரை உறுதியாக நின்று முதல்வராக்கியதில் அவர் பங்கு பெரிது. கலைஞரது நுட்பமான அரசியல் அணுகுமுறை தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றியது.*

*1969 ஆம் ஆண்டு காங்கிரஸ் பெரும்பிளவில், தி.மு.க.வின் 25 நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையை ஈட்டியாகவும் கேடயமாகவும் கொண்டு இந்திரா அம்மையாருக்குத் துணை நின்று தேசியத்தின் வன்மத்தை சற்றேனும் முனை மழுங்கச் செய்தார் கலைஞர் எனும் மாபெரும் ஆட்சியாளர்.*

*ஆட்சியில் கவனம் செலுத்தி, வாக்குறுதிகளை நிறைவேற்ற, வெகுவான மக்கள் நலத்திட்டங்களைச் செயல்படுத்திய தி.மு.க.வால், திரைத்துறையில் பெருமளவில் கவனம் செலுத்த இயலவில்லை. ஏற்கெனவே கண்டது போல எம்.ஜி.ஆர். போன்றவர்கள் கொள்கை உறுதியற்ற தனிநபர் அரசியலை மிகத் தீவிரமாகத் திட்டமிட்டு முன்னெடுத்தனர். விளைவு, 1960 களின் தமிழ்த் திரைப்படங்கள் வெகுவேகமாகத் தரமும் நிறமும் குணமும் இழக்கத் தொடங்கின. குறிப்பாக, திராவிடச் சிந்தனைகளைச் சுமந்து சென்ற திரை வடிவம் ஒரு கட்டத்தில் பலமுனைத் தாக்குதலுக்கு ஆளானது.*

**அவரது திரைப்படங்களில் விலங்குகள் பகுத்தறியும் திறன் மிக்கவையாகவும், மனிதர்கள் பகுத்தறிவற்றவர்களாகவும் உலவியது பெரும் நகைமுரண் என்றே கருதலாம்.**

*பக்தியின் பெயரால், தமிழ்மொழியைக் கவர முனைந்ததோடு, பகுத்தறிவுச் சிந்தனைகளின் வேரறுக்கும் பணிக்கு பக்தியைப் பக்கத் துணை ஆக்கிக் கொண்டது தமிழ்த் திரைப்பட முதலாளிகள் அணி. போதாக்குறைக்கு, தரம் வீழ்ந்த திரைப்படங்களின் மீதான அதிருப்தி, இந்தித் திரைப்படங்களின் வருகைக்கு வழிவகுத்தது.*

### இந்திப் படங்களுக்கு இல்லாத தடை

*இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போரால் ஆட்சிமாற்றம் நிகழ்ந்த மாநிலத்தில் இந்தித் திரைப்படங்களின் ஆக்கிரமிப்பு மேலோங்கியது பெரும் முரண்தான். இந்த முரணை எப்படிப் புரிந்துகொள்வது என்பதில் இன்னும் தெளிவான, தீர்க்கமான ஆய்வுகளுக்கான தேவையுள்ளது. ஆனால், இப்போதைக்கு ஒரு சில பார்வைகள் உதவக்கூடும்.*

*மொழிப்போரில் மாணவர் முன்னெடுப்பு என்பது முழுமையாக திராவிடக் கருத்தியலை ஏற்றோரால் மட்டும் உந்தப்படவில்லை. அது ஒரு பல்முனைப் போராட்ட அரங்கு. திராவிடமும், தமிழ்ப்பற்றுக் கொண்ட தேசியமும் இணைந்து செயல்பட்ட களம். மொழிப்பற்றுக் கொண்ட தேசியவாத மனங்கள், ஒரு நிலையில் திராவிடத்துக்குத் துணை போய்விட்டதாகக் கருதப்பட்டது. எனவே மொழிப்பற்றாளர் தேசியவாதத் தோழமைகள், புதிய திராவிட அரசுக்கெதிரான காய் நகர்த்தத் தொடங்கின. தமிழ் மொழியுரிமைக் குரலைத் தணித்துக் கொண்டு தேசிய சங்கு ஊதின. விளைவு, மொழியுரிமைப் போரின் உரிமையை, திராவிடத்துக்கு மறுக்கும் முனைப்பில், இந்தித் திரைப்படங்களுக்குத் தடைபோட முனையவில்லை.*

*என்னதான் அதிராமல் சொல்ல நினைத்தாலும், இது எழுபதுகளிலும் தொடர்ந்ததற்குக் காரணம், ஏற்கெனவே கண்ட தமிழ்த் திரைப்படங்களின் தர வீழ்ச்சியும், எம்.ஜி.ஆர். - சிவாஜி எனும் இரண்டு முதிர் நாயகர்களின் திரைப்படங்களுமே எனக் கருதுகிறேன். 60 களின் தமிழ்த் திரைப்படங்களை முற்றாக ஆக்கிரமித்திருந்தனர் இவர்கள் இருவரும். ஆனால், எழுபதுகளில் இந்திப் படங்களின் ஆக்கிரமிப்பை எதிர்கொள்ள வியலாமல், இவர்கள் இருவரும் இந்தி மறு ஆக்கப் படங்களில் நடிக்கத் தொடங்கிய போது வீழ்ச்சி முழுமையுற்றது. ஐம்பதுகளிலும் அறுபதுகளிலும் தமிழ்த் திரைப்படங்கள் இந்தியில் மறு ஆக்கம் செய்யப்பட்ட நிலை மாறி தலைகீழ் ஆனது. ஆம், கோமாளிகளைப் போல இவர்கள் செய்த கோணங்கித்தனங்கள், இந்தித் திரைப்பட வணிகத்தைக் கிராமத்து 'டூரிங் டாக்கீஸ்' வரை அழைத்துச் சென்றதே பெரும் சோகம்.*

### பகுத்தறிவும் பக்திப் படமும்

*1960 கள் மற்றும் 70 களின் தமிழ் திரைப்படத் தரச் சரிவுக்கு மிக முக்கியப் பங்களிப்புச் செய்தது தமிழ் வணிகத் திரைப்பட முதலாளிகள் பலர். ஒருநாளில் லாபகரமான வியாபாரம் கருதி, திராவிட இயக்கத்தவர் திரைப்பங்களிப்புக்குச் சிவப்புக் கம்பளம் விரித்தவர்கள், இப்போது தீவிரமான பக்திப் பட வியாபாரத்தில் இறங்கினர். அதிலும் முன்னணிப் பங்கு, தேவர் பிலிம்ஸ் நிறுவனத்தையே சாருமெனக் கருதுகிறேன்.*

*80 கள் 90 கள் வரை தொடர்ந்தது இந்தச் சீரழிவுப் பணி. இத்தனைக்கும் நேரடியான அரசியல் சார்பற்ற முதலாளியாக வலம் வந்தவர், பகுத்தறிவு வாதத்துக்குப் பெரும் பகையணியாக இயங்கினார். அவரது திரைப்படங்களில் விலங்குகள் பகுத்தறியும் திறன் மிக்கவையாகவும், மனிதர்கள் பகுத்தறிவற்றவர்களாகவும் உலவியது பெரும் நகைமுரண் என்றே கருதலாம்.*

*ஆனால், 1970 ஆம் ஆண்டில் வெளிவந்த 'மாணவன்' திரைப்படம் நேரடியாக ஒரு தேசிய வாதப் பார்வை கொண்ட அரசியல் திரைப்படமாக இருந்தது பெரும் ஆச்சர்யம்தான். குறிப்பாக, 1965 - 1970 காலகட்டத்தை மையமாகக் கொண்ட திரைப்படம், மொழிப்போர் குறித்த எந்தத் தடயமுமில்லாமல் கவனமாக எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், அதே திரைப்படத்தில் அவர்களின் கவனத்தைத் துளைத்துக் கொண்டு காட்சிப்பட்டிருந்தது கழக, கலைஞர் ஆட்சியின் சாதனை இருப்பு.*

...படம் விரியும்

---

### ரத்தினங்களும் ரணங்களும்!

இந்தியாவில் பெரும்பான்மை இதர பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கி, அவர்களின் முன்னேற்றத்துக்கு சட்டப்பூர்வ உரிமை வழங்கியவர் வி.பி.சிங். அவருக்கு எதிராகவும், இட ஒதுக்கீட்டுக்கு எதிராகவும் அரசியல் செய்தது பாரதிய ஜனதா கட்சி. அப்போது அதன் முகமாக இருந்தவர் அத்வானி. சமீபத்தில், அவருக்கு 'பாரத ரத்னா' விருது அறிவித்திருக்கிறது ஒன்றிய பா.ஜ.க அரசு. இதன் மூலம், பா.ஜ.க எப்போதுமே பிற்படுத்தபட்ட மக்களுக்கு எதிரான கட்சி என்பது அம்பலமாகி யுள்ளது.

'அரசியலமைப்பின் தந்தை' அம்பேத்கருக்கு 'பாரத ரத்னா' கொடுத்து அதற்குப் பெருமையும் சேர்த்தவர் வி.பி.சிங். ஆனால், அவருக்கு அளிக்கப்படாத அந்த விருது, அத்வானிக்கு அளிக்கப் பட்டுள்ளது. அதே நேரத்தில், பா.ஜ.க.வின் குயுக்தி அரசியலாக, அத்வானிக்கு பாரத ரத்னா அறிவிப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னர், பீகாரைச் சேர்ந்த சோசலிஸ்ட் தலைவர் கர்பூரி தாக்கூருக்கு பாரத ரத்னா விருது அறிவிக்கப்பட்டது.

இந்தியா முழுமைக்கும் வி.பி. சிங் இட ஒதுக்கீடு வழங்கியதுபோல, பீகாரில் ஓ.பி.சி. பிரிவினருக்கு 26 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிய பெருமைக்குரியவர் கர்பூரி தாக்கூர். அதற்காக வி.பி.சிங்கைப் போல வலது சாரிகளால் கடும் நெருக்கடிகளுக்கு ஆளானவரும் கூட. அவருக்கு பாரத ரத்னா விருது வழங்கியதன் மூலம், அந்த மாநில முதலமைச்சர் நிதிஷ்குமாரை மீண்டும் தனது வலைக்குள் விழவைக்கச் செய் திருக்கிறது என விமர்சனம் செய்யப்படுகிறது. பா.ஜ.க.வுக்கு எல்லாமே அரசியல் கணக்குதான். அதுவும் கமண்டல அரசியல்!

---

### ஃப்ளாஷ்பேக்



### இலக்கியத்தைச் சந்தித்த இயற்பியல்!



ஜெயக்குமார்

1994-ஆம் ஆண்டு கழகம் சிறு நெருக்கடியைச் சந்தித்தது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு முழுக்க கழகத்தை வலுப்படுத்த, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பயணம் மேற்கொண்டார். 1995-ஆம் ஆண்டு கோவை மாவட்டம், பொங்கலூருக்கு வருகை தந்து, அன்றைய கோவை மாவட்டச் செயலாளர் பொங்கலூர் நா.பழனிசாமி அவர்கள் இல்லத்தில் தாங்கினார். அப்போது கொங்குநாடு கல்லூரியில் இளங்கலை இயற்பியல் படித்து வந்த நான், கழக மாணவர் அணியிலும் தீவிரமாக இயங்கி வந்தேன். அப்படியான தருணத்தில் நானும் என் நண்பர்கள் விஜயகுமார், அரங்கன் ஆகியோரும் தலைவர் கலைஞரை நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றோம். இன்றைக்கு இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளராக இதையெல்லாம் எண்ணிப் பார்த்து மகிழ்கிறேன்.

**-மு.ஜெயக்குமார், இளைஞர் அணி அமைப்பாளர், திருப்பூர் தெற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண்: 90033–24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

---

### கருவூலம்

### அண்ணா இறுதி நிகழ்ச்சி!


**1968-ஆம் ஆண்டு டிசம்பர் 20-ஆம் நாள் சென்னை சிறுவர் அரங்கத்தில் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயர் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. அந்த சிறுவர் அரங்கம்தான் இன்றைய கலைவாணர் அரங்கம். இந்த நிகழ்ச்சிதான் பேரறிஞர் இறுதியாக கலந்து கொண்ட நிகழ்ச்சி. "தமிழ்நாடு என்ற பெயரை எவர் நினைத்தாலும் மாற்ற முடியாது, அதுவரை நானே ஆள்கிறேன் என்று பொருள்" என்றார் அண்ணா.**

### பிழை திருத்தம்!

07.02.2024 புதன்கிழமை வெளியான 'திராவிடப் போராளிகள்' கட்டுரையில், இராணி அண்ணாதுரை குறித்த குறிப்புகளில், "1957 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் முதல்முறையாக தேர்தலில் போட்டியிட்டது. அப்போது முதல் இராணி அம்மையார் தன்னோடு மகளிர் மன்றத் தோழர்களை இணைத்துக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர்களுக்காகப் பிரச்சாரம் செய்தார். ஆயினும், அண்ணா அவர்கள் 1962 ஆம் ஆண்டு தேர்தலில் தோல்வி அடைந்தது இராணி அம்மையாரை மனம் வருந்தச் செய்தது" என்று வந்திருக்க வேண்டும். 1962 ஆம் ஆண்டு என்பது பிழையாக விடுபட்டுவிட்டதால், 'அண்ணா அவர்கள் 1957-ஆம் ஆண்டு தோல்வி அடைந்தார்' என்ற பொருளில் வெளியாகியுள்ளது.

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 383




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131